பக்கங்கள்: 28
விலை: 30

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 37 மார்கழி 18ஆம் நாள் வியாழக்கிழமை 03 ஜனவரி 2019 வள்ளுவர் ஆண்டு 2049

## இரு விபத்துகளில் இருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜன. 3
யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற இருவேறு விபத்துக்களில் இருவர் உயிரி >> 06

## ஆயுதங்களுடன் நபரொருவர் தப்பித்தாரென புதூர் பகுதியில் இராணுவம் தீவிர தேடுதல்!

### அச்சத்தில் பொதுமக்கள்



வவுனியா, ஜன. 3
வவுனியா வடக்கு புதூர் பகுதியில் ஆயுதங்களுடன் சென்ற நபரொருவர் தப்பித்துள்ளார் என்று தெரிவித்து இராணுவத்தினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இதனால் அந்தப் பகுதியில் பதற்றம் நிலவுகிறது.
சம்பவம் தொடர்பாக புளியங்குளம் பொலிஸார் தெரிவித்த தாவது:
புதூர் நாகதம்பிரான் ஆலயத்துக்குச் செல்லும் முதன்மை வீதியில் ஆயுதங்களுடன் நபரொருவர் நடமாடுகிறார் என்று எமக்கு நேற்று (நேற்றுமுன்தினம்) இர >> 25

## வெள்ள இழப்பீடுகளை வழங்குவதற்காக முல்லைக்கு இன்று வருகிறார் அமைச்சர்

யாழ்ப்பாணம், ஜன. 3
முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீட்டுத் தொகைக் >> 06

## அரசியல் பழிவாங்கலில் நான் ஈடுபடவேயில்லை!

### இப்படிச் சொல்கிறார் மைத்திரி

கொழும்பு, ஜன. 3
அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகளில் நான் ஈடுபடவில்லை. இனிமேல் ஈடுபடப் போவது >> 06

# தீவிரவாதப் போக்குடைய புலம்பெயர் சமூகம் சிறிது

### அத்தகையவர்களால் கூட்டமைப்பின் செயற்பாட்டில் செல்வாக்குச் செலுத்த முடியாது என்கின்றார் சம்பந்தன்

கொழும்பு, ஜனவரி 3
தீவிரவாதப் போக்குடைய புலம்பெயர் சமூகம் மிகச் சிறியது. அத்தகைய போக்குடையவர்களால் எமது தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்த முடியாது என்று தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன். >> 06



## புதிய அரசமைப்பு சாத்தியம் அற்றது

### ஜே.வி.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 3
நாடாளுமன்றத்தில் புதிய அரசமைப்பு நிறைவேற்றம் என்பது சாத்தியமற்றது என்று தெரிவித்தார் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திசாநாயக்க.
வடக்கிலும் தெற்கிலும் கடும்போக்கு வாதம் தீவிரம் கண்டு வருகிறது. மகிந்த மற்றும் விக்னேஸ்வரன் இருவரும் அடிப்படைவாதிகள் என்றும் அவர் சாடினார்.
(தொடர்புடைய செய்தி பக்கம்:2)

## மருந்துகளுக்கு நிர்ணய விலை

### இந்த வருடத்தில் கட்டாயம் வரும் சுகாதார அமைச்சர் ராஜித உறுதி

கொழும்பு, ஜன. 3
2019ஆம் ஆண்டில் பல மருந்து வகைகளின் விலைகளைக் குறைப்பது மற்றும் தனியார் மருத்துவ மனைகளில் மருந்துகளின் விற்பனை விலை தொடர்பில் நிர்ணயம் அல்லது கட்டுப்பாடு விதிப்பது >> 06

## குளிரான காலநிலை வடக்கில் தொடரும்!

### இலங்கை வளிமண்டலத் திணைக்களம் தகவல்

யாழ்ப்பாணம், ஜன. 3
வடக்குகிழக்கு மாகாணங்களில் இன்னும் சில நாள்களுக்கு குளிரான காலநிலை தொடரும் என்று இலங்கை வளிமண்டலத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
நாடு முழுவதும், குறிப்பாக வடக்கு, வடமத்திய, மத்திய, வடமேல் மற்றும் கிழக்கு மாகா >> 21

## கிராம எழுச்சித் திட்டத்தை முன்னெடுப்பதற்கு அனுமதி

### புதிய அமைச்சரவை வழங்கியது

கொழும்பு, ஜன. 3
கடந்த ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி அதிரடியாக இடம்பெற்ற ஆட்சிமாற்றத்தின் பின்னர் இடைநிறுத்தப்பட்ட கிராம எழுச்சி அபிவிருத்தித் திட்டத்தை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு புதிய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.
2019ஆம் ஆண்டுக்கான புதிய அரசின் முதலாவது அமைச்சரவைக் கூட்டம் நேற்று புதன்கிழமை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் அரச தலைவரின் செயலகத்தில் நடைபெற்றது.
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க உட்பட அமைச்சரவை அந்தஸ்துள்ள 30 அமைச்சர்கள் இதில் >> 06

கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய

## சந்தேகநபரை தன் வாகனத்தில் அழைத்துச் சென்ற சட்டத்தரணி

யாழ்ப்பாணம், ஜன. 3
கொள்ளைச் சம்பவம் ஒன்றில் தொடர்புடைய சந்தேகநபரை தனது வாகனத்தில் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றிலிருந்து அழைத்துச் சென்ற பெண் சட்டத்தர >> 06

## தமிழர்களினுடைய பெயர்களும் ஆளுநருக்கான பரிசீலனையில்

யாழ்ப்பாணம், ஜன. 3
வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநருக்காக பரிசீலனையில் உள்ள பெயர்ப் பட்டியலில் தமிழர்களின் பெயர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.
இலங்கையின் ஒன்பது மாகாணங்களின் ஆளுநர்களும் அரச தலைவர் மைத்திரிபாலவின் பணிப்புக்கு அமைவாகப் பதவி நீக்கப்பட்டுள்ளனர். புதிய ஆளுநர்களை நியமிக்கும் நடவடிக்கையில் அரச் தலைவர் மைத்திரிபால சிறிசேன தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.
வடக்கு மாகாணத்துக்கு புதிய ஆளுநருக்கு 4 பேரின் பெயர்கள் தற்போது பரிசீலனையில் உள்ளன என்று தெரியவருகின்றது. >> 06

## மாபிள் விளையாடியவர்களை கைது செய்தனர் பொலிஸார்

*சந்தேக நபர்களின் சட்டத்தரணி மன்றில் முன்னிலையாகி வாதம்*

யாழ்ப்பாணம், ஜன. 3
யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் அடாவடியில் ஈடுபட முயன்றனர் என்ற குற்றச்சாட் >> 22

## சந்திரிகாவுடன் இணைந்து கூட்டம் நடத்தினார் குரே!

### பதவி நீக்கத்துக்கு இதுதான் காரணமா?

யாழ்ப்பாணம், ஜன. 3
முன்னாள் அரச தலைவர் சந்திரிகாவுடன் இணைந்து வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே கடந்த வாரம் கொழும்பில் கூட்டம் நடத்தினார் எனவும், இதன் காரணமாகவே அவர் உட்பட 9 மாகாணங்களின் >> 23

# புதிய அரசமைப்பு சாத்தியமற்றது ஜே.வி.பியின் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 3

**நாடாளுமன்றத்தில் புதிய அரசமைப்பு நிறைவேற்றம் என்பது சாத்தியமற்றது என்று தெரிவித்தார் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திசாநாயக்க.**

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கிலும் தெற்கிலும் கடும்போக்குவாதம் தீவிரம் கண்டு வருகிறது. மகிந்த மற்றும் விக்னேஸ்வரன் இருவரும் அடிப்படைவாதிகள் நாடாளுமன்றத்தில் புதிய அரசமைப்பு நிறைவேற்றம் என்பது சாத்தியமற்ற விடயமாகும். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இடைக்கால அரசை ஏற்படுத்தாவிடின் நாட்டைப் பிளவுபடுத்தும் அரசமைப்பு கடந்த வருடத்தில் கூட்டமைப்பால் நிறைவேற்றப்பட்டி ருக்கும் என மகிந்த ராஜபக்ச உட்பட அவரது தரப்பினர் பொய்யான கருத்துக்களைத் தெரிவித்து மக்களை அர்சியல் ரீதியில் தவறாக வழிநடத்துகின்றார்கள்.

புதிய அரசமைப்பு உருவாக்கமானது ஒரு தரப்பினரை மாத்திரம் திருப்திப்படுத்துவதாக அமையாது. 1978ஆம் ஆண்டு அரசமைப்பில் பல குறைபாடுகள் காணப்படுகின்றது. அந்தக் குறைபாடுகள் அனைத்து அரசியல் நிறுவனங்களுடன் தொடர்புடைய செயற்பாடுகளிலும் தாக்கம் செலுத்துகின்றது. புதிய அரசமைப்பு நாட்டைப் பிளவுப்படுத்தும் என்று குறிப்பிடும் விடயம் முற்றிலும் பொய்யானது. மகிந்த ராஜபக்ச உட்பட அவரது தரப்பினர்கள் இனவாதத்தையும், அரசமைப்பு உருவாக்கத்தையும் மாத்திரமே வைத்துக் கொண்டு அரசியலில் செல்வாக்குச் செலுத்துகின்றனர்.

இனவாதத்தையும், அரசமைப்பு உருவாக்கத்தையும் இவர்கள் மறந்து விட்டால் நாட்டு மக்கள் இவர்களை மறந்துவிடுவார்கள். இந்த அளவிற்கு இன்று மகிந்த தரப்பினரது இனவாத அரசியல் நிலமை காணப்படுகின்றது. புதிய அரசமைப்பு தொடர்பில் அடிப்படைத் தெளிவும், அறிவும் இல்லாமலே எதிர்த்தரப்பினர் இன்று எதிரான கருத்துக்களைக் குறிப்பிடுகின்றார்கள்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்சவை தலைமை அமைச்சராக நியமிக்காமல் இருந்திருந்தால் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூட்டாட்சி அரசமைப்பினை உருவாக்கியிருப்பார். இதற்கு மக்கள்விடுதலைமுன்னணியினரும், அரசுடன் இணைந்து ஆதரவு வழங்கியிருப்பார்கள் என்று இன்று எம்மீது குற்றம் சுமத்துகின்றனர். அரசமைப்பு தொடர்பில் முதலில் மகிந்த தரப்பினருக்கு தெளிவுப்படுத்த வேண்டும்.

புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டுமாயின் எவ்வாறான வழிமுறைகள் பின்பற்ற வேண்டும் என்று தற்போதைய அரசமைப்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் நடைமுறை அரசமைப்பில் காணப்படுகின்ற குறைபாடு களை வைத்துக் கொண்டு புதிய அரசியலமைப்பு உருவாக்கலை நெறிப்படுத்த முடியாது. 1978ஆம் ஆண்டு அரசமைப்பு அப்போதைய அரசியல் தன்மைகளை மாத்திரமே உள்ளடக்கி உருவாக்கப்பட்டது. ஆனால் இன்று நிலமை முழுமையாக மாற்றமடைந்துள்ளது. நாட்டில் வாழும் அனைத்து மக்களையும் திருப்திப்படுத்தும் விதத்தில் அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும். இதற்காகவே அரசமைப்பு உருவாக்கும் முறைமை தொடர்பில் நாடாளுமன்ற அரசமைப்புப் பேரவை அமைக்கப்பட்டு தலைவராக சபாநாயகர் நியமிக்கப்பட்டார். அரசமைப்பு பேரவையில் மகிந்த தரப்பினரும் பங்குபற்றுகின்றார்கள். புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் இதுரையில் அரசு முன்னேற்றகரமான எந்த விடயங்களையும் முன்னெடுக்க வில்லை. ஓர் அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டுமாயின் அதற்குப் பல



வழிமுறைகளை முறையாகப் பின்பற்ற வேண்டும். அதற்கு தற்போதைய காலம் போதாது. இப்போதைய நிலையில் அதற்கான சாத்தியப்பாடும் கிடையாது என்பதை நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள்.

இனவாதத்தை தெற்கில் பரப்பி இனங்களுக்கிடையில் பிளவை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவே மகிந்த தரப்பினர் இன்று அரசமைப்பு உருவாக்கத்தை ஆயுதமாகப் பயன்படுத்துகின்றார்கள். அரசியலமைப்பு தொடர்பில் மக்கள் மத்தியில் பொய்யான கருத்துக்களை குறிப்பிட்டு ஓர் இனத்தின் மீது பிறிதொரு இனம் வெறுப்பை வெளிப்படுத்தும் விதமாகவே மக்களை அரசியல் ரீதியில் குழப்பி விடுகின்றனர்.

தெற்கில் எவ்வாறு மகிந்த ராஜபக்ச இனவாதம் பேசுகின்றாரோ அதே போலவே வடக்கில் முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இனவாதம் பேசி அரசியல் செய்கின்றார். வடக்கு மாகாணமே மிகவும் வறுமையான மாகாணமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை கள் பல காணப்படுகின்றன. அந்தப் பிரச்சினைகளுக்கு இவர்கள் ஒருபோதும் குரல் கொடுத்ததில்லை.

இவ்வருடம் முழுமையாக தேர்தல்கள் இடம்பெறும் நிலமையே காணப்படும். இந்தக் காலத்தில் மகிந்த தரப்பினர் நிச்சயம் இனவாதத்தையே தங்களின் பரப்புரைகளில் அதிகம் பயன்படுத்துவார்கள். அரசியல் நெருக்கடியின் பொழுது ஜனநாயகத்துக்காகப் போராடியவர்கள் இன்று அமைச்சு பதவிகளுக்காகப் போராடும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே இரண்டு தரப்பினரும் தங்களின் அரசியல் தேவைகளுக்காகவே ஜனநாயகத்தை கேடயமாக பயன்படுத்துகின்றார்கள். தேவை முடிந்த பிறகு இவர்களே னநாயகத்திற்கும், அரசமைப்புக்கும் முரணாகச் செயற்படுவார்கள்.

இந்த அரசில் ஒருபோதும் புதிய அரசமைப்பு உருவாக்கப்படாது. தற்போதைய உலக நடப்புக்கும் மக்களின் அரசியல் ரீதியிலான எதிர்பார்ப்புக்கும் நிச்சயம் அரசமைப்பு முற்றுமுழுதாக மாற்றியமைகக்கப்பட வேண்டும். இதற்கு மக்கள் விடுதலை முன்னணியினர் முழுமையான ஆதரவை வழங்குவார்கள்;. 20ஆவது திருத்தம் விரைவில் நிறைவேற்றப்படும். நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் முறைமையால் நாட்டுக்கு எவ்வித நன்மையும் ஏற்படாது. அரசியல் நெருக்கடியே ஏற்படும் என்பதை தற்போதைய அரச தலைவர் உறுதிப்படுத்தியுள்ளார். ஆகவே மக்கள் 20ஆவது திருத்தத்தை புறக்கணிக்கமாட்டார்கள் - என்றார்.

(ம-61)

## ரூபாவின் பெறுமதியை உயர்த்த நடவடிக்கை!

*தலைமை அமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு, ஜன. 3

தொடர்ந்து வீழ்ச்சியடைந்துவரும் ரூபாயின் பெறுமதியை உயர்த்துவதற்காக பொருளாதார மூலோபாயங்கள் தொடர்பில் தீவிர கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தாவது,

2018ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதமளவில் இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பு 8 பில்லியன் அமெரிக்க டொலர்கள்வரை காணப்பட்டது. இன்று அதில் பெரிய இழப்பு ஏற்பட்டுள்ளது. 51 நாள்கள் இடம்பெற்ற சூழ்ச்சி அரசில் இந்த நிதியில் பெருமளவு வெளிச்சென்றது. அதன்போது குழப்பமடைந்த சூழ்ச்சி அரசு ரூபாயின் பெறுமதியைத் தக்கவைத்துக்கொள்ள மென்மேலும் நிதியைச் செலவிட்டது. என்றாலும் ரூபாயின் பெறுமதி தொடர்ந்து வீழ்ச்சி கண்டது. அத்துடன் வெளிநாட்டு கையிருப்பும் குறைவடைந்தது. ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடைய வீழ்ச்சியடைய வாழ்க்கைச் செலவும் அதிகரிக்கும். ரூபாயை சக்திமயப்படுத்துவது தொடர்பில் நிதி அமைச்சர் மற்றும் அமைச்சரவையில் தீவிர கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன. உடனடியாக அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

தேவையென்றால் நட்பு நாடுகளுடன் கலந்துரையாடல்களை நடத்தி நிதியை பெற்றுக்கொள்ள முடியும். அந்த நடவடிக்கை மாத்திரம் போதுமானதல்ல. எமது ஏற்றுமதிகள் அதிகரிக்கப்படுவதற்கும், சுற்றுலாத்துறையை விரிவாக்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். சுற்றுலாத்துறையை விரிவாக்கும் பெரிய முயற்சிகள் எடுக்கப்பட்டு வந்திருந்த தருணத்திலேயே ஆட்சிக்கவிழ்ப்பு இடம்பெற்றது. எனவே, இதிலிருந்து மீண்டும் நாட்டை அபிவிருத்திக்கான பாதைக்கு ஈட்டுச்செல்வோம். நாம் ஆரம்பித்திருந்த அபிவிருத்தித் திட்டங்களின் பிரதிபயன்கள் கிடைக்கும் காலம் விரைவில் உருவாகும் என்றார். (ம-10)

# மன்னாரில் மீட்கப்பட்டுள்ள எலும்புக்கூடுகளை புளோரிடாவுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை!

மன்னார், ஜன. 3

மன்னார் மனித எலும்புக்கூடுகளின் மாதிரிகள் காபன் பரிசோதனைக்காக எதிர்வரும் 30ஆம் திகதி புளோரிடாவுக்கு அனுப்பி வைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அகழ்வுப் பணிக்கு பொறுப்பான சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

மன்னார் மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணிகள் கடந்த 10 நாள்களாக இடை நிறுத்தி வைக்கப்புட்டிருந்த நிலையில் நேற்றுப் புதன்கிழமை 122ஆவது நாளாக மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. இதையடுத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

**இன்றைய தினம் (நேற்று) மனித எலும்புக்கூடுகள் அகழ்வு செய்யப்படவில்லை. காலநிலை மாற்றத்தால் ஏற்பட்ட மழை காரணமாக அகழ்வு செய்யப்படும் பகுதி பாதிப்படைந்திருந்தது. இந்த நிலையில் அவற்றைச் சீர்செய்து அகழ்வு இடம்பெறும் பகுதியைச் சுற்றி மறைப்பு அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.**



நேற்றையதினம் மன்னார் நீதிவானுடன் கலந்துரையாடல் இடம்பெற்றது. குறிப்பாக அகழ்வு மேற்கொள்ளப்படும் பகுதிகளில் உள்ள வீதிகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. மேலும் பெற்றுக்கொள்ளப்பட்ட மனித எலும்புக்கூடுகளின் மாதிரிகள் காபன் பரிசோதனைக்காக புளோரிடாவுக்கு இந்த மாதம் மாதம் 30ஆம் திகதி அனுப்பி வைக்கப்படவுள்ளன. இதன்போது சாவு தொடர்பிலும் ஏனைய விடையங்கள் தொடர்பாகவும் அறிந்து கொள்ள முடியும் என மேலும் தெரிவித்தார்.

தற்போதுவரை 280 மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 274 மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டு மன்னார் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மீட்கப்பட்ட மனித எலும்புக்கூடுகளில் 20 **மனித எலும்புக்கூடுகள் சிறுவர்களுடையன என நம்பப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.** (ம-56)

# இ.போ.ச. இணைந்த தொழிற்சங்கம் என கூறிக்கொண்டு முன்னெடுத்த போராட்டம் ஒரு முறையற்ற விதமான போராட்டமே!

## முதன்மை பிராந்திய முகாமையாளர் சுட்டிக்காட்டல்

*யாழ்ப்பாணம், ஜன. 3*

*இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய காரியாலய நிர்வாகச் சீர்கேடு என்று தலைப்பிட்டு கோண்டாவில் சாலையில் கடந்த மாதம் 12ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட நிர்வாக முடக்கப்போராட்டம் ஒரு முறையற்ற போராட்டம் என்று இலங்கை போக்குவரத்துச்சபையின் வடக்குப் பிராந்திய முகாமையாளர் சுட்டிக் காட்டியுள்ளார்.*

இந்தப்போராட்டம்தொடர்பில்ஊடகங்களுக்குவழங்கியுள்ளதெளிவூட்டல்அறிக்கையிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

குறித்தபோராட்டம்தமதுகோரிக்கைகள் நியாயமானவை என்று தெரிவித்தோ அல்லதுதலைமைக்காரியாலயத்துக்கு முன்னறிவித்தல் ஏதும் வழங்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட போராட்டமோ அல்ல. எவ்வித முன்னறிவித்தலும் இல்லாமலேயேஇந்தப்போராட்டம்முன்னெடுக்கப்பட்டது.அத்துடன்இ.போ.சஇணைந்த சங்கம் என்று எந்தச் சங்கம் இன்னும் பதிவாகவில்லை. ஆக, பதிவெதுவும் இல்லாத முறையற்ற அமைப்பால்தான் இந்தப் போராட்டம் முன்னெடுக் கப்பட்டுள்ளது. அத்துடன் ஊழல் மோசடிகள் மற்றும் குளறுபடிகளில் ஈடுபட்டு ஒழுக்காற்றுநடவடிக்கைகளுக்குஉட்படுத்தப்பட்டவர்களால்தான் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது-என்றுள்ளது.

அத்துடன், ஆர்பாட்டக்காரர்களால்ஆர்ப்பாட்டத்தின் போது எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு குறித்த ஊடக அறிக்கையில் தனித்தனியாக பதில் வழங்கப்பட்டுள்ளது. இந்தப்பின்னணியில்முதன்மைப் பிராந்தியமுகாமையாளரைஇடமாற்றம் செய்ய வலியுறுத்தி நாளைய தினம் பணிப்புறக்கணிப்பு போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம)



அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை திட்டத்தின் தலைமை அலுவலகத்தைக் கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் திறந்து வைத்தார். இசுறுபாயவில் அமைந்துள்ள கல்வி அமைச்சின் கட்டடத்தொகுதியின் ஐந்தாம் மாடியில் இது திறந்து வைக்கப்பட்டது. (த)

## சபாநாயகருக்கு சு.கவினர் கடிதம் அனுப்பிய நிலையில்

# எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ஏற்பதற்குக் குமாரவெல்கம மறுப்பு!

## பல காரணங்களை அவர் விளக்குகிறார்

கொழும்பு, ஜன. 3

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவை எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்குமாறு சபாநாயகரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஒருபோதும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப்பொறுப்பேற்கமாட்டேன்என்று குமார வெல்கம தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் குமார வெல்கமவுக்குவழங்குமாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் சபாநாயகருக்கு விடுத்துள்ள கோரிக்கை தொடர்பில்வினவியபோது குமாரவெல்கம மேலும் தெரிவித்ததாவது:

பெரும் அரசியல் நெருக்கடிகளுக்கு மத்தியில் தற்போதே ஒரு தீர்வு கிடைக்கப் பெற்றுள்ளது. கடந்த காலத்தில் அரசதலைவரின் பிடிவாதம் மற்றும் முறையற்ற செயற்பாடுகள் அனைத்துக்கும் நீதித்துறை தகுந்த பதிலடி வழங்கியது. இது தற்போதைய அரசதலைவருக்கு மாத்திரம் கிடைக்கப்பெற்ற பாடம் மட்டுமல்ல, எதிர்காலத்தில் நிறைவேற்றுத் துறையைத் தவறாகப் பயன்படுத்த முற்படும் தலைவர்களுக்கும் ஒரு எடுத்துக்காட்டாக அமையும்.

**கூட்டமைப்பு பொறுப்புடன் செயற்படவில்லை**

கடந்த இரண்டு மாதங்கள் முழுவதும் நாட்டில்தலைமைஅமைச்சர்பதவிக்குப் போட்டி காணப்பட்டது. தற்போது எதிர்க்கட்சி தலைவர் பதவிக்குப்போட்டிநிலவுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றில் பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சியாகச்செயற்படவில்லைஎன்பதைப் பகிரங்கமாகக் குறிப்பிட வேண்டும். அவர்கள் ஒரு சில விடயங்களை மையப்படுத்தி அரசியலில்செல்வாக்குச் செலுத்தியதால் எதிர்க்கட்சித் தலைவர் பதவியின்பொறுப்புக்கள்அரசால்மட்டுப்படுத்தப்பட்டது.

இடைக்கால அரசு தோல்வியடைந்ததைத் தொடர்ந்து அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியினரிடம் ஆட்சியை ஒப்படைத்து தலைமைஅமைச்சராக ரணில் விக்கிரமசிங்கவை நியமித்தார்.

**ஆட்சிமாற்றத்தால் அவப் பெயரே!**

கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி அரசதலைவர் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியதால் எந்தவொரு பயனும் நாட்டுக்கு ஏற்படவில்லை. அவப்பெயரும், அரசியல் நெருக்கடிகளும் மாத்திரமே எஞ்சின.

**ரணில் பலமடைந்துவிட்டார்**

ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு அதிகாரம் ஒப்படைக்கப்பட்டதைத் தொடர்ந்து பொதுமக்கள்முன்னணியின்பலம்அதிகரிக்கப்பட்டுள்ளது. இன்று இவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்சவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்குமாறு குறிப்பிட்டுள்ளார்கள்.

மக்களின் வாக்குரிமையின் ஊடாகவே நாடாளுமன்றத்துக்குப் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படவேண்டும். அரசியல் தேவைகளுக்காகஆட்சியிலும், பதவியிலும்மாற்றங்களை ஏற்படுத்தினால்அது மாறுபட்டபிரச்சினைகளைஏற்படுத்தும். அவை ஜனநாயகக் கோட்பாட்டுக்கும், மக்களின்அரசியல்சிந்தனைகளுக்கும் புறம்பானதாக அமையும்.

முன்னைய கூட்டரசின் காலத்தில் பொதுத் தேர்தலின் ஊடாகவே தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின்தலைவர்இரா. சம்பந்தன் நாடாளுமன்றின் எதிர்க்கட்சித்தலைவராகநியமிக்கப்பட்டார். அந்த வேளையில் அவர்களுக்கு எதிர்க்கட்சி ஒன்றை அமைப்பதற்கான உறுப்பினர்கள் காணப்பட்டனர். அன்றிலிருந்து அவர் எதிர்க்கட்சித்தலைவராகச்செயற்படுகின்றார்.

**சபாநாயகரே அறிவிக்கவேண்டும்**

தற்போது பொதுமக்கள்முன்னணியின் உறுப்பினர்கள் மகிந்த ராஜபக்சவுக்கு எதிர்க்கட்சித்தலைவர்பதவியைவழங்க வேண்டும்என்றுகுறிப்பிடுகின்றார்கள். இடைப்பட்டகாலத்தில்யார்நாடாளுமன்றத்தின் முதன்மை எதிர்க்கட்சித் தலைவர் என்பதைச் சபாநாயகர் அரசமைப்பில்குறிப்பிட்டுள்ளவிடயங்களைமுறையாகப் பின்பற்றி ஒரு தீர்வை விரைவில் முன்வைக்க வேண்டும்.

**உள்நோக்கத்தை அடைய துணைபோக மாட்டேன்**

எதிர்க்கட்சித்தலைவர்பதவியைஎனக்கு வழங்குமாறு சிறிலங்காசுதந்திரக்கட்சியின் பாதுகாப்பு இயக்கம் குறிப்பிட்டுள்ளமையின் உள்நோக்கத்தை நிறைவேற்றஒருபோதும்நான் துணைபோகமாட்டேன். தற்போதுஎதிர்க்கட்சித்தலைவர்மகிந்தராஜபக்சவா, இரா.சம்பந்தனா என்ற சர்ச்சை காணப்படும் பட்சத்தில் மூன்றாவது தரப்பினராக நான் சென்று அரசியல் நெருக்கடியை ஒருபோதும் தீவிரப்படுத்தமாட்டேன். ஒருசிலரதுதவறான அரசியல் ஆலோசனைகளே இரண்டு தரப்பிலும் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கின்றது.

சம்பந்தனைத் தவிர்த்து எதிர்க்கட்சித் தலைவர்பதவியைப்பிறிதொருவருக்கு வழங்க சபாநாயகர் தீர்மானித்தால் அப்போது மகிந்த ராஜபக்சவுக்கு அந்தப் பதவியை வழங்குங்கள் என்று நான் மும்மொழிவேன். ஏனெனில்மகிந்தராஜபக்ச சிறந்த அரசியல் தலைவர். அவர் கடந்த காலங்களில்ஒருசிலரின்அரசியல்சூழ்ச்சிக்கு இணங்கியமையே பெரும்நெருக்கடியைஏற்படுத்தியது. எவ்வாறு இருப்பினும்ஒருபோதும்சிறிலங்காசுதந்திரக்கட்சியை விட்டும், மகிந்தராஜபக்சவை விட்டும் விலகமாட்டேன் -என்றார். (த.61)

# கல்வித் துறையின் நலனுக்காக கட்சி பேதங்கள் பார்க்காதீர்கள்!

## *கல்வி அமைச்சர் காரியவசம் கோரிக்கை*

கல்விக் கட்டமைப்பின் வளர்ச்சிக்காக, நலனுக்காகக் கட்சி பேதங்கள் பாராமல் ஒரே நோக்குடன் செயற்பட வேண்டும் என்று கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் அனைவரிடமும் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பு இருறுபாயவில் உள்ளகல்விஅமைச்சில் புதுவருடகடமைகளைஆரம்பிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம்முற்பகல்நடைபெற்றது. இந்தநிகழ்வில்உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்விஅமைச்சுக்கு உட்பட்ட அனைத்துத் துறைகளிலும் சேவையில் ஈடுபடும் அனைவருக்கும் அங்கு புத்தாண்டு வாழ்த்துக்களைத்தெரிவித்த அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

கல்வி அமைச்சின் ஊடாகச் சீரான பெறுபேறுகளைப் பெற்றுகொள்ள முடியுமான கொள்கைமற்றும்தீர்மானங்களை எடுக்க வேண்டும். அவற்றைக் குறிப்பிட்ட காலதவணைக்குள் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும்.

எதிர்வரும் காலங்களில் கல்விக் கட்டமைப்பின் நலனுக்காகஅனைவரும்திட்டமிட்டு ஒரே நோக்குடன் செயற்பட்டால் எதிர்பார்த்த இலக்குகளைத் துரிதமாக வெற்றி கொள்ள முடியும்.

தன்னுடைய தனிப்பட்ட கொள்கையை அன்றி அரச கொள்கையையே நான் அமைச்சராகக் கடைப்பிடிக்கின்றேன்.இதன்படிஅனைத்து அரச ஊழியர்களும் அரச கொள்கையைநடைமுறைக்குக் கொண்டு வருவதில் உடன்படுகின்றனர். கல்வித் துறையின்அபிவிருத்திக்காக தலைமைத்துவம்வழங்குவதுடன், இதன்போதுஎடுக்கும் கொள்கை ரீதியான தீர்மானங்களில் தவறுகள் இருந்தால்எந்தவொருஅதிகாரியும் தன்னுடன் பேசி அதனைத் தீர்த்துக் கொள்ள முடியும் என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

மக்கள் ஆணையின் ஊடாக ஆட்சிக்கு வரும் அரசின், நோக்கங்களை அரச ஊழியர்கள் செயற்படுத்த வேண்டும். செயற்படுத்தத் தவறின் அரச விரோதச் செயலாகவே அதனைக் கருதுவேன் என்றும் கல்வி அமைச்சர் தனது உரையில் தெரிவித்தார்.

நிகழ்வில்கல்வி அமைச்சின் செயலாளர் உட்பட அதிகாரிகள்,. அலுவலர்கள் கலந்து கொண்டனர் என்று கல்வி அமைச்சுவிடுத்தசெய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. (த)

# புதுவருட பணிகளுக்கு முன்னர் விகாரையில்மைத்திரிவழிபாடு

புதுவருடப்பணிகளை ஆரம்பிக்கும் முன்னர் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன, வரலாற்று முக்கியத்துவம் மிக்க சோமாவதி புண்ணிய பூமிக்கு நேற்றுமுன்தினம் சென்று சமய வழிபாடுகளில் ஈடுபட்டார்.

சோமாவதி ரஜமகா விகாரையின்விகாராதிபதிசங்கைக்குரிய பஹமுனே ஸ்ரீ சுமங்கல நாயக்க தேரரைச் சந்தித்து ஆசீர்வாதம்பெற்றுக்கொண்டார்.

பின்னர் 'எழுச்சிபெறும் பொலன்னறுவை'அபிவிருத்தித் திட்டத்தில் சோமாவதி புனிதபூமியில்அமைக்கப்பட்டுவரும் இரண்டு மாடி சமய உரை மண்டபத்தைப் பார்வையிட்டுபணிகளை விரைவுபடுத்துமாறு அதிகாரிகளுக்குப் பணித்தார்.

கடந்த 31ஆம்திகதி அநுராதபுரத்தில் உள்ள வரலாற்று முக்கியத்துவமிக்க ஜயசிறி மகாபோதிக்கு சென்று சமய கிரியைகளில் ஈடுபட்டு புத்தாண்டுக்கானஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டார்.

ஜயசிறி மகாபோதி அபிவிருத்தி குறித்து அங்கு கலந்துரையாடினார்.அதற்குத்தேவையான அனைத்து உதவிகளையும் வழங்குவேன் என்றும் குறிப்பிட்டார்.

முன்னாள்அமைச்சர்களான துமிந்த திசாநாயக்க, திஸ்ஸ கரலியத்த, முன்னாள் முதலமைச்சர் பேசல ஜயரத்ன, டெலிகொம் நிறுவனத்தின் தலைவர்குமாரசிறிசிறிசேன உள்ளிட்டோர்இந்தநிகழ்வுகளில்கலந்துகொண்டனர். (த)

see more news in NEWUTHAYAN.COM

### மக்களும் மாவீரர்களும் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டும்

# தமிழர்கள் போராடுவது ஒற்றையாட்சிக்கு அல்ல

## தற்போதைய அரசு இதைப் புரிந்து நடக்கவேண்டும்
## கூட்டமைப்பின் எம்.பி. கோடீஸ்வரன் இடித்துரைப்பு

அம்பாறை, ஜன. 3

முப்பது வருடங்களுக்கும் மேலாக தமிழர்களைக் கொத்துக் கொத்தாகப் பலியெடுத்தும், ஆயிரக்கணக்கான மாவீரர்களை இழந்தும்கூட இன்றும் எமது உரிமைக்காகப் போராடிக்கொண்டு இருக்கின்றோம் என்றால், இந்த நாட்டில் பௌத்த மதம் முதன்நிலைக்கு வருவதற்கும், ஒற்றையாட்சியை ஏற்பதற்காகவும் அல்ல. இதனை ஒருபோதும் தமிழ் மக்கள் ஏற்கமாட்டார்கள். இதைத் தற்போதய அரசு புரிந்துகொண்டு செயற்படவேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் இடித்துரைத்துள்ளார்.

அம்பாறையில்கல்வியாளர்கள்மற்றும் சாதனையாளர் மதிப்பளிப்பு நிகழ்வு விநாயகபுரம் மின்னொளி விளையாட்டுக் கழகத் தலைவர் டி.சுரேந்திரன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக்கலந்துகொண்டுஉரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கண்டிக்குக் கடந்தவாரம் சென்றிருந்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க பௌத்த மகாநாயக்கர்களைச் சந்தித்து ஒற்றையாட்சி மற்றும் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை என்று கருத்துக்கள் தெரிவித்திருந்தார். அதற்குப் பதில் கொடுக்கும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தநாட்டில்வாழும்மக்களின்நலன்களைக் கருத்திற் கொள்ளாது பேரினவாதக் கட்சிகள் கடந்த வாரங்களில் நடந்துகொண்டதை நாம் அனைவரும் அறிவோம். அதனால் நாட்டுக்குப் பல கோடி ரூபாநாசமாகியுள்ளது. நாட்டுமக்கள்பல அவலங்களை எதிர்கொண்டிருந்தனர். அரசமைப்புமீறப்பட்டதுடன்சட்ட ஒழுங்குகளும் பாதிக்கப்பட்டிருந்தன. உயர் நீதிமன்றம் நியாயமான தீர்ப்பு வழங்கி நாட்டில் நீதியை நிலைநாட்டியது. நீதியை நிலைநாட்ட நாட்டிலுள்ள அனைத்துமக்களும்போராடியிருந்தார்கள். இதனைநாட்டுமக்கள்மட்டுமன்றிப் பன்னாடுகளும் புரிந்து கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் ஒற்றையாட்சி மற்றும் பௌத்தமதத்துக்குமுன்னுரிமைஎன்ற அடிப்படையில்தான் தீர்வுகள் வழங்கப்படும் என்று கண்டியில் ரணில் தெரிவித்திருக்கிறார். இதனை ஏற்றுக்கொள்ளமுடியாது.

தமிழ் மக்களின் சிந்தனை, செயல் எல்லாம் வடக்கு கிழக்கில் கூட்டாட்சி முறையிலான சுயாட்சியைப் பெற்று நிம்மதியாகவாழவேண்டும்என்பதே. அதனை இலக்காகக்கொண்டேபோராடிவருகின்றனர். அந்த ஆட்சி முறையை வழங்க வேண்டிய நிலையில் இந்த அரசு இருக்கிறது. அதனை இந்த அரசு மறக்கக் கூடாது - என்றார். (த)

# அரசியலில் வெற்றிபெறும் ஆயுதமாக இனவாதத்தைப் பேச அனுமதிக்காதீர்

## கிழக்கின் முன்னாள் முதலமைச்சர் தெளிவுபடுத்துகிறார்



கொழும்பு, ஜன. 3

அரசியல்வாதிகள் இனவாதத்தைத் தமது அரசியல் அரியணைக்கான ஆயுதமாகப் பயன்படுத்த இனியொருபோதும் மக்கள் அனுமதிக்கக் கூடாது. அனைத்து சமூகங்களையும் சேர்ந்த மக்களிடமும் இவ்வாறு அறைகூவல் விடுக்கிறேன் என்று கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் செய்னுலாப்தீன் ஆலிம் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

இலங்கையில் காலகாலமாக அரசியல்வாதிகளிடமும் மக்களிடமும் இருந்துவரும் இனவாத அரசியல்போக்கு மாற்றியமைக்கப்பட வேண்டும் என்றும் அவர் அறைகூவல் விடுத்துள்ளார்.

இந்த விடயம் குறித்து அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஓர் இனத்துக்காகக் குரல் கொடுப்போரையும் இனவாதம் பேசுவோரையும் மக்கள் தெளிவாக அடையாளங் கண்டு கொண்டு அவர்களை நிராகரிக்க வேண்டும்.

கடந்த காலங்களில் ஒற்றுமையாக வாழ்ந்த தமிழ் முஸ்லிம் சிங்கள சமூகங்கள் திட்டமிட்டு பிரிக்கப்பட்டதை நாம் நின்று நிதானித்து அறிந்து கொள்ளவேண்டும்.

இனவாத செயற்பாடுகளில் புதிய யுக்திகளைக் கையாண்டு தமிழ் முஸ்லிம் சிங்கள மக்களிடையே பிளவுகளை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் வழமைபோன்று எதிர்வருகின்ற காலங்களிலும் முன்னெடுக்கப்படலாம்.

இதனை முறியடித்துச் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் தமக்கிடையேயான நல்லுறவைப் பேண வேண்டும். உலகம் விஞ்ஞானத்தில் முன்னேறி வீறு நடைபோட்டுக் கொண்டிருக்கும்போது இன்னமும் அஞ்ஞானத்தில் மூழ்கியிருக்கும் இலங்கை இனவாத அரசியல்வாதிகள் கூனிக்குறுகி தலைமறைவாகும் காலம் வெகு விரைவில்வரும் என்ற நம்பிக்கை எனக்கும் உண்டு.

பல்லின சமுதாயங்கள் பாரம்பரியமாக பரஸ்பர உதவி ஒத்தாசையுடனும் மதிப்பு மரியாதைகளுடனும் வாழ்ந்து வந்த நமது தேசத்தில் இனவாதத்துக்காக குரல் கொடுப்பது வெட்கக் கேடான செயற்பாடு.

மறுவார்த்தையில் கூறுவதாயின் இனவாதிகள் மனித மாமிசத்தையும் மலத்தையும் உண்ணும் காட்டுமிராண்டித் தனத்துக்கு ஒப்பானவர்களாக மனித நேயத்தில் வளர்ச்சியடைந்த சமுதாயத்தினரால் நோக்க முடியும்.

கடந்த காலங்களில் ஒற்றுமையாக வாழ்ந்த தமிழ் முஸ்லிம் சிங்கள சமூகங்கள் திட்டமிட்டுப் பிரிக்கப்பட்டதை அறியாமல் தமது அரசியல் வேணவாக்களை நிறைவேற்றிக் கொள்வதற்காகச் சில மனித சமுதாய விரோதிகள் இனவாதத்தைத் தமது கையிலெடுத்துள்ளார்கள்.

நாளடைவில் இந்தப்போக்கு அவர்களுக்கே ஆபத்தானதாக வந்து முடியும். ஏனென்றால் உலக வரலாறு ஒருபோதும் பின்னோக்கிப் பயணிப்பதில்லை. இனத்துக்காய்க் குரல் கொடுக்கும் போர்வையில் இனவாதம் பேசுவதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

அது மாத்திரமின்றி இந்த இனவாத செயற்பாடுகளில் புதிய யுக்திகளைக் கையாண்டு தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களிடையே பிளவுகளை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதை எச்சரிக்கையோடு நாம் எதிர்கொள்ள வேண்டும்.

30 வீதமான சிறுபான்மையினருக்கு ஏற்படும் பாதிப்பு இந்த நாட்டில் தொடருமானால் அதன் விளைவாக இந்த நாட்டில் வாழும் 70 சதவீதமான சிங்கள மக்களும் நஷ்டமடைவார்கள். அதேபோல, சிறுபான்மையினரான முஸ்லிம்களுக்கு ஏற்படுத்தப்படும் பாதிப்புக்களால் அடுத்துள்ள சிறுபான்மை யினரான தமிழ் மக்களும் நிம்மதியாக வாழ்ந்துவிட முடியாது என்றுள்ளது. (த)



# சந்திரிகா உள்ளிட்ட குழுவினருக்கு அரசதலைவர் மைத்திரி கதவடைப்பு

கொழும்பு, ஜன. 3

சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையகத்துக்குள், கட்சியின் முன்னாள் தலைவரும் முன்னாள் அரசதலைவருமான சந்திரிகா குமாரதுங்கவும் அவரது ஆதரவாளர்களும் நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

சுதந்திரக் கட்சியின் தலைவரான அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவே இந்தத் தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

தாய்லாந்துக்கு ஒருவார காலப் பயணம் மேற்கொண்டிருந்தபோது, சுதந்திரக் கட்சித் தலைமையகத்தை மூடிவைக்க உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையில், தாய்லாந்திலிருந்து மைத்திரிபால சிறிசேன சில நாள்களுக்கு முன்னர் நாடு திரும்பியிருந்த நிலையில் சுதந்திரக் கட்சித் தலைமையகம் திறக்கப்பட்டது.

எனினும், சந்திரிகா குமாரதுங்கவும் அவரது ஆதரவாளர்களும் கட்சித் தலைமையகத்துக்குள் நுழைய அனுமதிக்க வேண்டாம் என்று, மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார்.

மைத்திரிபாலசிறிசேனவின் தலைமைத்துவத்துக்கு எதிராகச் சந்திரிகா குமாரதுங்கவும் அவரது ஆதரவாளர்களும் குழப்பங்களை ஏற்படுத்தலாம் என்ற சந்தேகத்தில் பயத்தில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடன்இணைந்து தேர்தல்களில் போட்டியிடப் போவதாகக் கடந்தவாரம் அரசதலைவர் அறிவித்திருந்தார். அதையடுத்தே சுதந்திரக் கட்சிக்குள் எதிர்ப்பு உருவாகியுள்ளது என்று கட்சியின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கட்சியின் தலைமைத்துவத்தைக் கைப்பற்றுவதற்குக் குழுவொன்று முயற்சித்து வருவதாகப் புலனாய்வு அறிக்கை மைத்திரிபால சிறிசேனவுக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே இத்தகைய முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

முன்னர் மைத்திரிபால சிறிசேன பொதுவேட்பாளராகக் களமிறங்குவதற்கு சந்திரிகா அம்மையார் முக்கிய வகிபாகத்தை வகித்தார். (த)

# இந்திய நிதி ஒதுக்கீட்டிலான திட்டங்கள் இலங்கையில் தொடர்ந்து இடம்பெறும்

## *இலங்கைத் தூதுர் உறுதியளித்துள்ளார்*

கொழும்பு, ஜன. 3

இந்திய அரசு இலங்கையில் நடைமுறைப்படுத்தவென்று வழங்கியநிதியில்திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்று இலங்கை அரசு உறுதியளித்துள்ளது.

இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் ஒஸ்ரின் பெர்ணான்டோ இந்திய மத்திய உள்துறை இணை அமைச்சர் கிரண் ரிஜிஜுவைக் கடந்த 27ஆம் திகதி இந்திய உள்துறை அமைச்சில் சந்தித்திருந்தார். அதன்போதே இலங்கைத் தூதர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார் என்று இலங்கை அயலுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தச் சந்திப்பில் இந்திய அயலுறவு அமைச்சின் இணைச் செயலர் தினேஸ் பட்நாயக் மற்றும் இந்திய உள்துறை அமைச்சின் அதிகாரிகளும் பங்கேற்றனர்.

சமயம், கலாசாரம், பொருளாதார செயற்பாடுகள், யாத்திரைச் சுற்றுலா போன்ற துறைகளில் நெருங்கிய உறவுகளை இன்னும் வலுப்படுத்த வேண்டிய தேவை உள்ளது என்று இந்திய மத்திய உள்துறை இணை அமைச்சர் கிரண் ரிஜிஜு வலியுறுத்தியுள்ளார். இதன் மூலம் இரண்டு நாடுகளுக்கும் சாதகமான நன்மைகள் கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது மெதுவாக முன்னெடுக்கப்பட்டுவரும், இந்தியத் திட்டங்களை வேகமாக முன்னெடுப்பதற்குத் தனிப்பட்ட முறையில் முயற்சி எடுப்பேன் என்று ஒஸ்ரின் பெர்னான்டோ உறுதியளித்துள்ளார்.

தற்போது இலங்கைப் படையினர் சுமார் ஆயிரத்து 400 பேர் இந்தியாவில் பயிற்சி பெற்று வருகின்றனர் என்று தெரிவித்தத ஒஸ்ரின் பெர்னான்டோ, இந்த வாய்ப்பை அளித்த இந்திய அரசுக்கு நன்றிதெரிவிப்பதாகவும்குறிப்பிட்டுள்ளார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த)

## வடக்கு மாகாணத்தில்

# ஆசிரிய இடமாற்றங்கள் தொடர்பில் தொழிற்சங்கங்கள் முரணான கருத்து

யாழ்ப்பாணம், ஜன. 3

வடக்கு மாகாணத்தில் பாடசாலை ஆசிரியர்களின் இடமாற்றங்கள் தொடர்பில் ஆசிரிய தொழிற்சங்கங்கள் மாறிமாறி – ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன. இடமாற்றங்கள் உரியமுறையில் இடம்பெறுவதில்லைஎனக் குற்றச்சாட்டப்படும் நிலையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அனுப்பிய செய்திக் குறிப்பில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் ஒன்பதாம் இடத்தில் இருந்து வருகின்ற வடக்கு மாகாணம் க.பொ.த உயர்தர பரீட்சையிலும் பின்னிலைக்குச் சென்றது. இதற்குப் பல காரணிகள் இருந்தாலும் ஆசிரிய பற்றாக்குறை, ஆசிரிய சமனிலையின்மை என்பன முதன்மைக் காரணிகளாக உள்ளன.

இத்தகையநிலைமைகளைச்சீர்செய்து பல்வேறு வழிமுறைகளை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சிடமும், வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்திடமும் நாம் முன்வைத்தோம். ஆசிரிய பரம்பலைச் சீராக்க வடக்கு மாகாணக்கல்வித்திணைக்களம்எடுக்கின்ற முயற்சிகள் அனைத்தும் பயனளிக்காமல் போகின்றன.

ஆசிரியவெற்றிடங்களைநிரப்புவதற்கு விண்ணப்பம்கோரிபரீட்சைகள்நடைபெற்ற நிலையில் அந்த நியமனங்கள் இதுவரையில் நடைபெறவில்லை. ஆசிரிய பரம்பலைச் சீராக்க நடைபெறும் ஆசிரிய இடமாற்றங்களில் பல்வேறு தலையீடுகள் ஏற்படுகின்றன. அரசியல் தலையீடுகள், உயர்நிலை அதிகாரிகளின் தலையீடுகள், செல்வந்தர்களின் தலையீடுகள் என தலையீடுகள் தாண்டவமாடுகின்றன.

மாகாணக் கல்வித் திணைக்களத்தில் உள்ள எழுதுவினைஞரான பெண்ணுக்கு பல தடவைகள் இடமாற்றம் வழங்கப்பட்டும் அவர் செல்லாமல் இருக்கிறார். இடமாற்றம் தொடர்பான சகல நடவடிக்கைகளுக்கும் அவரே பொறுப்பாகவும் உள்ளார். மாகாணக் கல்விப் பணிப்பாளரிடம் செல்கின்ற ஆசிரியர்களை இடைமறித்து மிகமோசமாக நடந்துகொள்கின்றார். வடக்கு கிழக்கு மாகாணம் இணைந்து இயங்கிய காலத்தில் இருந்து மாகாணக் கல்வித் திணைக்களத்தில் கடமையாற்றுகின்ற இந்த எழுதுவினைஞரால் பல ஆசிரியர்கள்உளரீதியாகப்பாதிக்கப்பட்டுவருகின்றனர் என்றுள்ளது.

இலங்கைஆசிரியர்சங்கம்விடுத்துள்ள செய்திக்குறிப்பில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வலிகாம கல்வி வலயத்தில் ஆசிரியர் பரம்பல்சீராக்கம்எனும்போர்வையில் சட்டபூர்வமானஇடமாற்றச்சபையின்றி 72 ஆசிரியர்களுக்கு இடமாற்றக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இதில் பாடசாலைகளில் மேலதிகமாக உள்ளவர்களை முறையாக இனங்காணாமல் அதிபர்களினதும் வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளரினதும் விருப்பு வெறுப்புக்களுக்கேற்பவே இந்த இடமாற்றக் கட்டளைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த இடமாற்றத்தில் பல ஆசிரியர்கள் தொடர்ச்சியாகப் பழிவாங்கப்பட்டமை தொடர்பான முறைப்பாடுகளும் எமக்குக் கிடைக்கப்பட்டுள்ளன.

இத்தகைய முறையற்ற இடமாற்றக் கடிதங்களில் இடமாற்றம்பெற்று புதிய பாடசாலையில் கடமையைப் பொறுப்பேற்ற பின்னரே இடமாற்றம் தொடர்பான மேன்முறையீட்டுக்குச் சமர்ப்பிக்கமுடியும் எனவும் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரால் முறையற்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. இது அநீதிஇழைக்கப்பட்டுபாதிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களின் உரிமையை நசுக்கும் செயற்பாடாகும்.

வலிகாமம்வலயக்கல்விப்பணிப்பாளரால் வழங்கப்பட்டுள்ள இந்த முறையற்ற இடமாற்றங்கள் நிறுத்தப்பட்டு 2007/20தேசியஆசிரியர்இடமாற்றக் கொள்கையின்அடிப்படையில்அங்கீகரிக்கப்பட்ட இடமாற்றச் சபையூடாக இடமாற்றம் நடைபெறவேண்டும். ஆசிரியர்கள் மேன்முறையீடு செய்வதற்கும் போதிய சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

முறையற்ற இடமாற்றம் தொடர்பாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கும் இலங்கை ஆசிரியர் சங்கம் முறையிட்டிருந்தது. இந்தவிடயங்கள்தொடர்பாக செயலாளர் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும். முறையற்றஇடமாற்றங்களைஆசிரியர்கள்ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை. இந்தவிடயம் தொடர்பாகவடக்குமாகாணஆளுநருக்கும் முறைப்பாடு செய்யவுள்ளோம் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வருடாந்த மேன் முறையீட்டு இடமாற்றச் சபை மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார் தலைமையில் கடந்த27ஆம்திகதிகல்விஅதிகாரிகள், ஆசிரிய சங்க பிரதிநிதிகளின் பங்களிப்புடன் சுமுகமாக, பக்கச் சார்பு இல்லாமல் நடைபெற்றது.

மருத்துவச் சான்றிதழின் அடிப்படையில் மேன் முறையீடு செய்த ஆசிரியர்களின் விண்ணப்பப்படிவங்களைமிக உன்னிப்பாகக்கவனித்து, அவர்களுக்கான சரியான தீர்வுகளை மாகாணக் கல்விப்பணிப்பாளர்முன்வைத்தார். 6, 7 வருடங்கள் வெளிமாவட்ட சேவை கட்டாயம்பார்க்கப்பட்டபோதும்கொடிய நோய்கள், மிக நெருக்கடியான குடும்ப சூழல் முதலிய காரணங்களுக்கு விதிவிலக்களிக்கப்பட்டன. அழகியல் பாட ஆசிரியர்களின்இடமாற்றம்தொடர்பாக பரிசீலனை செய்யப்பட்ட போது, 5 வருடங்களுக்குக் குறைய கடல் கடந்த தீவுகளிலும் வடமராட்சி கிழக்கிலும் வெளிமாவட்டங்களிலும் சேவையாற்றிய ஆசிரியர்கள் கட்டாயம் அந்தப் பகுதிகளுக்கு இடமாற்றம்செய்யப்பட்டு, அந்த இடைவெளிகளில் அவர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று மாகாணக் கல்விப் பணிப்பாளர் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கு உறுதியளித்துள்ளார். அனைவரது ஒத்தழைப்புடனும் இடமாற்றச் சபை நடைபெற்றது.- என்றுள்ளது.

(து)

# மக்களின் இடங்களிலிருந்து இராணுவம்விலகவேண்டும்

*சாள்ஸ் எம்.பி. மீளவலியுறுத்தல்*



மன்னார், ஜன. 3

வடக்குக் கிழக்குப் பகுதிகளிலுள்ளமக்களின்காணிகள், விவசாய நிலங்கள், அரசகாணிகள், ஆலயங்கள், பாடசாலை என்பனவற்றிலுள்ள இராணுவத்தினர்அனைவரும்வெளியேறவேண்டும்என்பதில் மாற்றுக்கருத்துஇல்லை. இவ்வாறு வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர்சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சிங்கள ஊடகம் ஒன்றுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் கருத்துத் தெரிவித்திருந்தார். வடக்குக் கிழக்கிலிருந்து இராணுவம் வெளியேற வேண்டிய அவசியம் இல்லை என்று அந்தச் செய்தியில் தகவல் வெளியிடப்பட்டிருந்தது என்றுதெரிவிக்கப்பட்டது.

அது குறித்துக் கேட்டபோது அவர் மேலும்தெரிவித்ததாவது:

இராணுவத்தினர்படிப்படியாககாணிகளைவிடுவிப்பதில் சிறியளவு முன்னேற்றம் இருந்தாலும், மக்கள் எதிர்பார்த்தளவுக்கு இராணுவத்தினர் மக்களின் காணிகளை விட்டுச்செல்லவில்லை.

1980ஆம்ஆண்டுக்குமுற்பட்ட காலத்தில் இருந்த இராணுவமுகாம்களைத் தவிர அதற்குப் பின்னர் போர் காரணமாக உருவாக்கப்பட்ட இராணுவ முகாம்கள் மற்றும் இராணுவத்தினர் விலகி மக்களின் ஜனநாயக வாழ்க்கைக்கு இடையூறு இல்லாத வகையில் இராணுவம்செயற்படவேண்டும். இது தொடர்பாக அரசதலைவரிடமும்அரசிடமும் கோரியுள்ளேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(த.56)

# வெடுக்குநாறிமலைச்சிவன்ஆலயத்தில் ஏணி அமைக்க நடவடிக்கை எடுங்கள்

அமைச்சர்மனோவுக்குவடக்குஅவைத்தலைவர்கடிதம்

யாழ்ப்பாணம், ஜன. 3

வவுனியா வடக்கு பிரதேசசெயலாளர் பிரிவிலுள்ள வெடுக்குநாறிமலையில்அமைந்துள்ளஆதிசிவன்ஆலயத்துக்குச் செல்வதற்கு ஏணி அமைக்க பொலிஸார் தடை விதிக்கின்றனர். இதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சர் மனோகணேசனிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடக்குமாகாணசபையின்அவைத்தலைவர்சி.வி.கே.சிவஞானம் இந்த வேண்டுகோளை விடுத்துக் கடிதம் அனுப்பியுள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

குறித்த பிரச்சினை தொடர்பில் அரசதலைவர், தலைமை அமைச்சர், வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோருக்குக் கடிதங்கள்அனுப்பப்பட்டுள்ளன. இதுகுறித்துவடக்குமாகாண ஆளுநர்வவுனியாமாவட்டச்செயலர், வவுனியாமாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் தொல்பொருள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் ஆகியோருக்குக்கடிதம்எழுதியுள்ளார் என்றும் அதன் பிரதியும் எமக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்தவிடயத்தில்தங்களதுமேலான்அவதானத்தைக்கோருவதுடன் இந்த ஆலயத்துக்குச் செல்வதற்கான ஏணியைப் பொருத்துவதற்குத்தொல்பொருள்திணைக்களம்பொலிஸ் திணைக்களத்தினூடாகத் தடை ஏற்படுத்துவதை நிறுத்த வேண்டும். அதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு கடிதத்தில் கோரியுள்ளார்.

(கு)

# இலங்கையின் ஊடகசுதந்திரம் 141லிருந்து131க்குமுன்னேற்றம்

கொழும்பு, ஜன. 3

2017ஆம் ஆண்டில் 141ஆவது இடத்தில் இருந்த இலங்கையின் ஊடக சுதந்திரம் 2018ஆம் ஆண்டில் 131ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது என்று உலக பத்திரிகை சுதந்திர நிறுவனம் தெரிவித்துள்ளது.

உலக பத்திரிகை சுதந்திர நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

உலகில் ஊடக சுதந்திரம் கூடுதலாக உள்ள நாடு நோர்வே. ஊடகசுதந்திரம்மிகவும்குறைவாகஉள்ளநாடுஎரித்திரியா. தெற்காசியாவில் இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகள் ஊடக சுதந்திரத்தில் மிகவும் கீழ் மட்டத்தில் இருக்கின்றன.

அதேவேளை, மாலைதீவு, ஆப்கானிஸ்தான், நேபாளம் ஆகிய நாடுகள் இலங்கையையும் விட மேலிடத்தில் உள்ளன.

இந்தச்சுட்டியில்94ஆவதுஇடத்தில்உள்ளபூட்டான்தெற்காசியாவில்ஊடகசுதந்திரத்தைக்கூடுதலாகப்பேணும்நாடாக அமைந்துள்ளது என்றுள்ளது.

(கு)

# மனிதஉரிமைக்குற்றச்சாட்டுள்ள மூத்த டீ.ஐ.ஜி உடுகம்பொலசாவு



கொழும்பு, ஜன. 3

வடக்கிலும்தெற்கிலும், ஏராளமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகிய, இலங்கையின் முன்னாள் மூத்த பிரதிப்பொலிஸ்மாஅதிபர்பிறேமதாசஉடுகம்பொலநேற்றுக்காலமானார்.

யாழ்ப்பாணத்தில்பொலிஸ்கண்காணிப்பாளராக இருந்தபோது, வடக்கில்விடுதலைப்புலிகளைஒடுக்கும் நடவடிக்கைகளில்தீவிரமாகஈடுபட்டிருந்த உடுகம்பொல, 1989இல் தெற்கில்ஜே.வி.பிகிளர்ச்சியைஒடுக்குவதில் முக்கிய பங்காற்றினார்.

உடுகம்பொலவின்கீழ்உருவாக்கப்பட்ட சிறப்புக் காவல்துறைக் குழு ஜே.வி.பி. உறுப்பினர்களை வேட்டையாடுவதிலும், கிளர்ச்சியை ஒடுக்குவதிலும் தீவிர பங்காற்றியிருந்தது.

இதன்போது, ஈவிரக்கமற்ற சித்திரவதைகளையும், மோசமான மனித உரிமை மீறல்களையும் புரிந்தார் என்று உடுகம்பொல மீதும் பொலிஸ் மீதும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

எனினும், உடுகம்பொலவுக்கு எதிராகஎந்தவொருநீதிவிசாரணையும் இடம்பெறவில்லை. 40 ஆண்டுகள் பொலிஸ் துறையில் பணியாற்றிய இவர், தனது 83ஆவதுவயதில்நேற்றுக காலமானார்.

(கு)

# கடற்படைத் தளபதி கடமைகளை ஏற்றார்

கொழும்பு, ஜன. 3

இலங்கைக் கடற்படையின் 23 ஆவது தளபதியாக, வைஸ் அட்மிரல் பியால் டி சில்வா நேற்றுமுன்தினம் பொறுப்பேற்றுள்ளார். இலங்கைக்கடற்படைத்தலைமையகத்தில் நடந்தநிகழ்வில் அவர் தனது கடமைகளை நேற்று ஏற்றுக் கொண்டார்.

பதவியிலிருந்து ஓய்வுபெற்ற கடற்படைத் தளபதி அட்மிரல் சிறிமேவன் ரணசிங்க, கடற்படைத் தளபதிக்குரிய அதிகாரபூர்வ வாளை, வைஸ் அட்மிரல் பியால் டி சில்வாவிடம் கையளித்தார்.

இதையடுத்து, அட்மிரல் சிறிமேவன் ரணசிங்கவை வழியனுப்பும் நிகழ்வும், புதிய கடற்படைத் தளபதிக்கான வரவேற்பு மற்றும் பதவியேற்பும் இடம்பெற்றன.

(கு)



## தீவிரவாதப்...

ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினரும் ஐரோப்பிய நாடாளுமன்றின் இலங்கை நட்புக் குழுவின் உறுப்பினருமான ஜெப்ரிவான் ஓர்டன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனை கொழும்பில் நேற்றுச் சந்தித்தார். இந்தச் சந்திப்பிலேயே சம்பந்தன் இவ்வாறு தெரிவித்தார் என்று அந்த அமைப்பு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

நாட்டில் நிலவும் அரசியல் நிலமை தொடர்பில் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினரும் ஐரோப்பிய நாடாளுமன்றின் இலங்கை நட்புக் குழுவின் உறுப்பினருமான ஜெப்ரிவான் ஓர்டனுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெளிவுபடுத்தினார்.

அரசமைப்பு சபையின் மீள்நியமனத்தின் முக்கியத்துவத்தினை சுட்டிக்காட்டிய அதே வேளை இந்த அரசமைப்புச் சபையின் மீள்நியமனத்தால் நீதித்துறையின் சுயாதீனத் தன்மை பேணப்பட்டுள்ளமையானது கடந்த காலங்களில் இடம்பெற்ற சம்பவங்களின் மூலம் நிரூபணமாகியுள்ளது என்று எடுத்துக் காட்டினார். அரசை மீளக்கொண்டுவருவதற்கு நாம் வழங்கிய ஆதரவு கொள்கை அடிப்படையிலானதாகும் என்றும் நாடானது தலைமை அமைச்சரோ அரசோ இல்லாத இக்கட்டான நிலையில் இருந்தபோது பொருளாதாரத்துக்கும் நிறுவனங்க ளின் சுமூகமான செயற்பாடுகளுக்கும் ஏற்படவிருந்த பாதக விளைவுகளைத் தடுக்கும் முகமாகவே அரசை அமைப்பதற்கான ஆதரவைக் கொடுத்தோம்.

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் தெளிவுபடுத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சுமந்திரன், கடந்த மாதம் 7ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவிருந்த நிபுணர் குழுவால் தயாரிக்கப்பட்ட வரைவு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதிக்கு முன்னதாக நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த இரா.சம்பந்தன் புதிய அரசமைப்பானது நாடு ஒருமித்ததாகவும் பிரிக்கப்பட முடியாததாகவும் இருப்பதனை உறுதிசெய்யும் ஒன்றாக அமையும். அதே சந்தர்ப்பத்தில் மக்களும் பிராந்திய மாகாண அரசுகளும் தமது வாழ்வில் தொடர்புடைய அன்றாட விடயங்கள் தொடர்பில் அதிகாரங்களைப் பயன்படுத்தும் வகையிலான நேர்மையான அதிகாரப்பகிர்வினையும் கொண்டிருக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார். மேலும், புதிய அரசமைப்பு கொண்டுவரப்படுகின்றபோது அது நியாயமானதொன்றாக இருக்கும் பட்சத்தில் அதற்க்கு எமது மக்கள் தமது ஆதரவைக் கொடுப்பார்கள் எனவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் தெரிவித்தார்.

13ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டதிலிருந்து பதவிக்கு வந்த ஒவ்வொரு தலைவர்களும் அரசமைப்பில் முன்னேற்றத்தைக் கொண்டு வருவதற்கு பல்வேறு கருமங்களை மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவித்த இரா. சம்பந்தன், அரச தலைவர் பிரேமதாசாவின் காலத்தில் மங்களமுனசிங்க அறிக்கை, அரச தலைவர் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் காலத்தில் 2000ஆம் ஆண்டு அறிக்கை, மற்றும் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் காலத்தில் அனைத்துக் கட்சி தெரிவுக்குழு மற்றும் பேராசிரியர் திஸ்ஸவிதாரணவின் அறிக்கை போன்றன அரசமைப்புக்கு அதிகளவு முன்னேற்றங்களைப் பரிந்துரைந்திருந்தன எனவும் தெரிவித்தார். கடந்த முப்பது வருடங்களாக பல்வேறு கருமங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. தற்போது ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. இதனை நாட்டின் நன்மைகருதி நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் எனவும் இரா. சம்பந்தன் தெரிவித்தார். மேலும், "நான் நியாயமாக நம்பிக்கை கொண்டுள்ளேன். ஏனெனில் இது எனது நாடு. இந்த நாடு செழிப்படைய வேண்டும் என்பது எனது விருப்பம். எனவே என்னால் நம்பிக்கையற்றவனாக இருக்க முடியாது" எனவும் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் தெரிவித்தார்

புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் நடவடிக்கைகள் தொடர்பில் கேள்வியொன்றிற்குப் பதிலளித்த சுமந்திரன், தீவிரவாதப் போக்குடைய புலம்பெயர் சமூகத்தினர் மிகச் சிறிய எண்ணிக்கையிலேயே உள்ளனர் என தெரிவித்த அதேவேளை இலங்கையில் நியாயமான அதிகாரப் பகிர்வு இடம்பெறும் சந்தர்ப்பத்தில் அத்தகைய நடவடிக்கைகளுக்கு பெரும்பான்மையான புலம்பெயர் சமூகம் தமது ஆதரவினை வழங்கும் எனவும் தெரிவித்தார்.

மேலும், கடும்போக்குடைய புலம்பெயர் தமிழ் மக்களின் செயற்பாடுகளும் நடவடிக்கைகளும் நாம் எடுக்கும் தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்தாது எனத் தெரிவித்த இரா. சம்பந்தன், இலங்கையில் இடம்பெற்ற ஒவ்வொரு தேர்தலிலும் அத்தகைய கடும்போக்காளர்களை மக்கள் தோற்கடித்திருக்கிறார்கள் என்பதனையும் சுட்டிக் காட்டினார்.

காணி விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த இரா.சம்பந்தன், நாங்கள் அரசால் பிரதேசங்களின் இனவிகிதாசாரத்தில் மாற்றங்களைக் கொண்டுவரும் நோக்கில் முன்னெடுக்கப்படும் குடியமர்வுகளை எதிர்க்கிறோம். மாறாக இயற்கையாக மக்கள் குடியமர்வதனை எதிர்க்கவில்லை எனவும் தெரிவித்தார். மேலும் தமிழ் பேசும் மக்கள் தமது நிலத்தினையும் கலாசாரத்தையும் பேணுவதில் மிகவும் உள்ளார்ந்த அக்கறை கொண்டவர்கள் என்பதனையும் வலியுறுத்தினார்.

இந்தச் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த ஜெப்ரிவான் ஓர்டன் 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையில் நல்லிணக்க முயற்சிகளுக்கு அதிகளவு வெளிநாட்டு உதவி கிடைக்கும் என தான் எதிர்பார்த்தார் எனவும் அப்போதைய அரச தலைவராக இருந்த மகிந்த ராஜபக்ச உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு போதிய முயற்சிகளை மேற்கொள்ளாமையையிட்டு தாம் கவலை அடைகிறார் என்றும் தெரிவித்தார். (ம)

## அரசியல்...

மில்லை என்று தெரிவித்தார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன.

2019ஆம் ஆண்டுக்கான புதிய அரசின் முதலாவது அமைச்சரவைக் கூட்டம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் அரச தலைவரின் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே அரச தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமைச்சுகளுக்கான நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்கள் ஒதுக்கப்பட்டுள்ள விதம் தொடர்பில் சில அமைச்சர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். இது விடயத்தில் எவ்வித உள்நோக்கமும் எனக்குக் கிடையாது. எந்தெந்த அமைச்சின் கீழ் எந்தெந்த அரச நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்கள் வர வேண்டும் என்ற பட்டியலை தலைமை அமைச்சர் எனக்கு அனுப்பியிருக்க வேண்டும். அந்தப் பட்டியல் கிடைக்காத காரணத்தினாலேயே அரச தலைவர் செயலக அதிகாரிகளின் உதவியுடன் விடயதானங்கள் ஒதுக்கப்பட்டன. புத்தாண்டில் அமைச்சுகள் இயங்க வேண்டும், மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்பதால்த்தான் இந்த முடிவுகள் எடுக்கப்பட்டன - என்றார்.

இதற்குப் பதிலளித்த தலைமை அமைச்சர், வருட இறுதியில் உங்களுக்கு நிறைய வேலைகள் இருந்திருக்கும். அதைக் கருதித்தான் நான் அனுப்பவில்லை எனத் தெரிவித்தார். பின்னர் புதிய பட்டியலையும் தலைமை அமைச்சர் அரச தலைவரிடம் ஒப்படைத்தார். இதன் பிரகாரம் விரைவில் அமைச்சுகளுக்கான விடயதானங்கள் ஒதுக்கப்பட்ட புதிய வர்த்தமானி அறிவித்தல் வெளியாகுமென அறிய முடிகிறது. (ம-10)

## வெள்ள ...

கான காசோலையை வழங்குவதற்கு இடர் முகாமைத்துவ அமைச்சர் இன்று முல்லைத்தீவுக்கு வருகை தரவுள்ளார் என்று மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வடக்கில் அண்மையில் பெய்த மழையால் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் மிகையாக்ப் பாதிக்கப்பட்டன. மக்கள் தமது குடியிருப்புகளை விட்டு வெளியேறி முகாம்களிலும் பொது இடங்களிலும் தங்க வைக்கப்பட்டனர். கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் கடந்த 24ஆம் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்ட இடர் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார, பாதிக்கப்பட்ட மக்களுக்கு 10 ஆயிரம் ரூபா உடனடி இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்படும் என்று தெரிவித்தார். இதற்கு அமைவாக 10ஆயிரம் ரூபா இழப்பீட்டுத் தொகை வழங்குவதை ஆரம்பித்து வைப்பதற்கும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொருள்களை வழங்குவதற்கும் இடர் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார முல்லைத்தீவுக்கு இன்று வருகை தரவுள்ளார் என்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீட்டுக்கான காசோலை வழங்குவதை ஆரம்பித்து வைக்கவுள்ளார் என்றும் மாவட்டச் செயலக வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-7)

## இரு விபத்துகளில்...

ழந்தனர். ஆறுகால்மடம், தெல்லிப்பழைப் பகுதிகளில் குறித்த விபத்துக்கள் இடம்பெற்றன.

ஆறுகால்மட விபத்துத் தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்ததாவது:

ஆறுகால் மடத்தைச் சேர்ந்த துரைராசா விஜயராஜா (67 வயது) என்ற முதியவர் இன்று (நேற்று) காலை ஆறுகால்மடத்தில் உள்ள தேநீர் கடைக்கு நடந்து சென்றுள்ளார். யாழ்ப்பாணத்தில் இருந்து ஆறுகால்மட வீதியால் உந்துருளியில் வந்த நபர் முதியவரை மோதித் தள்ளியுள்ளார். முதியவர் தலையில் பலத்த அடிபட்டு கீழே விழுந்துள்ளார். அதிக குருதி வெளியேறியது. முதியவரை மூடுந்து ஒன்றில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனைக்குக் கொண்டு சென்றனர். ஆனால் அவர் உயிரிழந்து விட்டார் என்று மருத்துவ மனையில் தெரிவிக்கப்பட்டது. உந்துருளியில் சென்றவரும் காயங்களுடன் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார் என்றனர்.

எரிபொருள் தாங்கி மோதியதில் தெல்லிப்பழையில் ஒருவர் உயிரிழந்தார். உடுவிலைச் சேர்ந்த சண்முகம் வடிவேலு (வயது53) என்பவரே அவ்வாறு உயிரிழந்தவராவார். (ம-8)

## மருந்துகளுக்கு....

தொடர்பில் உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

கடந்த வருடத்தில் 73 மருந்து வகைகளின் விலைகள் குறைக்கப்பட்டன என்றும் இந்த வருடத்தில் அதனை 100 வரை கொண்டு செல்வதே தனது இலக்கு என்றும் அவர் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சர் புதிய வருடத்தில் பணிகளை ஆரம்பிக்கும் சிறப்பு நிகழ்வு சுகாதார அமைச்சில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுகாதார அமைச்சின் பணியாளர்களின் உதவியுடன் கடந்த சில வருடங்களாக பெரிய வேலைத்திட்டங்களை செய்திருந்தோம். இலங்கையின் சுகாதார சேவைகள் தொடர்பில் உலகளாவிய ரீதியில் பேசும் வகையில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தோம். முடியாது என்று கூறியவற்றையும் பொது மக்களின் நலனுக்காக நாங்கள் செய்து காட்டினோம். அவை அனைத்தும் மக்களின் நலனுக்காகவே செய்தோம். கடந்த வருடத்தைப் போன்று இந்த வருடமும் உள்ள மிகப்பெரிய சவால்தான் தொற்றா நோய்களில் இருந்து மக்களைப் பாதுகாப்பதாகும். எமது நாட்டில் நூற்றுக்கு 75 வீதமானவர்கள் தொற்றா நோய்களாலேயே இறக்கின்றனர். தமது சொந்தப் பணத்தை செலவு செய்துதான் இந்த நோய்களையும் ஏற்படுத்திக்கொள்கின்றனர். உணவுப் பழக்க வழக்கம் மிகவும் முக்கியமானது. நோய்களை குணமாக்க அதனையும்விட அதிகளவான பணத்தைச் செலவழிக்க வேண்டிவரும்.

கடந்த சில ஆண்டுகளில் புகையிலை உபயோகத்தை கட்டுப்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தோம். அதற்கான சில முக்கிய முடிவுகளும் எடுக்கப்பட்டன. முடிவுகளை எடுக்கும்போது இவ்விதமான சவால்களுக்கு முகங்கொடுத்தோம். மென்பான்ங்களுக்கான வர்ணக் கலவை மற்றும் கலவைகள் தொடர்பில் குறியீட்டு முறை அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் குறித்த தொழில்துறை தலைகீழாக மாறியிருந்தது.

மனித உடலுக்கு நான்கு தேக்கரண்டி சீனி மாத்திரமே ஒருநாளைக்குத் தேவைப்படுகிறது. ஆனால், மென்பானங்கள் காரணமாக உடலுக்கு அளவற்ற விதத்தில் சர்க்கரையை சேர்க்கிறோம். இவ்வாறு கட்டுப்பாடுகள் விதித்தமையால் நிறைய உயிர்களை காப்பாற்ற முடிந்துள்ளது. 53 நாள்கள் கனவு அரசின் தலைமை அமைச்சர் மென்பானங்களுக்கான வரியை பெரிய அளவில் குறைத்திருந்தார். அதற்கு காரணம் என்னவென்று எமக்குத் தெரியும். மென்பான உற்பத்தி நிறுவனங்களிடம் மகிந்த ராஜபக்ச, வருடத்திற்கு எவ்வளவு வரியை செலுத்துகின்றீர்களென வினவியுள்ளார். 4 பில்லியன் செலுத்துவதாக அவர்கள் கூறியுள்ளனர். அப்போது அவர், வரியை நான் குறைக்கின்றேன். அந்த பணத்தைத் தமக்கு தருமாறு கோரியுள்ளார். எமக்கும் நிறுவனங்களுடன் இணைந்து பணம் சம்பாதித்திருக்க முடியும். ஆனால், நாங்கள் உலக சுகாதார தரநிர்ணயங்களுக்கு அமைவாகவே அனைத்தையும் செய்தோம். அமைச்சுகளின் செயலாளர்களிடம் நான் கோருவதாவது, மென்பானங்களுக்கான வரியை முன்பு இருந்தவாறே அறவிடுவதற்கு நடவடிக்கை எடுங்கள்.

இந்த வருடம் தனியார் மருத்துவமனைகளின் விலை நிர்ணயம் தொடர்பில் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்துவேன். இதய அறுவைச் சிகிச்சையை நோயாளரின் ஸ்டான்ஸுக்கு மூன்றரை இலட்சம்வரை பெறப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. நான் ஸ்டான்ட்ஸின் விலையை ஒரு லட்சத்து 5 ஆயிரம் ரூபா வரை குறைத்திருந்தேன். சேவைக் கட்டணங்கள் என்ற பேரில் அப்பாவி மக்களின் பணத்தைச் சூறையாடுகின்ற னர். தனியார் மருத்துவமனைகளில் சாதாரண நடுத்தர மக்கள் சேவைகளை பெற்றுக்கொள்ளும் வகையில் விலை நிர்ணயம் செய்யப்படும். சவாலுக்கு நான் தயாராக இருக்கிறேன். 2019ஆம் ஆண்டில் எனக்கு உங்கள் ஆதரவை வழங்குங்கள் - என்றார். (ம-10)

## சந்தேகநபரை...

ணியால் நேற்றுப் பெரும் பரப்பரப்பு ஏற்பட்டது. சந்தேகநபருக்கு எதிராக பிடியாணை உள்ளதால் அவரைக் கைது செய்ய பொலிஸார் முற்பட்டதால் பெண் சட்டத்தரணிக்கும் பொலிஸாருக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்பட்டன. பருத்தித்துறை நீதிமன்ற வளாகத்துக்கு வெளியேயும் இந்தப் பரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்து குறித்த சந்தேக நபரை தனது வாகனத்திலேயே பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றிலிருந்து அழைத்துச் சென்று வல்வெட்டித்துறைப் பொலிஸாரிடத்தில் ஒப்படைத்தார்.

கொள்ளைச் சம்பவத்தில் குறித்த சந்தேக நபருக்கு எதிராக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது. இந்த நிலையில் பிடியாணையை திரும்பப் பெறுவதற்காகவே குறித்த சட்டத்தரணி சந்தேக நபரை தனது மகிழுந்தில் நீதிமன்றத்துக்கு அழைத்து வந்துள்ளார். அது பயனளிக்காததை அடுத்து அவர் வல்வெட்டித்துறைப் பொலிஸில் சந்தேக நபரை ஒப்படைத்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். குறித்த பெண் சட்டத்தரணியை தொடர்பு கொள்ள முயன்ற போதிலும் அது பயனளிக்கவில்லை. (ம-8,26,37)

## தமிழர்களினுடைய...

வடக்கு மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி, முன்னாள் இராணுவத் தளபதி தயா ரட்னாயக்கா ஆகியோரின் பெயர்கள் அரச தலைவரின் பரிசீலனையில் உள்ளன.

இதற்கு மேலதிகமாக அரச தலைவர் மைத்திரிபால கேட்டுக் கொண்டதற்கு அமைவாக, ஈ.பி.டி.பியின் செயலர் டக்ளஸ் தேவானந்தா பரிந்துரைத்த, வடக்கு மாகாண முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா மற்றும் வடகிழக்கு மாகாண ஆளுநர் வரதராஜப் பெருமாளின் செயலராக இருந்த கலாநிதி விக்னேஸ்வரனின் பெயர்களும் அரச தலைவரின் பரிசீலனையில் உள்ளன என்று தெரியவருகின்றது. (ம-ஓ.5)

## கிராம...

பங்கேற்றனர்.

இதன்போதே கிராம எழுச்சி அபிவிருத்தித் திட்டத்தை தொடர்ந்து கொண்டு செல்வதற்கான அமைச்சரவை பத்திரத்தை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்தார். நீண்ட கலந்துரையாடலுக்குப் பின்னர் கிராம எழுச்சித் திட்டத்தை தொடர்ந்து கொண்டுசெல்ல அமைச்சரவை அனுமதி வழங்கியது.

கிராமிய மட்டத்தில் அபிவிருத்தியை முன்னெடுப்பதற்காக கம்பெரலிய திட்டம் கொண்டுவரப்பட்டது. இதற்கென ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்கும் 300 மில்லியன்கள் வரை நிதி ஒதுக்கப்பட்டது. கடந்த ஒக்டோபர் மாதம் இடம்பெற்ற அரசியல் குழப்பத்தின்போது இந்தத் திட்டம் இடைநிறுத்தப்பட்டது. இந்த நிலையிலேயே மீண்டும் இந்தத் திட்டத்தை தொடர்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது. (ம-10)

# நோயாளர்காவு வண்டியில் மருத்துவக் கழிவு ஏற்றத்தடை

யாழ்ப்பாணம்,ஜன 3

**வடக்கு மாகாணத்தில் உள்ள மருத்துவமனைகளின் மருத்துவக் கழிவுகளைநோயாளர்காவுவண்டியில்ஏற்றுவதுநிறுத்தப்பட்டுள்ளதாக மாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது;

வடக்கு மாகாணத்தில் உள்ள மருத்துவ மனைகளில் மருத்துவ கழிவுகளைஅகற்றுவதற்கு நோயாளர்காவு வண்டிகள் பயன்படுத்தப்படுகின்றன. சிறிஞ், வெற்று மருந்து குப்பிகள், போன்றபல்வேறுமருத்துவகழிவுகள் மருத்துவ மனைகளில் சேருகின்றது. இதனை உரிய முறையில் அகற்றுவது கட்டாயமானது.

இதனை அகற்றுவதற்கு சில சந்தர்ப்பங்களில் நோயாளர் காவு வண்டிகள் பயன்படுத்தப் படுகிறது. இதனால் நோயாளர் காவுவண்டிசேவை பாதிக்கப்படுவடுதுடன், வண்டியின் சுகாதாரமும் பாதிக்கப்படுகின்றது.

மருத்துவ கழிவுகளை உடனடியாக அப்புறப் படுத்தி மருத்துவமனையை சுகாதர முறையில் வைத்திருப்பதற்கான தேவை கருதி நோயாளர் காவு வண்டியில் அதனை ஏற்றி கொண்டு செல்கின்றனர்.

மருத்துவக் கழிவுகளை அகற்றுவதற்கு வண்டிகள் பயன்படுத்தும்போது ,நோயாளர்களை வேறுறொரு மருத்துவ மனைக்கு மாற்ற வேண்டிய சந்தர்ப்பம் அல்லதுநோயாளர்ஒருவரை ஏற்றவேண்டியதேவைஏற்படும்போது சிக்கல் உண்டாகின்றது. நோயாளர்களை ஏற்றுவதற்கு இந்த வண்டிகள் தூய்மையாக இருப்பது அவசியம்.

இவை அனைத்தயும் கருத்தில் கொண்டு மருத்துவ கழிவுகளை ஏற்றுவதற்கு நோயாளர் காவு வண்டி பயன்படுத்துவது நிறுத்தப்பட்டுள்ளது. பதிலாகமருத்துவக் கழிவுகளைஏற்றுவதற்கு வேறு பழைய வண்டிகள் பயன்படுத்தப்படுகிறது. இதுதொடர்பில் பிராந்திய சுகாதார பணிமனைகள் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுஎன்றுதெரிவிக்கப்பட்டது. (ஐ-7)



## சீரமைக்கப்பட்ட வீதி கையளிப்பு

கொடிகாமம், ஜன. 3

கிராம எழுச்சித்திட்டத்தின் கீழ் 2 மில்லியன் ரூபா செலவில் சீரமைக்கப்பட்ட கோப்பாய்பிரதேசசபைக்குஉட்பட்ட ஊரெழு மேற்குஆலடிவீதி நேற்றுமுன்தினம் மாலை4மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

கோப்பாய் சமூக ஆர்வலர் முகுந்தன் தலைமையில் நடைபெற்றநிகழ்வில்முன்மைவிருந்தினராகநாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் கலந்து கொண்டார்.

நிகழ்வில்வடக்குமாகாணசபையின்முன்னாள்உறுப்பினர் பா.கஜதீபன், வலி கிழக்கு பிரதேசசபை உறுப்பினர் அகீபன், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் யுகராஜ், பொருளாதார அபிவிருத்தி அலுவலகர் கவிதா, சமூக ஆர்வலர் வசந்தி மற்றும் பிரதேச மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ஐ-159)

## இ.போ.ச பேருந்து மீது தாக்குதல்

தெல்லிப்பழை, ஜன. 3

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமானபேருந்துமீதுஇனந்தெரியாதோரால் தொடர்சியாக இரு நாள்கள் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையத்தில்முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளன. தெல்லிப்பழை அருணோதயா பாடசாலையை அண்மித்த பகுதியில் கடந்த ஞாயிறுமற்றும் திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளது. வாகனஇலக்கங்கள் மறைக்கப்பட்ட உந்துருளியில் முகங்களை மூடியவாறு வந்த கும்பல் ஒன்றே பேருந்துகள் மீது போத்தல்களால் வீசி தக்குதல்மேற்கொண்டது. இதனால்பயணிகளும் சிரமங்களை எதிர்கொண்டனர்என்றும்முறைப்ப்பாடுசெய்யப்பட்டுள்ளது. மேலதிகவிசாரணையைதெல்லிப்பழைபொலிசார்மேற்கொண்டுவருகின்றனர். (ஐ-26)

## வீதியின் சீத்துவக்கேட்டால் வயலோரம் புதைந்த பேருந்து

### மாணவர்கள் பரிதவிப்பு



யாழ்ப்பாணம், ஜன. 3

மாணவர்களுடன்சென்றபேருந்து வீதியோரமாகவயலுக்குள் புதைந்ததால் அச்சத்தில் அலறினர். பின்னர் அவர்கள் எதுவித சேதங்களும் இன்றி மீட்டெடுக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் வலிகாமம் சுழிபுரம் காட்டுப்புலம் பாண்டவெட்டையில் சில நாள்களுக்கு முன்னர் இடம்பெற்றது.

சுழிபுரத்தில் உள்ள வெண்கரம் வள நிலையத்தில் மாணவர்களுக்கானவருடாந்தஒன்றுகூடல்நிகழ்வுகடந்தஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. அராலி, பொன்னாலை, பாண்டவெட்டை காட்டுப்புலம் பிரதேசங்களில் உள்ள வெண்கரம் படிப்பகங்களில் கல்வி பயிலும் நூற்றுக்கணக்கான மாணவர்கள் குறித்த பேருந்தில் ஏற்றிவரப்பட்டனர்.

பேருந்து பாண்டவெட்டையில் இருந்து சுழிபுரம் நோக்கி வந்துகொண்டிருந்தபோதுவீதியால்சென்றமோட்டார்சைக்கிள்ஒன்றுக்குவழிவிட முற்பட்டபோது வீதியோரமாக-வயலுக்குள் சரிந்து புதைந்தது. வீதியோரமாக இருந்து பெரிய கல்ஒன்றுடன்வாகனத்தின் அடிப்பகுதிதொடுகையுற்றதால் வாகனம் வயலுக்குள் குடை சாயும் நிலையில் இருந்து தப்பித்துக்கொண்டது.

மாணவர்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர். கால்நடையாகசுழிபுரம்வெண்கரம்வளநிலையத்துக்குக்கூட்டிச் செல்லப்பட்டனர். இளைஞர்கள் மூன்றரை மணிநேர போராட்டத்தின் பின்னர் வாகனத்தை மீட்டனர்.

இந்த வீதியைத் திருத்தித் தருமாறு பிரதேச மக்கள் தொடர்ச்சியாகக்கோரிக்கைவிடுத்துவருகின்றனர். அந்தவீதியைத் திருத்துவதில் அரச அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் தொடர்ந்தும் அசமந்தப் போக்காகவுள்ளனர் என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். (து)



யாழ்ப்பாணப் பிரதேசத்தில் வறுமை நிலையின் கீழ் வாழுகின்ற குடும்பங்களைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட10 மாணவர்களுக்குஈருருளிகள்வழங்கப்பட்டன. இந்தநிகழ்வானது யாழ்ப்பாணம் பாதுகாப்புப் படைக் கட்டளைத் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. (ஐ)

## சாவகச்சேரி நீதிமன்றில் 3 லட்சம் தண்டம்

சாவகச்சேரி, ஜன. 3

பருவகால விடுமுறையின் பின்னர் நேற்றுமுன்தினம் ஆரம்பமான சாவகச்சேரிநீதிமன்றில் 3 லட்சத்து 25 ஆயிரம் ரூபா தண்டமாக விதிக்கப்பட்டது.

பருவ கால விடுமுறை காலத்தில் வாகனச் சாரதிகளுக்கு எதிராக ப்திவு செய்யப்பட்ட வழக்குகளை நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தனர்.

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிய 3 உழவு இயந்திர சாரதிகளுக்கு முறையே 80 ஆயிரம், 75 ஆயிரம், 50 ஆயிரம் ரூபாவும் ஆவணங்களின்றி வாகனம் செலுத்தியவருக்கு 16 ஆயிரத்து 500 ரூபாவும் காப்புறுதி பத்திரமுமின்றி வாகனம் செலுத்திய நால்வருக்கு தலா 7ஆயிரத்து 50 ரூபா வீதமும் மதுபோதையில் வாகனம் செலுத்திய ஐவருக்கு தலா 7ஆயிரம்ரூபா வீதமும் போக்கு வரத்து விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்தியதாக குற்றஞ் சாட்டப் பட்டவருக்கு முறையே ஆயிரம் ரூபா தொடக்கம் 5ஆயிரம் ரூபா வரை தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-9)

## பழமை வாய்ந்த பேருந்து தரிப்பிடம் கனரக வாகனம் மூலம் இடித்தழிப்பு

சாவகச்சேரி, ஜன. 3

சாவகச்சேரிபெரிய அரசடிச் சந்தியில்கடந்த50வருடங்களுக்கு முன்னர் லயன் சங்கரப்பிள்ளை நினைவாக அவரது குடும்பத்தினரால் அமைக்கப்பட்ட பயணிகள் பேருந்து தரிப்பிடக் கட்டடம் கனரக வாகனம் மூலம் இடித்து நொருக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு 7 மணியளவில் இடம்பெற்றாக அப்பகுதிமக்கள்தெரிவித்தனர்.

இந்த பயணிகள் பேருந்து தரிப்பிடக்கட்டடம்நீண்டகாலமாக அந்தப் பகுதியில் காணப்பட்டது எனவும் இதற்குப் பக்கத்தில் புதிதாக சனசமூக நிலையம் அமைக்கப்பட்டுள்ள நிலையிலேயே இந்தக் கட்டடம் உடைக்கப்பட்டதாகமக்கள் கவலைதெரிவித்தனர்.

இது தொடர்பாக சாவகச்சேரி நகரசபை தவிசாளருடன்தொடர்புகொண்டுகேட்டபோது,

குறித்தபயணிகள்பேருந்து தரிப்பிடக்கட்டடம்நீண்டகாலமாக காணப்படுகிறது. போர் காலத்தில் கூட கட்டடம் சேதமடையாமல் காணப்பட்டது.

இதற்கு அருகில் இருந்த பெரிய அரசடி சனசமூக நிலையம் போரின் போது முற்றாகச் சேதமடைந்து காணப்பட்டது.

சனசமூகநிலையக்கட்டடம் அமைந்திருந்த பகுதி வீதி அதிகார சபையின் எல்லைக்குள்காணப்பட்டதால் நகர அபிவிருத்தி அதிகார சபையினர் புதிய கட்டடம் அமைக்க அனுமதி மறுத்துள்ளனர்.

இதனால்நிலையத்தினறால் கட்டடம்கட்டுவதற்கு விண்ணப் பித்த போதிலும் சபையினர்அனுமதிமறுத்துள்ளனர். தற்போது சபையின் அனுமதியின்றியே சனசமூக நிலையக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில் பயணிகள் பேருந்துநிலையக்கட்டடம் கனரக வாகனத்தின்மூலம் உடைக்கப்படுவதாக உறவினர்களால் எமக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் உரியநடவடிக்கைஎடுக்கப்படும்என்றார்.

இந்த கட்டடம் உடைக்கப்பட்டமைதொடர்பில்நேற்று முன்தினம் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதாகஉறவினர்களால்தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)



## நூல் நிலையம் திறப்பு

வடமராட்சி, ஜன. 3

வடமராட்சி கிழக்கு பொற்பதிக் கிராமத்தில் நூல்நிலையம் ஒன்று கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வடமராட்சிக் கிழக்கு பொற்பதிக் கிராமத்தில் நீண்டகாலமாக சீரமைப்புசெய்யப்படாமல்காணப்பட்ட இக்கட்டடத்தைபுலம் பெயர் உறவுகளின் நிதிப்பங்களிப்போடு பொற்பதி சமூக சேவைஒன்றியத்தினர்சீரமைத்துநூல்நிலையமாகமாற்றியமைத்துள்ளனர்.

கட்டடத்தின் நாடாவை மனற்காடு பங்குத்தந்தை டியூக் வின்டன் வெட்டித் திறந்து வைத்தார். (ஐ-70)

# சரவணபவன் எம்.பியின் நிதியில் வீதிகளுக்கு மின் விளக்குகள்





கொடிகாமம், ஜன. 3
சாவகச்சேரிப் பிரதேச சபைக்கு உட்பட்ட முதன்மை வீதிகளான கைதடி மற்றும் நாவற்குழி சந்திகளில் மின்விளக்குப் பொருத்தும் பணி நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.
நாடாளுமன்ற உறுப்பினரின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு -செலவுத் திட்ட நிதியிலிருந்து கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க. வாமதேவன் தலைமையில் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டன.
நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன், சாவகச்சேரிப் பிரதேச சபை உபதவிசாளர் செ. மயூரன், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளரும் யாழ்ப்பாணம் சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் ஆசிரியருமான செ.பிரதாப், சாவகச்சேரிப் பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 18 எல் ஈ டி மின் விளக்குகள் சாவகச்சேரிப் பிரதேச சபையின் மின் இணைப்பாளர் இ.சாந்தரூபனின் மேற்பார்வையில் பொருத்தப்பட்டன . (ஐ-159)

## நகை திருடிய குற்றச்சாட்டு

# ஒரு வழக்கில் பிணை; மற்றொரு வழக்கில் மறியல்

யாழ்ப்பாணம், ஜன. 3

**யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நோயாளியிடம் தங்க நகையைத் திருடிய குற்றசாட்டில் கைது செய்யப்பட்ட பெண், நல்லூர் ஆலயத் திருவிழாக் காலத்தில் பெண்ணிடம் சங்கிலி அறுத்தவர் என்பது பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.**

அதனால் மருத்துவமனையில் நோயாளியிடம் திருடிய குற்றச்சாட்டு வழக்கில் பிணை வழங்கிய யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம், நல்லூர் ஆலயத்தில் பெண்ணிடம் சங்கிலியைத் திருடிய வழக்கில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது.
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குச் சிகிச்சைக்கு வருவோரின் தங்க நகைகள் களவாடப்படுவது தொடர்பில் மருத்துவமனை நிர்வாகத்துக்கு தொடர்ச்சியாக பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. மருத்துவமனை வளாகத்தினுள் பொருத்தப்பட்டு உள்ள மறைகாணிகளின் (சிசிரிவி) உதவியுடன் நகைகளைத் திருடிய சந்தேகத்துக்குரிய பெண்ணொருவர் அடையாளம் காணப்பட்டார். அவரை மருத்துவமனைப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மடக்கி பிடித்து காணொலி ஆதரத்துடன் யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் சில வாரங்களுக்கு முன்னர் ஒப்படைத்தனர்.
கடந்த சனிக்கிழமை மருத்துவமனைக்கு வந்த வயோதிபப் பெண்ணொருவரிடம் இருந்து சங்கிலி ஒன்று களவாடப்பட்டு உள்ளது. அது தொடர்பில் அந்த வயோதிபப் பெண் மருத்துவமனை நிர்வாகத்திடம் முறையிட்டார். மறைகாணிகளைப் பரிசோதித்தபோது, நகைகளை முன்னர் திருடிய குற்றச்சாட்டில் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட பெண்ணே மீண்டும் அத்தகைய முயற்சிகளில் ஈடுபடுவது கண்டறியப்பட்டது. பொலிஸாருக்கு இது தொடர்பில் அறிவிக்கப்பட்டது.
காணொலியை ஆராய்ந்த யாழ்ப்பாணம் பொலிஸார் அந்தப் பெண்ணை முல்லைத்தீவில் வைத்து நேற்றுமுன்தினம் கைது செய்தனர். மேலும் இரண்டு பெண்கள் உள்பட மூவர் கைது செய்யப்பட்டனர். அந்தப் பெண்ணிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் நல்லூர் ஆலயத் திருவிழாக் காலத்தில் பெண்ணொருவரிடம் சங்கிலி அறுத்ததையும் அவர் ஒத்துக்கொண்டார். அந்தச் சங்கிலி நகை வேலை செய்பவரிடம் விற்பனை செய்ததையும் சந்தேகநபர் தெரிவித்தார்.
சம்பந்தப்பட்ட நகை வேலை செய்பவரை அழைத்து விசாரணை செய்த பொலிஸார், சந்தேகநபரால் விற்பனை செய்யப்பட்ட சங்கிலி உருக்கப்பட்டு தங்கக் கட்டியாக மீட்டனர். அதனால் நகை வேலை செய்பவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நோயாளியிடம் தங்க நகையைத் திருடியமை மற்றும் நல்லூர் ஆலயத் திருவிழாக் காலத்தில் பெண்ணிடம் சங்கிலி அறுத்தமை என்று இரண்டு குற்றச்சாட்டுக்களுக்குத் தனித் தனியே வழக்குகளைப் பதிவு செய்தனர்.
சந்தேகநபரான பெண், அவருடன் கைது செய்யப்பட்ட மேலும் மூவர் மற்றும் நகை வேலை செய்பவர் என்று 5 பேர் யாழ்ப்பாணம் நீதிவான் அன்ரனி சாமி பீற்றர் போல் முன்னிலையில் நேற்று முன்தினம் முற்படுத்தினர்.
வழக்குகளை விசாரணை செய்த நீதிவான், சந்தேகநபருடன் கைது செய்யப்பட்ட மூவரையும் நகைத் தொழிலாளியையும் பிணையில் விடுவித்தார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் திருடிய நகை சந்தேகநபரிடம் மீட்கப்பட்டதால் அந்த வழக்கில் அவருக்குப் பிணை வழங்கப்பட்டது. நல்லூர் ஆலயத்திருவிழாவில் பெண்ணிடமிருந்து அபகரித்த சங்கிலி உருக்கப்பட்டுள்ளது. அந்த வழக்கில் சந்தேகநபரான பெண்ணை எதிர் வரும் 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் அன்ரனி சாமி பீற்றர் போல் உத்தரவிட்டார்.
(ஒ.5.37)

## அதிபர்களுக்கு நாளை கூட்டம்

சாவகச்சேரி, ஜன.3
தென்மராட்சிக் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் வலய மாநாட்டு மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்க நடைபெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர்சு.சுந்தரசிவம் அறிவித்துள்ளார். (ஐ-9)

## இளம்குடும்பத் தலைவர் தவறான முடிவெடுத்து சாவு

சாவகச்சேரி.ஜன.3
திருமணமாகி ஏழு மாதங்களேயான 24 வயது இளம் குடும்பத் தலைவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு மீசாலை கிழக்கு வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மித்த பகுதியில் இடம்பெற்றது. குறித்த குடும்பத் தலைவரை உறவினர்கள் மீட்டு. சாவகச்சேரி மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். இவரைப் பரிசோதனை செய்த மருத்துவர் ஏற்கனவே சாவடைந்துள்ளார் எனத் தெரிவித்தார்.
சாவகச்சேரி பொலிஸார் குடும்பத் தலைவரின் சாவு தொடர்பாக விசாரணை களை நடத்தி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர்.
அறிக்கையைப் பார்வையிட்ட நீதிவான் பிரதேச திடீர் சாவு விசாரணை அதிகாரி சீ.சீ. இளங்கீரன்மூலம் விசாரணை களை நடத்தி அறிக்கை தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ஐ-9)

## வலி.தென்மேற்குப் பிரதேசத்தில்


# பொருத்தமற்ற செயற்பாடுகளுக்கு சபை உறுப்பினர்கள் கடும் விசனம்

வலிதென்மேற்கு, ஜன. 3
வலி.தென்மேற்கு பிரதேசத்தில் கட்டுப்பாடின்றி வீதிகளில் நிறுத்தி வைக்கப்படும் முச்சக்கர வண்டிகள்,மயானத்தில் சடலம் எரிப்பதில் சமூக மட்டத்தில் ஏற்படுகின்ற ஏற்றத்தாழ்வு,ஒப்பந்த வேலைகளில் உண்டாகும் காலதாமதம் தொடர்பில் பிரதேச சபை உறுப்பினர்களால் சபையில் சுட்டிக் காட்டப்பட்டது.
வலி.தென்மேற்கு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் கடந்த வாரம் தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போதே உறுப்பினர்களால் இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டதுடன் வரியிறுப்பாளரின் நலன் கருதி இக்குறைபாடுகளுக்கு உடனடியாகத் தீர்வு காணுமாறு தவிசாளரைக் கோரியுள்ளனர்.
உறுப்பினர் திருமதி தர்மசீலன் செந்தினி உரையாற்றும் போது கூறியதாவது,
வலி.தென்மேற்கு பிரதேசத்தில் கட்டுப்பாடின்றி வீதிகளிலும் பேருந்து தரிப்பு நிலையங்களிலும்,பாடசாலைகளுக்கு முன்பாகவும் முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைப்பதனால் மாணவர்கள் உட்பட பொது மக்கள் சிரமங்களுக்குள்ளாகிறார்கள்.
சில சமயங்களில் விபத்துக்கள் ஏற்படுத்தக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. எனவே முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைப்பதற்கு குறிப்பிட்ட இடங்களை அடையாளப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். என்றார்.
உறுப்பினர் திருமதி சிவராஜா மரிறொசானி உரையாற்றும் போது கூறியதாவது,
ஆனைக்கோட்டையிலுள்ள இந்து மயானத்தில் சடலங்கள் தகனம் செய்வதில் இன்றும் சமூக ஏற்றத்தாழ்வு நிலவுகிறது. அங்கு இரு இடங்களில் வைத்துச் சடலங்கள் தகனம் செய்யப்படுகின்றன. ஏனைய மயானங்களில் சமூக ஏற்றத் தாழ்வின்றி சடலங்கள் தகனஞ் செய்யப்பட்டு வரும்நிலையில் வலி.தென்மேற்கு பிரதேசத்திலுள்ள மேற்படி மயானத்தில் மட்டும் இந்த நிலை தொடர்ந்த வண்ணம் உள்ளது.
இது குறித்து தவிசாளர் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும். என்றார்.
உறுப்பினர் இ.வன்னியசேகரம் உரையாற்றுகையில் பிரதேச சபையினால் வழங்கப்படும் ஒப்பந்த வேலைகளை பொறுப்பபேற்பவர்கள் அந்த வேலையை வேறு ஒப்பந்த காரரிடம் வழங்குவதால் அபிவிருத்தி வேலைகளில் தடங்கலும்,தாமதமும் ஏற்படுகின்றன. எனவே ஒப்பந்த வேலைகளை வழங்கும்போது இது போன்ற நிலை எதிர்காலத்தில் ஏற்படாதவாறு வழங்க வேண்டும் - என்றார். (ஐ-115)

## தடை செய்யப்பட்ட மருந்தை வாழைக்குலைக்கு வீசினாரா?

*சாவகச்சேரியில் ஒருவர் கைது*

சாவகச்சேரி, ஜன 3
தடைசெய்யப்பட்ட மருந்தினை வாழைக்குலைகளுக்கு விசிறியதாக கூறப்படும் வியாபாரியை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கையும் மெய்யுமாப் பிடித்துள்ளார்.
இந்தச் சம்பவம் சாவகச்சேரி பொதுச் சந்தையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
குறித்த வியாபாரி வாழைக்குலைகளுக்கு தடை செய்யப்பட்ட மருந்து விசிறி பழுக்க வைத்து சுகாதாரத்திற்கு கேடு விளைவிப்பதாக பொதுமக்களால் முறையிடப்பட்டது.
பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பி.தளிர்ராஜ் யினால் இது தொடர்பில் விசாரணை செய்யப்பட்டது. இந்த நிலையில்
தடை செய்யப்பட்ட மருந்தினை விசி றிக் கொண்டு இருக்கும் போது சந்தேகநபரான வியாபாரி கைதுசெய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.
பொதுமக்களுக்கு சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கும் வகையில் தடை செய்யப்பட்ட மருந்தினை விசிறி வாழைக்காய்களை பழுக்க வைத்தார் என்ற குற்றச்சாட்டு டன் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது (ஐ-9)



# வீதிகளில் கழிவுகள் வீசிய 29 பேர் இதுவரை சிக்கினர்

யாழ்ப்பாணம்,ஜன.3

**யா**ழ்ப்பாணமாநகரபிரதேசத்தில்கண்டகண்ட இடங்களில்கழிவுப்பொருள்களைக் கொட்டியகுற்றச்சாட்டில்டிசெம்பர்மாதத்தில்29பேர்வரைபிடிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாண மாநாகரசபை ஆணையாளர் த.ஜெயசீலன் தெரிவித்தார்.

யாழ். மாநகர எல்லைக்குள் பிடிக்கப் பட்ட29பேரில்26பேரிடம்தலாஆயிரம் ரூபாவீதம்தண்டப்பணமும், ஏனைய மூவருக்குஎதிராகசட்டநடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில்கழிவுகளைவாகனங்களில் ஏற்றிவந்துஇரவுநேரங்களில்வீதிகளில் வீசிச் செல்பவர்களை மடக்கிப் பிடித்து அவர்களுக்குஎதிராகசட்டநடவடிக்கைகள் அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இரவு நேரங்களில் உந்துருளி , முச்சக்கர வண்டிகள் உள்ளிட்ட பல்வேறு வாகனங்களில் வீட்டுக்கழிவுகள்,வர்த்தகநிலையங்கள் , உணவகங்கள் , கோழி இறைச்சிக் கடைகளின் கழிவுகள் ஆகியவற்றை ஏற்றிவந்து மக்கள் நடமாட்டம் இல்லாத பகுதிகளில் வீசீச் செல்கின்றனர். இதனால்பெரும்சுகாதாரச்சீர்கேடுநிலவுவதாக சுட்டிக்காட்டு கின்றபோதும் குறித்த இழி செயலை படித்தவர்கள் முதல் பாமர்ர் வரையில் மேற்கொள்வது தொடர்ச்சியாக சுட்டிக்காட்டப்பட்டு வந்தது. இருப்பினும்குறித்தவிடயம்தொடர்பில் தொடர்ச்சியாக ஈடுபடுபவர்களை இனங்கண்டுஅவர்களைமடக்கிப்பிடிக்கும் பணியினை மாநகர சபையினர் மேற்கொண்டுவருகின்றனர். (ஜ-17)

## தெல்லிப்பழையில் விபத்து ஒருவர் சாவு

வடமராட்சி,ஜன.3

எரிபொருள் தாங்கி வாகனம் மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவம்தெல்லிப்பழைப்பகுதியில்நேற்றுமுன்தினம் மதியம் இடம்பெற்றுள்ளது.

இதில் உடுவிலைச் சேர்ந்த சன்முகம் வடிவேலு(வயது 53) என்றநபரே உயிரிழந்துள்ளார்.

சம்பவம்தொடர்பாக தெரியவருவது,

மல்லாகத்திலிருந்து தெல்லிப்பழை நோக்கிப் பயணித்த எரிபொருள்தாங்கி வாகனம் தெல்லிப்பழையிலிலுந்து மல்லாகம்நோக்கிவந்தநபரைமோதிவிபத்துக்குள்ளானது.

இதில்படுகாயமடைந்தநபர்யாழ்ப்பாணபோதனாமருத்துவமனையின் அதிதீவிரசிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டார்.

இந்தநிலையில்அவர்சிகிச்சைபயனின்றிநேற்றுஉயிரிழந்துள்ளார்.

எரிபொருள்தாங்கிவாகனசாரதிதெல்லிப்பழைபொலிசாரால்கைதுசெய்யப்பட்டதுடன்வாகனமும்பொலிஸ்நிலையத்துக்கு கொண்டுசெல்லப்பட்டதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

கொண்டுவரப்பட்டஎரிபொருள்தாங்கிவாகனத்தைதரிப்பதற்கான போதியவசதி தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் இல்லாத போதும் கடின முயற்சி செய்து வாகனத்தை தரிக்க பொலிஸார் முயற்சிசெய்தனர். இதனால் இரவு 7.40 மணியிலிருந்து 20 நிமிடங்கள் பொலிஸ் நிலைய முதன்மை வீதியில் போக்குவரத்து தடுத்து நிறுத்தப்பட்டதாக மக்கள் விசனம் தெரிவித்தனர். (ஜ-26)

## சிவப்பு உடை அணிந்த பெண்ணுக்கு மல்லாகம் நீதிவான் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.3

மல்லாகம் நீதிவான் நீதிமன்றுக்கு சிவப்பு உடை அணிந்து வருகை தந்திருந்த பெண் ஒருவரை எச்சரித்த நீதிவான், நீதிமன்றுக்கு நாகரிகமான முறையில் சமூகமளிக்கவேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார்.

மல்லாகம்நீதிவான்நீதிமன்றம், விடுமுறைக்காலம்நிறைவடைந்துநேற்றுமுன்தினம்செவ்வாய்க்கிழமைகாலைஆரம்பமானது. நீதிவான்ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில்வழக்குகள்விசாரணைக்கு வந்தன. வழக்குஒன்றில்முன்னிலையாகியிருந்த பெண் ஒருவர் சிவப்புச்சட்டை அணிந்திருந்தார்.

அவரது ஆடை தொடர்பில் விசனம் தெரிவித்த நீதிவான், நீதிமன்றுக்கு நாகரிகமாக சமூகமளிக்கவேண்டும் என்று எச்சரித்தார். ஒழுக்கமுடைய இடமாக நீதிமன்றம் உள்ளது என்றும் நீதிவான் சுட்டிக்காட்டினார்.

நீதிமன்றுக்கு வருகை தருவோரின் உடை தொடர்பில் நீதிமன்ற பொலிஸ் அலுவலகர் கண்காணிப்பது அவசியம். அந்த நடைமுறையே அனைத்து நீதிமன்றங்களிலும் பின்பற்றப்படுகின்றன. (ஜ-37)

## இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டு முதியவர் மருத்துவமனையில்

சாவகச்சேரி,ஜன.3

முதியவர்ஒருவர்இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்தச் சம்பவம் கைதடியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. கைதடி தெற்கைச்சேர்ந்த பொ.சுப்பையா வயது 68என்றமுதியவரேகாயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ஜ-9)

## ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள்

2018 ஆம் ஆண்டு ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களின் விவரங்கள் பாடசாலை அதிபர்களால் வெளியிடப்பட்டுள்ளன.

**வவுனியா கனகராயன்குளம் மகா வித்தியாலயம்**

**உயிரியல் பிரிவு**
சோ.பிருதிவி 3சி

**விஞ்ஞான பிரிவு**
த.தஜீபன் 3சி,சிலக்சன் சி2எஸ்

**உயிரியல் தொழில்நுட்ப பிரிவு**
க.நிசாந்தினி

**பொறியியல் தொழில்நுட்ப பிரிவு**
ப.தனுசிகன் 3சி

**கலைப் பிரிவு**
ஜெ.கிருசிகாஏ2பி,ம.தர்சிகாஏ2சி,பி.கிலானிகாபி2சி,
இ.அனுசாஜினிபி2சி,த.சுதர்சினிஏசிஎஸ்,

**யாழ்ப்பாணம் வட்டு இந்துக்கல்லூரி**

பொறியியல்தொழிநுட்பப்பிரிவு
த.தவநிதன் 2ஏபி (மாவட்டநிலை 2),கி.டெரிக்ஷன் 2ஏசி, ச.சர்மன் 2ஏபி,சி.டக்சன் பி2சி, சி, கபிலன் பி2சி, ச.சிறிரங்கன் 2பி,சி,கு.டனுசன்பி,2சிமாவட்டநிலை33

**உயிர் முறைமைத் தொழில்நுட்பம்**
ப.லக்சனா3பிமாவட்டநிலை14,ரா.துர்க்கா 3பி, மாவட்டநிலை16,சி.பானுஷா2பி,சி, மாவட்டநிலை23,ச.தனுசா2பி,சிமாவட்டநிலை26,ச.சதுஷா பி2சி

**வணிகப்பிரிவு**
ரி.சுஜீவன் ஏ2சி.எஸ்.மிதுசன் ஏபிஎஸ், வி.மதுசியா2பிஎஸ்

**கணிதப்பிரிவு**
ஆர்.துஸ்யந்தன்-ஏபிசி,கே.சாரங்கன்-ஏபிசி,கே.வித்தியா-ஏ2சி, ஏ.அனுசன்-ஏபிசி, எஸ்.தினேஸ் -2பிசி, ரீ. நிதர்சன்-2பிசி, ரீ.தஜீபன்-2பிசி, கே.சங்கவி-பி2சி,ரீ.தாரணிஏ,சி,எஸ்,எஸ்.கண்ணகிபாலன்-2பிஎஸ், ஆர்.வனஜா- பிசிஎஸ், ரீ.திலக்சன்-பிசிஎஸ்,ஆர்.மதுசா-பி,2எஸ்

**உயிரியல் பிரிவு**
ரீ.கீர்த்தனா-ஏ2பி ஜே.வினோதினிஏபிசி, பீ.பிரதா- 2பிசி, எஸ்.சோபிதா -பி2சி,எம்.ரம்மியாபி2சி,பீ.அனுசியா-2சி,எஸ்,ஏ. அஜிதா- 2சிஎஸ்,கே.மோகனா2சிஎஸ்
கலைப்பிரிவு
எஸ்.நல்விழி-2ஏபி, எஸ்.தக்ஷனா- 2ஏபி எஸ்.தபோதினி- ஏபிசி, ஜே.சயந்தினி2ஏசி ,கே.குயின்சி-ஏ,2பி, என்.பிர யுசா-2பிசி,கே.சுதர்சன்-ஏபிசி,வி.சுகிர்தாஸ்-ஏபிஎஸ்,ஆர்.யாழினி-ஏபிசி,என்.விஜயநந்தினி-2பிசி.
பொதுத்துறை
வீ.ஆதித்தன்-பி2சி.

நுளம்புகட்டுப்பாட்டுநடவடிக்கை

## யாழ்ப்பாண மாநகர பிரதேசத்தில் 2ஆயிரத்து 447 வீடுகள்சோதனை

யாழ்ப்பாணம் ஜன.3

யாழ்ப்பாண மாநகர பிரதேசங்களில் இடம்பெற்ற இருநாள்சிறப்புநுளம்புகட்டுப்பாட்டுநடவடிக்கையின் போது 2ஆயிரத்து 447 வீடுகள் சோதனையிடப்பட்டுள்ளன.

இந்த சிறப்பு நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கை கடந்த மாதம் 27,28 ஆம் திகதிகளில் இடம்பெற்றன.

கடந்த 27 ஆம் திகதி ஜே/76,78,83,84,86 ஆகிய கிராம அலுவலகர் பிரிவுகளில் கட்டுப்பாட்டு நடவடிக்கையின் போது அங்கு ஆயிரத்து 147 வீடுகள் சோதனையிடப்பட்டன.

இந்த சோதனையின் போது 17 வரையிலான வீட்டு சுற்றாடல்களில் நுளம்பு குடம்பிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டன. அந்த வீட்டு உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. அத்துடன் போதிய சுகாதார வசதிகள் இன்றி காணப்பட்ட 87வரையிலான குடியிருப்பு சுற்றாடல்கள் உடனடியாக துப்புரவு செய்யக் கோரி சிவப்பு அறிவித்தல்களும் வழங்கப்பட்டுள்ளன.

மறுநாள் 28 ஆம் திகதி ஜே/92,100,101,105,108 ஆகிய கிராம அலுவலகர் பிரிவுகளில் ஆயிரத்து 300 வரையான வீடுகள் சோதனையிடப்பட்டன. இதில் 19 இடங்களில்குடம்பிகள்காணப்பட்டவீட்டுஉரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

சுகாதார சீர்கேடாக சுற்றாடலை வைத்திருந்த 103 பேருக்கு உடனடியாக துப்புரவு செய்ய கோரி சிவப்பு எச்சரிக்கைவழங்கப்பட்டுள்ளனஎன்றும்தெரிவிக்கப்பட்டது. (ஜ-17).

## தெல்லிப்பழை பிரதேசசெயலகம் இரண்டாமிடம்

தெல்லிப்பழை, ஜன. 3

தேசிய உற்பத்தித் திறன் செயலகத்தால் அனைத்து அரச அலுவலகங்களிடையேயும் கடந்த வருடம் நடத்திய உற்பத்தித் திறன் விருது வழங்கும் தேசிய போட்டியில் பிரதேச செயலக ரீதியில் தெல்லிப்பழைப் பிரதேச செயலகம் இரண்டாமிடம் பெற்றுள்ளது.

விருதுகள் கொழும்பில் நடைபெறும் நிகழ்வில் அரச தலைவரால் வழங்கப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்டச் செயலகங்களிடையே நடத்தப்பட்ட உற்பத்தித் திறன் போட்டியில் கிளிநொச்சி மாவட்டம் முதலிடத்தையும் யாழ்ப்பாண மாவட்டம் இரண்டாமிடத்தையும் பெற்றுள்ளன.

வழங்கப்படவுள்ள விருதின் மாதிரிப் படமும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதென பிரதேச செயலர் எஸ்.சிவசிறி தெரிவித்தார். (த)

# இன்று மன்னாரில் தண்ணீர் விநியோகம் தடை

மன்னார், ஜன.3
மன்னார் பிரதேசத்தின் பிரதான நீர் விநியோகக் குழாய்களில் அவசரத் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட உள்ளமையினால், மன்னாரின் பல பகுதிகளில் இன்று
வியாழக் கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை 8 மணித்தியால நீர் விநியோக துண்டிப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.
இந்த நீர் விநியோகத் துண்டிப்பானது மன்னார் நகரம் மற்றும் நகரை அண்டிய பகுதிகளான பள்ளிமுனை, சவுத்பார், தாழ்வுபாடு, கீரி, தாராபுரம், புதுக்குடியிருப்பு, கரிசல், எருக்கலம்பிட்டி, சாந்திபுரம், எழுத்தூர், மூர்வீதி, பெற்றா, உப்புக்குளம் உட்பட மன்னார் நகரின் பல பகுதிகளிலும் நீர் துண்டிப்பு இடம்பெறும் என மன்னார் நீர்வடி காலமைப்பு சபை பொறுப்பதிகாரி டீ.யசோதரன் தெரிவித்துள்ளார். (க-60)

# குருதிக்கொடை நிகழ்வு

வடமராட்சி,ஜன.3
வடமராட்சி மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தால் கடந்த 29ஆம் திகதி காலை 8.30 தொடக்கம் 1.30 வரை குருதிக்கொடை நிகழ்வு இடம்பெற்றது. கழக மண்டபத்தில் கழகத் தலைவர் த. வேணுகானன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கிளிநொச்சி கொக்காவில் பகுதியில் 2018 ஆம் ஆண்டு ஜனவரி 9 ஆம் திகதி வாகன விபத்தில் சாவடைந்த அமரர்களான ஜெயச்சந்திரன். அருண். சிந்துஜன். கிருஸ்ணரூபன் ஆகியோரின் முதலாம் ஆண்டு நினைவாக இது இடம்பெற்றது. நிகழ்வில் 77 பேர் குருதிக் கொடை வழங்கினர். நிகழ்வின் போது பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (க)



# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு படையினர் உதவி

முல்லைத்தீவு.ஜன.3
முல்லைத்தீவு மாவட்டத்தில் மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்யும் நடவடிக்கையில், படையினர் ஈடுபட்டுள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட செல்வபுரம் கிராம மக்கள் குடி தண்ணீரைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வந்த நிலையில், படையினரின் ஏற்பாட்டில் ஒரு தொகுதி குடும்பங்களுக்கு குடிதண்ணீர்ப் போத்தல்கள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.
இதேவேளை பண்டாரவன்னி, மன்னாகண்டல் பகுதிகளில் மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்டு தங்கிய இடங்களைச் சீர் செய்து கொடுக்கும் நடவடிக்கையிலும் படையினர் ஈடுபட்டுள்ளனர். (க-ரி3)



# வெள்ளப் பாதிப்பு உதவி வழங்கல்

முல்லைத்தீவு,ஜன.3
முல்லைத்தீவு மாவட்டம் கற்சிலைமடு,பேராறு, முத்துஐயன்கட்டு இடதுகரை, மன்னாகண்டல் ஆகிய கிராமங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 426 குடும்பங்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ந.சிவசத்திஆனந்தன் உதவிப் பொருள்களை வழங்கிவைத்தார்.
கற்சிலைமடு மற்றும் முத்துஐயன்கட்டு, இடதுகரை ஆகிய கிராமங்களில் 60 குடும்பங்களுக்கும், மன்னாகண்டல் ஆலயத்தில் தங்கியிருக்கும் 45 குடும்பங்களுக்கும், பாடசாலையில் தங்கியுள்ள 108 குடும்பங்களுக்கும், பொதுமண்டபத்தில் தங்கியுள்ள 108 குடும்பகளுக்குமாக மொத்தம் 426 குடும்பங்களுக்கு உதவிப் பொதிகள் வழகி வைக்கப்பட்டுள்ளன.
அத்துடன் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மக்களுக்காக பிரான்ஸ் நாட்டில் இயங்கும் ரி.ஆர்.ரி வானொலியினரும் அதன் இரசிகர்களும் 4இலட்சம் ரூபா நிதியினை வழங்கிவைத்தனர். (க-500)

# வெள்ள இடர் காரணமாக 257 வீதிகளும் 57 பாலங்களும் கிளிநொச்சியில் சேதம்





கிளிநொச்சி,ஜன.3
கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ள இடர் காரணமாக 257 வீதிகளும், 57 பாலங்களும் சேதமடைந்துள்ளன என மாவட்டச் செலயக தகவல்கள் தெரிவிக்கின்றன.
வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம், பிரதேச சபைகள், மற்றும் நீர்ப்பாசனத் திணைக்கள வீதிகளே இவ்வாறு சேதமடைந்துள்ளன.
இவற்றுள் பல வீதிகள் மிகவும் மோசமாகவும், ஏனையவை பகுதியளவிலும் சேதமுற்றுள்ளன.
சேதமுற்றுள்ள வீதிகளைச் சிறப்பு நிதி ஒதுக்கீட்டின் கீழ் விரைந்து சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், இல்லையெனில் மக்களின் இயல்பு வாழ்க்கைக்குப் பெரும் இடையூறாக ஏற்படும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(க-35)

# முல்லைத்தீவு மாவட்டக் காணி தொடர்பில் வெளியிடப்பட்ட தகவல் பொய்யானது

*நாடாளுமன்ற உறுப்பினர்*
*சாந்தி சிறிஸ்கந்தராஜா தெரிவிப்பு*

முல்லைத்தீவு,ஜன.3
முல்லைத்தீவு மாவட்டத்தில் மொத்தம் 9 ஆயிரத்து148 ஏக்கர் நிலம் மட்டுமே படையினர் வசம் உள்ளதாக நல்லிணக்க செயலணியினால் வெளியிடப்பட்ட தகவல் பொய்யானது. 200ஏக்கர் நிலம் மட்டுமே முல்லைத்தீவு மாவட்டத்தில் விடப்பட்டுள்ளது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா தெரிவித்தார்.
இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்ததாவது :
முல்லைத்தீவு மாவட்டத்தில் படையினர் வசம் மொத்தமாக 9 ஆயிரத்து 148 ஏக்கர் நிலங்கள் உள்ளதாக நல்லிணக்க செயலணியினால் வெளியிடப்பட்ட தகவலில், இராணுவத்தினர் வசம் 540.29 ஏக்கர் தனியார் காணிகளும், 6 ஆயிரத்து 934.38 ஏக்கர் அரச காணியும் உள்ளதுடன், கடற்படையினர் வசம் 671 ஏக்கர் தனியார் காணியும் ,44.80 ஏக்கர் அரச காணிகளும் உள்ளன.
இதேபோன்று விமானப் படையினர் வசம் 958 ஏக்கர் அரச காணியுடன் சேர்த்து மொத்தம் ஆயிரத்து 211.29 ஏக்கர் தனியார் காணிகளும், 7 ஆயிரத்து 937.18 ஏக்கர் அரச காணிகளும் உள்ளன என தெரிவிக்கப்பட்டது. இதன் பின்னர் முல்லைத்தீவு மாவட்டத்தில் சுமார் 200 ஏக்கர் நிலமே விடுவிக்கப்பட்டன.
இந்த நிலையில் வடக்கு மாகாணத்திலேயே மிகவும் அதிக நிலங்களை அரசு அபகரித்துள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தினைப் பொறுத்தவரை மாவட்டத்தின் 60 ஆயிரம் ஏக்கர் நிலம் பறிமுதல் செய்யப்பட்டு விட்டது. இந்த நிலையில் 60 ஆயிரம் ஏக்கரில் படையினர் வசம் மட்டும் 40 ஆயிரம் ஏக்கர் வரையான நிலம் உள்ளது.
முல்லைத்தீவு மாவட்டத்தினில் இடம்பெறும் நில ஆக்கிரமிப்புத் தொடர்பில், கூட்டமைப்பினால் வெளிநாடுகளுக்குத் தெரியப்படுத்தப்பட்ட ஆவணங்களில் இவை தொடர்பில் தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டதனை மூடி மறைக்கும் நோக்கில் வேண்டுமென்றே வெளியிடப்பட்ட அரசியல் கலப்புள்ள ஒரு புள்ளிவிவரம் தற்போது படையினரிடம் உள்ளது - என்றார். (க-105)

# தள்ளாடிப் பிரதேசத்தில் பெயர்ப் பலகை இல்லை

மன்னார், ஜன.3
மன்னார் பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் அமைந்துள்ள தள்ளாடிப் பிரதேசத்தில் பெயர்ப் பலகை வைக்கப்படவில்லை என்று சில வரலாற்று நூலாசிரியர்களும், தள்ளாடியின் வரலாறு அறிந்தவர்களும் குற்றம் சுமத்துகின்றனர்.
இந்த விடயம் பற்றி மன்னார் பிரதேச சபை உறுப்பினர் கதிர்காமநாதன் விஜயனிடம் கேட்ட போது:
முற்காலத்தில் மாதோட்டமாக இருந்த மன்னார் நகரின் சிறப்பை அனைவரும் அறிவார்கள். மன்னார் மாவட்டத்தில் காணப்படும் தமிழர் வரலாறு தொடர்பான இடங்களையும் தகவல்களையும் பாதுகாக்கும் பொருட்டு எமது பிரதேச சபையின் இந்த வருடத்தின் முதலாவது அமர்வில் இதுதொடர்பாக கேள்வி எழுப்பித் தள்ளாடிச் சந்தியில் பெயர் பலகை வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று தெரிவித்தார். (க-213)





# கல்வி உதவி வழங்கல்

வவுனியா,ஜன.3
வன்னிப்பட்டறை மூலமாக கனடா உமா குடும்பத்தினரின் நிதி உதவியில் முல்லைத்தீவுப் புதுமாத்தளன் கிராமத்தில் வறிய மாணவர்களின் கற்றலுக்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.
தொடர்ச்சியாக வழங்கப்படும் இந்த மாதாந்த உதவிப்பணம் கடந்த திங்கட்கிழமை தமிழ் விருட்சத்தின் செயலரும் வன்னிப்பட்டறையின் இணைப்பாளருமான கவிஞர் மாணிக்கம் ஜெகனால் வழங்கி வைக்கப்பட்டது.
உதவியைப் பெற்று தங்கள் கற்றல் நடவடிக்கையினை அபிவிருத்தி செய்யும் மாணவர்களில் யோகேஸ்வரன் யோகவர்மன் அண்மையில் வெளிவந்த க. பொ.த.உயர்தர கலைப் பிரிவில் ஏ2 பி பெறுபேற்றைப் பெற்று பல்கலைக் கழகத்துக்குத் தகுதிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-110)



# பாடசாலைப் பொருள்கள் அன்பளிப்பு

மன்னார்,ஜன.3
மாந்தை மேற்குப் பிரதேச சபையின் வெள்ளாங்குளம் வட்டார உறுப்பினர் த.பகிரதனின் வேண்டுகோளுக்கு இணங்க, லண்டனில் வசிக்கும் கனகமுத்து சர்வகரனால் வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ள மாணவர்களுக்கு ரூபா ஒருலட்சத்து அறுபதாயிரம் பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன.
வெள்ளாங்குளம் மூன்று கிராம அலுவலர்கள் பிரிவில் உள்ள கணேசபுரம், தேவன்பிட்டி, பாலியாறு, மூன்றாம்பிட்டி உட்பட்ட ஆறு கிராமங்களின் மாணவர்களுக்கு வழங்கிவைக்கப்பட்டன.
மொத்தம் எண்பது மாணவர்களில் ஒவ்வொருவருக்கும் தலா இரண்டாயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் வழங்கிவைக்கப்பட்டதாக, மாந்தை மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் த.பகிரதன் தெரிவித்தார். (க-213)



## மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் மருத்துவமனையில் இருந்தோருக்கு உதவி

மன்னார், ஜன.3

புத்தாண்டு தினமான நேற்று முன்தினம் மன்னார் பொதுமருத்துவமனையில் சுகவீனமுற்று தங்கியிருக்கும் நோயாளர்களை மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் றிப்கான்பதியுதீன்நேரில்சென்றுபார்வையிட்டுஉதவிகளையும் வழங்கியுள்ளார்.

விடுதிகளில் தங்கியிருக்கும் நோயாளர்களுக்கு புது வருட வாழ்த்துக்களை தெரிவித்ததோடு, அவர்களுக்கு அன்பளிப்பையும் வழங்கி வைத்தார். (க-56)



## ‘உன்னை வெல் உலகை வெல்’ இளைஞர் முகாம்

கிளிநொச்சி, சின்மயா மிஷனின் இளைஞர் பிரிவினரின் ஏற்பாட்டில், 3 நாள்வதிவிட இளைஞர்முகாம் நடத்தப்பட்டுள்ளது.

‘உன்னைவெல் உலகைவெல்’ என்றதலைப்பில் கடந்த 28 ஆம் திகதி இயக்கச்சி பரம் பப்பா இராமதாசர் ஆச்சிரமத்தில் இடம்பெற்ற இந்த முகாமில், கிளிநொச்சி சின்மயாமிஷன் பிரமச்சாரிசிவேந்திரசைதன்யாவின்ஆன்மிகஉரை, தியான பயிற்சி, யோகா, உளவள பயிற்சி, சமூக வலைத்தளங்கள் தொடர்பான செயலமர்வு, விழுமிய விளையாட்டுக்கள், ஆளுமை விருத்தி பயிற்சிகள் முதலான பல்வேறு நிகழ்வுகளில் இளைஞர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றி பயனடைந்தனர்.

மதுரை காந்தியத்தைச் சேர்ந்த தேவதாஸ் காந்தி, யாழ் போதனாமருத்துவமனைஉளவளபயிற்சிநிபுணர் நவராஜ், யாழ்பல்கலைக்கழகபொறியியல்விரிவுரையாளர் காங்கேயன், உடுவில் பிரதேச செயலக அபிவிருத்தி அலுவலர் சுதர்சன் ஆகியோர் வளவாளர்களாககலந்துகொண்டனர்.

## தையல் இயந்திரம் வழங்கல்

வவுனியா, ஜன.3


தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் ஜேர்மன் மகளிர் அமைப்பின் அனுசரணையில் தையல் இயந்திரம் ஒன்று வழங்கி வைக்கபட்டது.

வவுனியா கணேசபுரத்தை சேர்ந்த பயனாளி ஒருவருக்கு ரூபா. 40 ஆயிரம் பெறுமதியான தையல் இயந்திரத்தை மாவட்ட கட்சி காரியாலயத்தில் வைத்து வவுனியா மாவட்ட மகளிர் அணியினர் வழங்கிவைத்தனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், மாவட்ட துணை செயலர் நாகராஜன், வவுனியா மாவட்ட மகளிர்அணித்தலைவிகனகம்மா, பிரதேசசபைஉறுப்பினர் அஞ்சலா, யாழ் மாவட்ட மகளிர் அணியின் சுஜித்தா ஆகியோர் கலந்துகொண்டனர். (க-110)



# பாதிக்கப்பட்ட எல்லைக் கிராமங்களை எவரும் கண்டுகொள்வது இல்லை



வவுனியா, ஜன.3

**போரால் பாதிக்கப்பட்ட எல்லைக்கிராமங்களை அபிவிருத்தி தொடர்பிலோ, உதவிகள் தொடர்பிலோ எவரும்கண்டுகொள்ளவில்லைஎனவடமாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.**

போர் இடம்பெற்றுக்கொண்டிருந்த போது, போரில் ஈடுபட்டிருந்த இரண்டு பிரிவினருக்கும் இடையே, போர் இல்லாத பிரதேசமாகக் காணப்பட்டுள்ள இந்தப்பிரதேசம்.

போர் முடிவுற்ற பிறகுகூட கவனிக்கப்படவில்லை. மீள்குடியேற்றசெயற்பாடுகள் அனைத்தும் கிளிநொச்சி, முல்லைத்தீவுமாவட்டங்களிலேயேநடைபெற்றன.

போர் நடைபெற்றுக்கொண்டிருந்த போது பாதிக்கப்பட்ட இப்படியான எல்லைக்கிராமங்கள் பலராலும் கண்டுகொள்ளப்படவில்லை.

இவ்வாறுபுதுவருடதினத்தில்ஓமந்தை, விளக்குவைத்தகுளம் பகுதியில் இடம்பெற்ற பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்னகள் வழங்கும் நிகழ்வில்கலந்துகொண்டுஉரையாற்றிய வடமாகாண சபை முன்னாள் சுகாதார அமைச்சர் மருத்துவர் ப. சத்தியலிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இவ்வாறான பிரதேசங்களைப் போருக்குட்பட்ட பிரதேசங்கள் என்று எந்த ஒரு தனியார் நிறுவனங்களும் அரசும்தங்களுடையஎண்ணிக்கைக்குள் கொண்டு வரவில்லை.

வவுனியா என்றதும் போரால் பாதிக்கப்படாத பிரதேசமாக நிறுவனங்கள் நினைப்பதுண்டு.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் என்றால் போர்ப் பாதிப்பிற்குள்ளான பிரதேசம் எனத் தெரிவிப்பார்கள்.

ஆனால் விளக்குவைத்தகுளம் போர் நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்தில் கூடப்போர் இடம்பெறும் ஒரு சூனியப் பிரதேசமாக, இரண்டு பிரிவினருக்கும் போர் இல்லாத பிரதேசமாகக் காணப்பட்டுள்ளது.

போர் முடிவுற்றபிறகு கூட மீள்குடியேற்ற செயற்பாடுகள் அனைத்தும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நடைபெற்றன.

இவ்வாறான கிராமங்களுக்கும் வாழ்வாதாரம், உட்கட்டுமானவேலைகள், வீட்டுத்திட்டம்எனபலவேலைத்திட்டங்கள் இருக்கின்றன.

நாங்கள் எங்களால் முடிந்தளவுக்கு அவ்வாறான வேலைத்திட்டங்களை பிரதேசசபையினூடாகவோ, அல்லது மாகாணசபையினூடாகவோ, வேறு பிரிவினரூடாகவோசெய்வதற்குதயாராக உள்ளோம் - என்றார். (க-111)

# சட்டத்துக்கு முரணாக இயங்கிய மதுபானசாலை மூடப்பட்டது

முல்லைத்தீவு, ஜன.3

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணப்பட்ட மணற்குடியிருப்பு மதுபானசாலை நிரந்தரமாக மூடப்பட்டுள்ளது.

சட்டத்துக்கு முரணான வகையில் குறித்த மதுபானசாலை இயங்கியதாக, அந்தப்பகுதி மக்கள் மற்றும் மக்கள் சார்பாளர்கள் தொடர்சியான எதிர்ப்பினை வெளியிட்டதைத் தொடர்ந்தே மூடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் து. ரவிகரன் கருத்துத் தெரிவித்தபோது,

இந்த மதுபானசாலை, 2016 ஆம் ஆண்டு ஜனவரி 24 ஆம் திகதியன்றுதிறக்கப்பட்டது.

இந்தமதுபானசாலைதிறக்கப்பட்டமையால், 21 வயதுக்கும் குறைந்த இளையவர்கள் மதுப்பழக்கத்துக்கு ஆளாகுவதாகவும், பொது இடங்களுக்கு அருகாமையில் மதுபானசாலைஅமைந்துள்ளதால், பலத்தஇடர்பாடுகளுக்கும் தாம் முகங்கொடுப்பதாகவும் அந்தப்பகுதியிலுள்ளபொதுமக்களும், பொது அமைப்புகளும்என்னிடம்தெரியப்படுத்தியிருந்தனர்.

இந்த நிலமைகள் தொடர்பாக ஆராயும் போது, மதுபானசாலைஅமைக்கப்பட்டபகுதியில்ஏற்கனவே, பதிவுசெய்யப்பட்டகோவில்கள், கல்விநிலையங்கள், சிறுவர்பூங்கா போன்றபொது இடங்கள் அமைந்திருந்தன.

மதுவரிச்சட்டத்தின் 52ஆம் இலக்க எச்.எல் விதிகளைமீறும்வகையிலேயேகுறித்தமதுபானசாலை அமைந்திருந்தது.

மதுபானசாலைதிறக்கப்பட்டதால்சிறுவர்கள் பலரும்மதுவுக்குஅடிமையாகும்அபாயமும் ஏற்பட்டிருந்தது. இது 2006ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபைச் சட்டம், 31ஆவதில் 1ஆவது சரத்தின்படி, ஆளொருவருக்குஇருபத்தியொருவயதிற்குகுறைவான எவருக்கும்மதுப்பொருள்களை விற்றலோ, விற்பனைக்கு மனைதலோ, மேம்படுத்தலோஆகாதுஎன்றுகுறிப்பிடப்பட்டிருப்பதை மீறுவதாகஇருந்தது. ஆகவேகுறித்தமதுபானசாலை முற்றுமுழுதாகச் சட்டத்துக்கு முரணான வகையிலேயே இயங்கிக்கொண்டிருந்தது.

உரியவர்களுக்கு இது தொடர்பான விடயங்களைத் தெரியப்படுத்தியதன் விளைவாக, 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி 3ஆம் திகதி இரவு 7 மணியளவில்முல்லைத்தீவுமாவட்ட செயலக ஊழியரால், இம் மதுபானசாலை நிறுத்தப்பட்டதென வீட்டுக்கு வந்து கடிதம் தரப்பட்டது. இந்த நிலையில் 2016ஆம் ஆண்டு பெப்ரவரி 5 ஆம் திகதி இரவு தடையைமீறிமீண்டும்திறக்கப்பட்டுள்ளதாக அந்தப்பகுதிமக்கள்என்னிடம்தெரிவித்தனர்.

தொடர்ந்து, மக்கள் மற்றும் பொது அமைப்புகள் ஒன்றிணைந்து இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டனர். இவற்றின் தொடர்ச்சியாக 2017 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதி இடம்பெற்ற வடமாகாணசபையின் 83ஆவது அமர்வில் இது தொடர்பில் பிரேரணை ஒன்றும் என்னால் முன்மொழியப்பட்டது. இருந்தும் இப்பிரச்சினைக்கு தீர்வுகள் ஏதும் கிடைக்கவில்லை. முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கணைப்புக்குழுக் கூட்டம், மற்றும் கரைதுறைப்பற்றுப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் தொடர்ந்தும் என்னால் அழுத்தங்கள் வழங்கப்பட்டன.

கரைதுறைப்பற்றுப்பிரதேசஒருங்கிணைப்புக்குழுக்கூட்டமொன்றில்இவ்விடயம்விவாதிக்கப்பட்டு, பிரதேச செயலரால் மதுபானசாலை தொடர்பில் ஆராய குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. இவ்வாறுஅமைக்கப்பட்ட குழுவின் அறிக்கைகளின்படி மதுபானசாலை சட்டத்துக்கு முரணாக இயங்குவதாகவே குறிப்பிடப்பட்டது.

அந்தவகையில் கடந்த ஒக்ரோபர் 22 ஆம் திகதி இடம்பெற்ற முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில், மணற்குடியிருப்பில்சட்டத்திற்குமுராணானவகையில் அமைந்துள்ள இந்த மதுபானசாலை அகற்றப்படவேண்டும் என்ற தீர்மானத்தை நான் கொண்டுவந்த நிலையில், மதுவரித்திணைக்களத்தினர்மற்றும்பிரதேசச்செயலர் ஆகியோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, கடந்த ஒக்ரோபர் 31 ஆம் திகதியுடன் அனுமதியை இரத்துச்செய்யமுடியும்எனத்தெரிவிக்கப்பட்டது.

2019ஆம் ஆண்டு ஜனவரி முதல் குறித்த மதுபானசாலைக்கு அனுமதி வழங்கப்படமாட்டாதென மாவட்டச் செயலர் தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில்இதுதொர்பாககரைதுறைப்பற்று உதவி பிரதேச செயலர் இ.பிரதாபன் என்னோடு தொடர்புகொண்டு மதுபானசாலைமூடப்பட்டதென்றசெய்திஉறுதிப்படுத்தப்பட்டது. சட்டத்திற்குமுரணரனவகையில் இயங்கிய மதுபானசாலை அகற்றப்பட்டு, அந்தப் பகுதி மக்களின் இடர்பாடுகளுக்குத் தீர்வு ஏற்பட்டுள்ளதையிட்டு மகிழ்டைகின்றேன்- என்றார். (க-246)

## வீதியால் சென்ற பெண்ணிடம் சங்கிலி பறிப்பு

வவுனியா, ஜன.3

வவுனியாவில் வீதியால் சென்ற பெண்ணின் தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்றசம்பவம்ஒன்றுவவுனியா, மயிலங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் இடம்பெற்றது.

சம்பவம்தொடர்பாகமேலும் தெரியவருவதாவது;

வவுனியாவிலிருந்து ஆசிகுளத்தில் உள்ள தனது வீடு நோக்கி உந்துருளியில் சென்றபெண்ஆசிரியர், மயிலங்குளம்பகுதியில்சென்றுகொண்டிருந்தபோது, உந்துருளியில் வந்த இனம்தெரியாத இருவர் பெண் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அறுத்துசென்றுள்ளனர்

சம்பவத்தில்நிலைகுலைந்த பெண் ஆசிரியர் உந்துருளியில் இருந்து கீழே விழுந்துள்ளார். சிறு காயங்கள் ஏற்பட்டநிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அறுத்துசெல்லபட்ட தங்க சங்கிலி ஒரு பவுண் மதிப்பிலானதுஎன்றுகூறப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸாருக்கு தெரியபடுத்தபட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை போலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

அண்மையில் முல்லைத்தீவு மாவட்டம்கேப்பாபிலவு வீதியின், கள்ளியடி வயல் வெளிக்கருகில் வீதியால் சென்றபெண்ணொருவரிடமும்இதேபோன்று இரண்டு நபர்கள் தங்கச்சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர்.

இந்தசம்பவங்கள்தொடர்பில் பொலிஸார் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (க-110)

# தேசிய உற்பத்தி திறன் அபிவிருத்தியில் கிளிநொச்சி மாவட்டம் முதலாம் இடம்

கிளிநொச்சி. ஜன. 3
தேசிய உற்பத்தித் திறன் அபிவிருத்தியில் 2018ஆம் ஆண்டில் கிளிநொச்சி மாவட்டம் முதலாம் இடம் பெற்றுள்ளதாகப் பொது நிர்வாக இடர் முகாமைத்துவ அமைச்சு அறிவித்துள்ளது.

பொது நிர்வாக இடர் முகாமைத்துவ அமைச்சின்கீழ் உள்ள தேசிய உற்பத்தித் திறன் செயலகத்தினால் அரச திணைக்களங்களிடையே கடந்த ஆண்டு இடம்பெற்ற போட்டியிலேயே கிளிநொச்சி மாவட்டம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. இதற்கான விருது கடந்த நவம்பர் மாதம் வழங்க ஏற்பாடாகியிருந்தபோதும், நாட்டில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி காரணமாகப் பிற்போடப்பட்டிருந்த நிலையில் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-105)



## புதுவருடத்தில் மாணவர்களுக்கு வங்கிப் புத்தகம் கையளிப்பு

வவுனியா,ஜன.3
புதுவருடத்தினை முன்னிட்டு வவுனியா, ஓமந்தை விளக்கு வைத்தகுளம் பகுதியிலுள்ள, வசதியற்ற 20 மாணவர்களுக்கு வங்கியில் பணம் வைப்பிலிடப்பட்ட வங்கிப்புத்தகம் மற்றும் 36 வசதியற்ற மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் என்பன வழங்கிவைக்கப்பட்டுள்ளன.
வவுனியா ஓமந்தை, விளக்குவைத்தகுளம் பொது நோக்கு மண்டபத்தில் கிராம அபிவிருத்திச்சங்கத்தலைவர் தலைமையில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற நிகழ்வில் அந்தப் பகுதியிலுள்ள வசதியற்ற பாடசாலை மாணவர்களுக்கு இறம்பைக்குளம் ஈஷி மிஷன் ஆலயத்தின் பி. எம். இராஜசிங்கத்தினால் 36 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.
அத்துடன் அஞ்சலா உதவும் கரங்கள் அமைப்பினூடாக பிரான்ஸ் நாட்டில் புலம் பெயர்ந்து வசித்து வருவோரின் நிதிப்பங்களிப்புடன் 20 பாடசாலை செல்லும் வசதியற்ற மாண்வர்களுக்கு,வங்கியில் பணம் வைப்பு செய்யப்பட்ட வங்கிப் புத்தகங்களும் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.
நிகழ்வில் வீதி, உட்கட்டுமானம், வீட்டுத்திட்டம், போக்குவரத்து வசதிகள், ஆலயம் சீரமைப்பு போன்ற தேவைகள் காணப்படுவதாக கிராம அபிவிருத்திச்சங்கத்தலைவர் மக்கள் பிரதிநிதிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.
விரைந்து இந்தத் தேவைகளை செய்து வருவதாக நிகழ்வில் கலந்துகொண்ட மக்கள் பிரதிநிதிகள் கிராம மக்களிடம் உறுதியளித்துள்ளனர்.
இந்த நிகழ்வில் வடமாகாண முன்னாள் சுகாதார அமைச்சரும், முன்னாள் உறுப்பினருமான ப. சத்தியலிங்கம், முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகதாரலிங்கம், வடமாகாண சபைமுன்னாள் உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை தலைவர் து. நடராஜசிங்கம் , ஈஷி மிஷன் பி. எம். இராஜசிங்கம், தமிழ் தெற்குப் பிரதேச சபை உறுப்பினர் அஞ்சலா கோகிலகுமார், தமிழீழ விடுதலை இயக்கத்தின் மாவட்டப் பொறுப்பாளர் குறூஸ், உதவி மாவட்டப் பொறுப்பாளர் ராஜன், மற்றும் கிராம அபிவிருத்திச்சங்கம், மாதர் அபிவிருத்திச்சங்கம், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (க-111)



## ஈருருளி வழங்கல்

முல்லைத்தீவு.ஜன.3
முல்லைத்தீவு உடுப்புக்குளம் தமிழ் மகா வித்தியாலயத்தில் தரம் 3 இல் கல்வி கற்கும் தந்தையை இழந்த மாணவி கெ.சுருதிகாவுக்கு ஈருருளி ஒன்று வழங்கப்பட்டுள்ளது.
புத்தாண்டு தினத்தை முன்னிட்டு பிரான்ஸ் நாட்டில் வசித்து வரும் பாலசிங்கம் நிராகவன் இந்த உதவியை வழங்கியுள்ளார். (க-222)

## பன்னாட்டுச் சமூகம் எம் மீது கரிசனை கொள்ள வேண்டும்

வவுனியா.ஜன.3
பிறந்துள்ள புத்தாண்டிலாவது பன்னாட்டுச் சமூகம் எம் மீது கரிசனை கொண்டு எங்கள் பிரச்சினைக்குத் தீர்வைக் காண வேண்டும் என காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு முன்பாக சுழற்சி முறையிலான உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களே இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
நாம் எமது பிள்ளைகளைத்தேடி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றோம். இலங்கை அரசியல்வாதிகள் அனைவருமே எங்களைக் கைவிட்டுவிட்டார்கள்.
நாம் பன்னாட்டுச் சமூகத்தையே நம்பியுள்ளோம். பிறந்துள்ள புதிய ஆண்டிலாவது பன்னாட்டுச் சமூகம் எம் மீது கரிசனை செலுத்தி எங்கள் கண்ணீருக்குத் தீர்வு காண வேண்டும்' என்று கூறினர்.
அவர்களது போராட்டம் புதுவருடத்தில் அன்று 680 நாள்களை கடந்தமை குறிப்பிடத்தக்கது. (க-222)



வவுனியா தமிழ் விருட்சம் அமைப்பினரால் 6 குடும்பங்களுக்கு ஒரு மாதத்துக்கான உலர் உணவுப் பொருள்கள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன. பிரான்ஸ் நாட்டில் புலம் பெயர்ந்து வசித்து வரும் தாயக உறவுகளின் நிதி உதவியில்,வசதியற்ற 6 குடும்பங்களுக்கு இன்றைய தினம் தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ். சந்திரகுமாரினால் வழங்கிவைக்கப்பட்டுள்ளன. (க-111)



வவுனியா வர்த்தகர் நலன்புரிச்சங்கத்தின் ஏற்பாட்டில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. புதுக்குடியிருப்புப் பிரதேசசெயலர் ஊடாக கடந்த மாதம் 28 ஆம் திகதி வழங்கி வைக்கப்பட்ட அத்தியாவசிய பொருள்கள், மல்லிகைத் தீவு கிராமத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு தமது வீடுகளுக்கு மீளத் திரும்பிய மக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டிருந்தன. இதன்போது வவுனியா வர்த்தகர் நலன்புரிச்சங்கத்தின் செயலர் மா.கதிர்காமராஜா, உபதலைவர் ரி.கே.இராஜலிங்கம், சங்கத்தின் உறுப்பினர்களான செ.சபாநாதன், க.கிருபாகரன், ந.ஜனகன் ஆகியோர் சேகரித்த பொருள்களை சங்கத்தின் சார்பில் வழங்கி வைத்தனர். (க-110)

## வாகனத் தரிப்பிடத்தில் போலி பற்றுச்சீட்டு விநியோகம்




வவுனியா.ஜன.3
வவுனியா வர்த்தகர் நலன்புரிச்சங்கத்தின், வாகனத் தரிப்பிடக் குத்தகையாளர் என்ற பெயரில் விநியோகம் செய்யப்பட்ட வாகனத்தரிப்பிடத்தின் பற்றுச்சீட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன், இதற்கு எதிராக நகரசபையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,
வவுனியா நகரசபையினருக்குச் சொந்தமான நகரப்பகுதிகளிலுள்ள வாகனத்தரிப்பிடத்தினை, கேள்வி கோரல் மூலம் பெற்றுக்கொண்ட தனி நபரான ஒப்பந்ததாரர் க. கிருபாகரன், வர்த்தகர் நலன்புரிச்சங்கத்தின் பெயரில் பற்றுச்சீட்டை அச்சடித்து, வாகனத்தரிப்பிடத்தில் வைத்து வாகனங்கள் நிறுத்துவோருக்கு விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது.
இதையடுத்து பொதுமகன் ஒருவரினால் நேற்று முன்தினம் நகரசபைத்தலைவரின் கவனத்துக்கு விடயம் கொண்டு செல்லப்பட்டுள்ளது. நகரசபை அதிகாரிகள் குறித்த வாகனத் தரிப்பிடத்தின் குத்தகையைப் பெற்றுக்கொண்ட நபருடன் தொடர்புகொண்டு உங்களது பெயரில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனத் தரிப்பிடக் குத்தகைக்கு, நலன்புரிச்சங்கத்தின் பெயரில் பற்றுச்சீட்டு அச்சடிக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டுள்ளதை உடனடியாக நிறுத்துமாறும், குத்தகைக்காரரின் பெயரில் பற்றுச்சீட்டினை அச்சடித்து வாகனத்தரிப்பிடத்தில் வைத்து விநியோகம் மேற்கொள்ளுமாறும் குத்தகைதாரருக்கு பணிக்கப்பட்டுள்ளது.
எனினும் வர்த்தகர் நலன்புரிச்சங்கத்தின் பெயரைத் தொடர்ந்து பயன்படுத்தி வாகனத்தரிப்பிடத்திற்கான பற்றுச்சீட்டு விநியோகம் மேற்கொள்வதற்கு நகரசபையினரால் தடை விதிக்கப்பட்டுள்ளது.
வாகனத்தரிப்பிடத்தில் வாகனங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ள வர்த்தகர் நலன்புரிச்சங்கத்தின் பெயர் பொறிக்கப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் அனைத்தையும் மீளப் பெற்றுக்கொண்டு, புதிய பற்றுச்சீட்டு அச்சடிக்கப்பட்டு விநியோகம் மேற்கொள்வதாக நகரசபையினருக்கு குத்தகைதாரான கிருபாகரனினால் உறுதியளிக்கப்பட்டுள்ளதாக நகரசபை செயலர் ஆர். தயாபரன் தெரிவித்தார். (க111)

## உதவி வழங்கல்

பூநகரி,ஜன.3
பூநகரி பல்லவராயன்கட்டு "அறம்செய்" அறக்கட்டளையினர் ஐக்கிய இராஜ்ஜியத்தில் உள்ள வீரத்தமிழர் அமைப்பின் நிதிப் பங்களிப்புடன் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்கியுள்ளனர்.
கண்டாவளைப் பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாமில் தங்கியுள்ள 200 குடும்பங்களுக்கு கடந்த 29 ஆம் திகதி நுளம்பு வலைகளையும் உலர் உணவுப் பொதிகளையும் வழங்கினர்.
இந்த இடைத்தங்கல் முகாமில் தங்கியிருந்த 150 குடும்பங்களுக்கு முதலகட்டமாக உலர் உணவுப் பொருள்களும், 75 ஆண்களுக்கு சாரமும், 75 பெண்களுக்கு சேலைகளையும் வழங்கினர்.
தற்போது இரண்டாம் கட்டமாக உலர் உணவுப் பொருள்களையும், நுளம்பு வலைகளையும் வழங்கினர்.
மூன்றாம் கட்டமாக அங்குள்ள மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கவுள்ளனர் எனவும் அமைப்பின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (க-9)



# தமிழ்த் தலைமைகளால் பயனில்லை மக்களே களத்தில் இறங்க வேண்டும்

## நாடு கடந்த தமிழீழ அரசின் தலைமை அமைச்சர் கருத்து



நியூயோர்க்.ஜன.3

தமிழ்த் தலைமைகள் வெவ்வேறு காரணங்களைக் கூறி இலங்கை அரசுக்கு ஆதரவளிக்கின்றன. மக்களுக்கு வழங்கியவாக்குறுதிகளைக்காற்றில்பறக்கவிட்டுள்ளன. இவர்களை நம்பிக் கொண்டிருக்காமல் நேரடி ஜனநாயகப் போராட்டங்களில்தமிழ்மக்கள்ஈடுபடவேண்டும்என்றார்நாடுகடந்ததமிழீழ அரசின் தலைமை அமைச்சரான வி.உருத்திரகுமாரன்.

அவர் வெளியிட்ட புத்தாண்டுச் செய்தியிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

2018ஆம் ஆண்டின் இறுதியில் நிகழ்ந்தஅரசியல்குழப்பம்அனைத்துலகத் தலையீட்டால் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதாகவே கணிக்கப்படுகிறது. சிங்கள தேசத்தின் தோல்வியாகக் கருதப்படும் இதற்குத் தமிழ், முஸ்லிம்மக்களும், அமெரிக்க, இந்திய அரசுகளுமேகாரணம்எனச்சிங்களத் தேசியவாதிகள் நம்புகிறார்கள். இதனால் 2019 ஆம் ஆண்டில் சிங்களத் தேசியவாதிகளின்கடும்செயற்பாட்டை இலங்கை எதிர்கொள்ளலாம்.

சிங்கள அரசுகளின் நிலைப்பாட்டை எதிர்த்துத்தமிழ்மக்கள்போராட்டத்தை நடத்துவது தவிர்க்கமுடியாததாகஉள்ளது.

இந்தப்போராட்டம்அரசியல், இராஜதந்திர வழிகளில் மேற்கொள்ளப்பட வேண்டும். தமிழ்த் தலைமைகள் வெவ்வேறு காரணங்களைக் கூறிச் இலங்கை அரசுக்கு ஆதரவு வழங்கிக் கொண்டிருக்கின்றன. இதுதமிழ்மக்களின் போராட்டத்தைப் பலவீனப்படுத்தும். தேர்தலின்போது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை காற்றில் பறக்கவிட்டுவிட்டுத்தேர்தலில்வெற்றி பெற்ற தலைவர்களாவும், தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகவும் தம்மை வெளிப்படுத்திக்கொண்டிருக்கும்இவர்களைத் தொடர்ந்தும் நம்பிக் கொண்டிருக்காமல் தமிழ் மக்கள் நேரடிஜனநாயகப் போராட்டங்களில் களமிறங்கி 2019ஆம்ஆண்டில்தீர்க்கமான அரசியல் முடிவொன்றை எடுப்பது குறித்துச் சிந்திக்க வேண்டும் - என்றுள்ளது.





## சிறப்புத்தேவை உடையவர்களுக்கான சேவை அலுவலகம் திறந்து வைப்பு

மட்டக்களப்பு.ஜன.3

சிறப்புத்தேவையுடைவர்களுக்குச் சேவையாற்றுவதற்காக மட்டக்களப்பு - கொக்கட்டிச் சோலையில் உதய ஒளி சிறப்புத் தேவையுடையோர் அமைப்பின் அலுவலகம் ஒன்றுதிங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

சிறப்புத் தேவையுடையவர்களுக்கான வாழ்வாதாரத்துக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் சுயதொழில்களுக்குரிய ஒரு தொகுதி உபகரணங்கள் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பட்டிப்பளைப் பிரதேச சபைத் தவிசாளர், பட்டிப்பளைப்பிரதேசசெயலகசமூக சேவை உத்தியோகத்தர், பட்டிப்பளைப்பிரதேசசபையின்உறுப்பினர்கள்உட்பட பல சமூக அமைப்புக்களின் உறுப்பினர்களும் சிறப்புத் தேவையுடைய பலரும் கலந்து கொண்டனர்.

## பாதாள உலகக்குழுவைச் சேர்ந்தவர் ஹோமாகமப் பொலிஸாரால் கைது

### கைக்குண்டு, ஹெரோயின் வைத்திருந்ததாகத் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 3

ஹோமாகமசிறப்புஅதிரடிப்படைமற்றும்போதைத்தடுப்புப் பிரிவினரின்அதிரடிநடவடிக்கைகளில்ஹோமாகமப்பகுதியில் வைத்து ஹெரோயின் மற்றும் கைக்குண்டுடன் பாதாள உலக உறுப்பினர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். கடந்த ஞாயிற்றுக் கிழமை காலை 10.45 மணியளவில் ஹோமாகமபொலிஸ்பிரிவுக்குட்பட்டபனாகொடவிகாரைக்குஅருகில் வைத்தே இவர் கைதுசெய்யப்பட்டார்.

மகிழுந்தில் பயணித்துக் கொண்டிருந்த இவரை மறித்துச் சோதனையிட்டபோது மகிழுந்திலிருந்து கைக்குண்டொன்றும்60கிராம்550மில்லிகிராம்நிறையுடையஹெரோயின் போதைப்பொருளும் மீட்கப்பட்டதாகக் ஹோமாகமப்பொலிஸார்தெரிவித்தனர்.

அவரிடம்மேற்கொள்ளப்பட்டவிசாரணைகளில்குறித்தநபர் இரத்மலானைப் பகுதியைச் சேர்ந்த பாதாள உலகத் தலைவரான அஞ்சு என்பவருடன் நெருங்கிய தொடர்புடையவர் என்பதும் ஹெரோயின்போதைப்பொருள்வியாபாரமுகவர் என்பதும் தெரியவந்ததாகவும், குறித்த நபரை ஹோமாகம நீதவான் நீதிமன்றப் பதில் நீதவானிடம் முன்னிலைப் படுத்தவிருப்பதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (61)

## அலங்கரிப்புக்களை எரித்ததால் அக்கரபத்தனவில் ஆர்ப்பாட்டம்

### ஆறு பேர் கைது

மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகத் தலைவரும் முன்னாள் அமைச்சருமான அமரர் பெ. சந்திரசேகரனின் 9ஆவது சிரார்த்த தினத்தை அக்கரபத்தன மன்றாசி நிசாந் தினிமண்டபத்தில்நினைவுகூருவதற்கான முன்னாயத்தங்கள் கடந்த திங்கட் கிழமை இரவு நடந்தன. அக்கரபத்தன முழுதும் மலையக மக்கள் முன்னணியின் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டது.

இந்த அலங்கரிப்புகள் அன்று இரவு இனம் தெரியாதவர்களால் எரிக்கப்பட்டன. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மறுநாள் செவ்வாய்க் கிழமை அமரர் பெ.சந்திரசேகரனின் 9ஆவது சிரார்த்த தினம் கடைப்பிடிக்கப்பட்டதன் பின்பாக நிகழ்வில் கலந்து கொண்டவர்களால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சருமான வே. இராதாகிருஸ்ணன், பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. அரவிந்தகுமார், மலையக மக்கள் முன்னணியின் செயலர்ஏ. லோரன்ஸ்உட்படமலையகமக்கள்முன்னணியின் செயலர்கள், உப தலைவர்கள், உறுப்பினர்கள், அங்கத்தவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்தச்சம்பவத்துடன்தொடர்புடையசந்தேகத்தில்6பேரைக் கைது செய்துள்ளதாகவும் அவர்களிடம் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் அக்கரபத்தன பொலிஸார் தெரிவித்தனர்.



## மரம் நடுகை

திருகோணமலை.ஜன.3

புதிய வருடத்தின் ஆரம்பத்தை முன்னிட்டுத் திருகோணமலைநகரசபைப்பொதுநூலகத்தின்ஏற்பாட்டில்நகரசபையின் வளாகத்தில் மரம் நடும் நிகழ்வு நேற்று முந்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் நகரசபைத் தலைவர் நா. இராசநாயகம், செயலர்தே. ஜெயவிஷ்ணு, நூலகர்கள், நூலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# மீதமுள்ள காலத்திலாவது அரசு மக்களுக்குப் பணியாற்ற வேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவிப்பு

மீதமுள்ள தன்னடைய ஆயுட்காலத்திலாவது ஐக்கிய தேசிய முன்னணிஅரசு மக்களுக்குச் சிறப்பான சேவைகளை வழங்க வேண்டும். என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், தமிழ்முற்போக்குக்கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

கண்டி-திகனையில்நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரசியல் நிகழ் வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயேஅவர்மேற்கண்டவாறுதெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தாவது:

"அரசியல் குழப்பத்தின்போது ஐக்கிய தேசியக்கட்சியின்நாடாளுமன்றஉறுப்பினர்கள் சிலர் துரோகமி ழைத்தனர்.

தோழமைக்கட்சிகளின்உறுப்பினர்கள் ஐக்கியதேசியமுன்னணிஅரசைப்பாதுகாப்பதற்குக் கடுமையாக உழைத்தனர். அன்று எம்மிடம் கொஞ்சிப்பேசிய ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் அமைச்சரான பின்னர் எம்மை மறந்துவிடக்கூடாது. கட்சிஅரசியலுக்கு அப்பால்நாட்டில்நல்லாட்சிமலரவேண்டும் என்ற நல்ல நோக்கத்திலேதான் ஐக்கிய தேசியக் கட்சிக்கு மக்கள் வாக்களித்தனர்.


எனவே, மக்கள் ஆணையை மீறும் வகையில் புதிய அரசு செயற்படக்கூடாது. அரசமைப்பின்19ஆவதுதிருத்தத்தின் ஊடாக அமைச்சரவை மற்றும் இராஜாங்க, பிரதியமைச்சர்களின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளது. தனியாட்சிஅமையும்பட்சத்தில்அமைச்சரவை எண்ணிக்கை 30ஐயும், ஏனையஅமைச்சுக்களின்எண்ணிக்கை 40ஐயும் விஞ்சுதலாகாது எனத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

எனவே, இந்தவிடயம்பற்றித்தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தால்அரசுமீதுமக்களுக்கு வெறுப்பு ஏற்படும். எஞ்சியுள்ள காலப்பகுதியிலாவது அரசுமக்களுக்குச் சிறப்பானசேவைகளைவழங்கவேண்டும்" என்றார்.

## நோயாளர்களுக்கு உணவுப் பொதிகள் வழங்கி வைப்பு



மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நேற்று முன் தினம் நோயாளர்களுக்கு உலர் உணவுப் பொதிகள்வழங்கும்நிகழ்வு நடைபெற்றது. மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் புற்று நோய், சிறுவர் நோய், காசநோய் உள்ளிட்ட பிரிவுகளில் தங்கி இருந்துசிகிச்சைபெற்றுவரும்நோயாளர்களுக்கே குறித்த உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. அகில இலங்கை மக்கள் செயல் கழகத்தின் ஏற்பாட்டில், அதன் செயலர் லோ. நிரோஜன் தலைமையில்இந்தநிகழ்வுநடைபெற்றது. இதில்குறித்த வைத்திய சாலையின் புற்றுநோய் வைத்திய நிபுணர், மற்றும் தாதியர்கள் நோயாளர்கள் எனப் பலரும் பங்கு கொண்டனர்.



# பிள்ளையாரின் படம் பதித்த காலணிகள்

### தயாரிப்பு நிறுவனத்துக்குக் கண்டனங்கள்

ஹவாய்.ஜன.3
விநாயகரின் படம் பதித்த காலணிகள், பெண்களுக்கான மேற் சட்டைகளைத் தயாரித்த பிரபல இணையவழி விற்பனை நிறுவனத்துக்கு எதிராகக் கண்டனங்கள் குவிகின்றன. அமெரிக்கா- ஹவாயைச் சேர்ந்த பிரபல நிறுவனமான 'மயுய் வோக்' ஆண்கள், பெண்களுக்கான காலணிகள் மற்றும் பெண்களுக்கான மேற் சட்டைகளைத் தயாரித்து அதில் விநாயகரின் உருவத்தைப் பதித்து விற்பனைக்குக் காட்சிப்படுத்தியது.



அந்த நிறுவனத்தின் இணையப் பக்கத்தில் பதிவேற்றப்பட்டிருந்த குறித்த பொருள்களுக்கு விலைகளும் குறிப்பிடப்பட்டிருந்தன. இது அமெரிக்காவாழ் இந்துக்கள் மத்தியில் கடுமையான சர்ச்சைகளை ஏற்படுத்தியது. "கடவுளின் உருவத்தைக் காலணியில் பதித்திருப்பது இந்து மதத்தை அவமதிக்கும் செயல். இந்துக்களின் உணர்வைப் புண்படுத்துகிறது. உலகின் மூத்த மற்றும் மூன்றாவது பெரிய மதம் இந்துமதம். சுமார் 110 கோடிக்கும் மேற்பட்டவர்கள் உலகில் இந்து மதத்தைக் கடைப்பிடிக்கிறார்கள். இதனால் குறித்த நிறுவனம், தனது தயாரிப்புகளைத் திரும்பப் பெற வேண்டும், அத்துடன் மன்னிப்பும் கேட்க வேண்டும்" என்று அமெரிக்காவாழ் இந்துக்கள் பலரும் இது குறித்து ஆதங்கம் வெளியிட்டனர்.

## புதிய ஆண்டில் பிரேசிலின் புதிய அதிபரானார் ஜேர் போல்சோனாரோ

பிரேசிலியா.ஜன.3
பிரேசிலின் புதிய அதிபராக ஜேர் போல்சோனாரா புதிய வருடத்தன்று பதவியேற்றார். பிரேசில் நாட்டில் கடந்த ஒக்ரோபர் மாதம் பொதுத் தேர்தல் நடைபெற்றது. அதிபர் பதவிக்கான இந்தத் தேர்தலில் போட்டியிட்ட முன்னாள் இராணுவ அதிகாரியும், சமூக தாராளவாத கட்சியின் தலைவருமான ஜேர் போல்சோனாரா (வயது 63), இடதுசாரி வேட்பாளர் சிரோ கோம்ஸ், தொழிலாளர் கட்சி வேட்பாளர் பெர்னாண்டோ ஹேடட் ஆகியோரிடையே கடும் போட்டி நிலவியது.
நாட்டின் பாதுகாப்பை மேம்படுத்துவது, வேலைவாய்ப்பை அதிகரிப்பது, ஊழலை ஒழிப்பது உள்ளிட்ட வாக்குறுதிகளுடன் ஜேர் போல்சோனாரா தேர்தல் பரப்புரைகளை முன்னெடுத்தார். பரப்புரையின்போது அவரை ஒருவர் கத்தியால் குத்தினார்.
கத்திக்குத்துக்கு உள்ளான அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சைபெற்றார். இந்தத்தாக்குதலுக்குப்பிறகு ஜேர்போல்சோனாராவுக்கு மக்கள் செல்வாக்கு அதிகரித்தது. தேர்தலில் 55 சதவீத வாக்குகள் பெற்று அவர் வெற்றி பெற்றார்.
இதையடுத்து தலைநகர் பிரேசிலியாவில் உள்ள நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடந்த பதவியேற்பு விழாவில் பிரேசிலின் புதிய அதிபராக ஜேர் போல்சோனாரா பதவியேற்றுக்கொண்டார்.



# மீண்டும் அணு ஆயு
# மிரட்டுகிறார் கிம் ஜோ

### புத்தாண்டு உரையில் காட்டம்



பியோங்ஜாங்.ஜன.3
**அமெரிக்கா எங்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்றால் புதிய வழியை வடகொரியா தேர்ந்தெடுக்கும் என்று வடகொரியாவின் அதிபர் கிம் ஜோங் உன் எச்சரிக்கை விடுத்தார். 2019 ஆம் ஆண்டு புதிய வருடப் பிறப்பையொட்டி வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் தனது நாட்டு மக்களுக்கு புத்தாண்டு உரையை நிகழ்த்தினார். அதன்போதே அவர் அமெரிக்காவுக்குச் சில எச்சரிக்கைகளை விடுத்தார்.**

புதிய ஆண்டு ஆரம்பமாகியிருப்பதையொட்டி வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் தனது நாட்டுமக்களுக்கு ஆற்றிய உரையில் "உலக நாடுகளின் முன்னிலையில் எங்கள் நாட்டுக்கு அளித்த வாக்குறுதியை அமெரிக்கா செய்யத் தவறி எங்கள் மீது பொருளாதாரத் தடைகள் விதித்தால், நாங்கள் உங்களுக்கு அளித்த உறுதி மொழிகளைக் கைவிட்டு எங்கள் இறையாண்மையைப்பாதுகாப்பதற்குப்புதிய வழிகளைத் தேர்ந்தெடுப்போம்" என்று கூறினார்.
கிம்மின் உரை குறித்துத் தென் கொரிய முன்னாள் அமைச்சர் கிம் யங் சியோக் கூறும்போது "அமெரிக்காவுடனான பேச்சுக்களில் முன்னேற்றம் இல்லாத காரணத்தால் தான் கிம் தனது ஏமாற்றத்தை வெளிப்படுத்தி இருக்கிறார்"- என்றார்.

**பின்னணி**
கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் வரை உலக நாடுகளின் எதிர்ப்பை மீறி, வடகொரியா 22 வரையான ஏவுகணைச் சோதனைகளை நடத்தியிருந்தது. இதில் இரண்டு சோதனைகள் ஜப்பானை அண்மித்த கடல் பகுதியில் நடத்தப்பட்டன. வடகொரியாவின் இந்தநடவடிக்கையை அமெரிக்கா, ஜப்பான், தென்கொரியா ஆகிய நாடுகள் எதி
எதிர்ப்புகளைப் பொருட்படு
ரியா தொடர்ந்து அணு ஆ
சோதனைகளை நடத்தி வ
கள் சபையில் அமெரிக்க
வடகொரியாவின் மீது புதி
தடைகள் விதிக்கப்பட்டன.
இருந்தும் அமெரிக்காவின்
தடைகளைப்பொருட்படுத்
அவ்வப்போது ஏவுகணை
நடத்தி வந்தது.
இதற்கிடையில் தென்கொரி
ஒலிம்பிக் போட்டி நடைபெ



## கடும் மழை – வெள்ளம், நிலச்சரிவு இடர்களால் பிலிப்பைன்சில் 85 பேர் சாவு

மணிலா.ஜன.3
பிலிப்பைன்ஸில் கடுமையான மழை பெய்தது. இதன் காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தாலும், நிலச்சரிவாலும் இதுவரை 85பேர் சாவடைந்துள்ளனர். பிலிப்பைன்ஸின் விசயாஸ், பிஸ்கோல் ஆகிய இரண்டு பகுதிகளிலுமே இந்தச் சாவுகள் சம்பவித்துள்ளன. சர் மாகாணத்தில் நிலச்சரிவால் கிட்டத்தட்ட 50 வீடுகள் சரிந்துள்ளன. பலர் காணாமல்போய் உள்ளனர். தேடுதல் பணி நடந்து வருகிறது. வெள்ளம் மற்றும் நிலச்சரிவு காரணமாக சுமார் 25 ஆயிரம் பேர் நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். பிலிப்பைன்ஸைப் பொறுத்தவரை வருடத்துக்கு சுமார் 20க்கும் மேற்பட்ட சூறாவளிகளால் பாதிக்கப்படுகிறது. 2013ஆம் ஆண்டு தைபோன் புயல் தாக்கியதில் 6ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் சாவடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நாசா வி

வோஷிங்டன்.ஜன.3
பூமியில் இருந்து 11கோடி கிலோ
றர்கள் தொலைவில் உள்ள கு
கோள்சுற்றுப்பாதையில் நுழை
நாசாவின் விண்கலம் சாத
படைத்துள்ளது. விண்வெளி
ஏராளமான குறுங்கோள்
(விண்கற்கள்) உள்ளன. அ
'பென்னு' என்றழைக்கப்ப
குறுங்கோள் பூமியில் இருந்
கோடி கிலோ மீற்றர்கள் தொ
வில் உள்ளது. அதை ஆய்வு
வதற்கு அமெரிக்காவின் வி
வெளி ஆய்வு நிறுவனமான ந
'ஓசிரிஸ்ரே' எனப்படும் செயற்
கோளை அனுப்பியது. பல ஆ
கள் பயணம் மேற்கொண்ட
தற்போது பென்னு குறுங்கோ
யில் நுழைந்துள்ளது. இது தி
டிக்கை என அமெரிக்காவின்
லைக்கழக விஞ்ஞானி டான்டி
தார். இவர் 'ஓசிரிஸ்ரே' செய

## வானு



# யுத உற்பத்தி
# ஜோங் உன்




டுகள் எதிர்த்தன. ஆனால்,
பொருட்படுத்தாமல் வடகொ
து அணு ஆயுத ஏவுகணைச்
ள நடத்தி வந்தது. ஐக்கிய நாடு
அமெரிக்கா தலைமையில்
ன் மீது புதிய பொருளாதாரத்
கப்பட்டன.
மரிக்காவின் பொருளாதாரத்
ாருட்படுத்தாமல்வடகொரியா
ஏவுகணைச்சோதனைகளை
தென்கொரியாவில்குளிர்கால
டி நடைபெற்றது. அதில் வட

கொரியாபங்கேற்றது.
அதுமுதல் வடகொரியா தென் கொரியா உறவில் இணக்கம் காணப்பட்டது. இதைத் தொடர்ந்து அமெரிக்க அதிபர் ட்ரம்ப் வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் இடையே சிங்கப்பூரில் சந்திப்பு ஏற்பட்டது.
இந்தச்சந்திப்பில் அணு ஆயுதங்களை அழிப்பதற்கு வடகொரியா சம்மதம் தெரிவித்தது. ஆனால் வடகொரியா மீதான பொருளாதாரத் தடைகள் எவையும் நீக்கப்படவில்லை. தொடர்ந்துஅமெரிக்காவடகொரியாஇடையே அணு ஆயுதச் சோதனைகள் தொடர்பான மோதல்நடந்து கொண்டு இருக்கிறது.

## முகநூல் நண்பர்கள் ஆற்றிய நற் காரியம்

# புற்றுநோய்க்கு உள்ளான தம்பதிகள் குழந்தை பெற நிதி வழுங்கிய சம்பவம்

லண்டன்.ஜன..3
முகநூல் நண்பர்கள் மூலம் கிடைத்த நிதியைக் கொண்டு, பிரிட்டனைச் சேர்ந்த தம்பதியினர் செயற்கைக் கருவூட்டல் மூலம் குழந்தை பெற்றுள்ளனர்.
புற்றுநோயால் பாதிக்கப்பட்ட, பிரிட்டனைச் சேர்ந்த மரிஷா சப்ளின் (வயது26), ஜோன் ஹிப்ஸ் (வயது29) ஆகிய இருவரும் சிகிச்சைக்கு மருத்துவமனையை நாடியபோது சந்தித்துப் பழகினர். இருவருக்கும் காதல் மலர்ந்தது. திருமணம் செய்தனர்.
புற்றுநோய்க்கான சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்ததால், இயல்பாகக் குழந்தை பெறுவதற்கு மரிஷாவின் உடல்நிலை ஏற்றதாக இருக்கவில்லை. இதனால் செயற்கைக்கருவூட்டல்(ஐ.வி.எப்)முறையில்குழந்தை பெறமுடிவுசெய்து, அதன்படிபெண்குழந்தைஒன்றைப் பெற்றெடுத்தனர்.
இரண்டாவதுகுழந்தையைப்பெறுவதற்குஆசைப்பட்டவர்களுக்கு நிதி தடங்கலாக இருந்தது. அவருடைய முகநூல்தளத்தில்நண்பர்களாக இருக்கின்றசிலர் இது குறித்து அறிந்தனர். பின்னர் அவர்களுக்காக இரகசியமாகநிதிதிரட்டினர். சுமார் 2ஆயிரம்பவுண்டுகள்(சுமார் ரூ.1 இலட்சத்து 80 ஆயிரம்- இந்திய மதிப்பில்) சேர்ந்தன. அதை தாம் நேரில் சந்தித்திராத மரிஷாவுக்கு அனுப்பினர். அந்த நிதி உதவியுடன் மீண்டும் செயற்கைக் கருவூட்டல் முறையில் மரிஷா பெண் குழந்தையைப் பெற்றார்.
"குழந்தை பிறந்ததும் முதலில் எனக்கு உதவிய முகநூல்நண்பர்களுக்குஅந்தச்செய்தியைச்சொன்னேன். இந்த உணர்வு அற்புதமானது. இதுவரை சந்தித்திராத நண்பர்கள், எங்களுக்காக இவ்வளவு பெரிய தொகையைஅளித்தது ஆச்சரியமாகஇருக்கிறது. எனக்காக நிதியுதவி செய்தவர்களுக்கு நன்றி உடையவள்" என்று நெகிழ்ந்தார் மரிஷா.



# இடிபாடுகளுள் சிக்கிய குழந்தை 35 மணி நேரத்தின் பின்னர் மீட்பு

ரஷ்யாவில் சம்பவம்

மொஸ்கோ.ஜன.3
ரஷ்யாவின் மேக்னி டோகோர்ஸ் நகரில் தொடர் மாடிக் குடியிருப்பு இடிந்து விழுந்தது. இந்த இடிபாட்டால் 48 வீடுகள் சேதம் அடைந்தன.
இடிபாடுகளில் சிக்கி 7 பேர் சாவடைந்தனர். 36 பேர் இடிபாடுகளுக்குள் புதைந்துள்ளனர்.
காயம் அடைந்த பலர் மீட்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.
அந்த இடிபாடுகளுக்குள் 35 மணி நேரம் வரை சிக்கித் தவித்த குழந்தை ஒன்று உயிருடன் மீட்கப்பட்டது.
இடிபாடுகளுக்கு இடையே குழந்தையின் அழுகுரல் கேட்டு, அதன் பின்னரே பிறந்து 11 மாதங்களே ஆன அந்தக் குழந்தை மீட்கப் பட்டது. அதன் தலையில் பலத்த காயம் இருந்தது.
மீட்கப்பட்ட குழந்தை உடனடியாகமருத்துவமனைக்குஅனுப்பி வைக்கப்பட்டது. விபத்து நடந்து 35 மணி நேரத்துக்குப் பிறகு குழந்தை உயிருடன் மீட்கப் பட்டமை அங்குள்ள அனைவரையும் மகிழ்ச்சியிலும், ஆச்சரியத்திலும் ஆழ்த்தியது. அத்தோடு அந்தக் குழந்தையின் தாயும் இந்த விபத்தில் இருந்து உயிர் தப்பினார்.
தொடர்மாடிக்குடியிருப்பில்ஏற்பட்ட இந்தவிபத்துப்பற்றிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.




# ா விண்கலம் சாதனை

.3
கோடிகிலோமீற்
் உள்ள குறுங்
யில்நுழைந்து
லம் சாதனை
ிண்வெளியில்
ுங்கோள்கள்
ள்ளன. அதில்
ழைக்கப்படும்
யில் இருந்து 11
ர்கள் தொலை
த ஆய்வுசெய்
ாவின் விண்
னமான நாசா,
டும்செயற்கைக்
பது. பல ஆண்டு
கொண்ட அந்த விண்கலம்
குறுங்கோளின்சுற்றுப்பாதை
து. இது திறமைமிக்க நடவ
ிக்காவின் அரிசோனா பல்க
னிடான்டிலாரேட்டாதெரிவித்
ஸ்ரே' செயற்கை கோளை




உருவாக்கியவர். இதற்குமுன்பு 2016ஆம்ஆண்டில் 'ரோசட்டா' விண்கலம் 'காமட் 67' என்ற குறுங்கோளை 7 கிலோமீற்றர்தூர சுற்றுப்பாதையில் நெருங்கியிருந்தது. 'பென்னு' குறுங்கோள் மிகவும் குறைந்த ஈர்ப்பு சக்தி கொண்டது. இருந்தும் 'ஓசிரிஸ்ரே' செயற்கைக் கோள் மிக நெருக்கத்தில்சுற்றுப்பாதைக்குள் சென்றடைந்துள்ளது.

# னூர்தி விபத்துகளின் ஆண்டாக முடிந்தது 2018



வேஷிங்டன்.ஜன.3
2017ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2018ஆம் ஆண்டில் வானூர்தி விபத்துகள் அதிகம் நிகழ்ந்திருப்பதாகத் தரவுகள் கூறுகின்றன. 2018ஆம் ஆண்டில் 556 பேர் வானூர்தி விபத்துகளில் இறந்திருக்கிறார்கள். 2017ஆம் ஆண்டில் 44பேர் மாத்திரமே வானூர்தி விபத்துகளில் இறந்திருக்கிறார்கள். 2018ஆம் ஆண்டில் மிக மோசமான விபத்து ஒக்ரோபர் மாதம் நடந்தது.
இந்தோனேசிய லயன் ஏர் வானூர்தி விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த அனைவரும் (189 பேர்) சாவடைந்தனர். 2017ஆம் ஆண்டு பயணிகள் வானூர்திப் போக்குவரத்தில் மிகவும் பாதுகாப்பான ஆண்டாக இருந்திருக்கிறது. 2017ஆம் ஆண்டில் பயணிகள் வானூர்தி எதுவும் விபத்துக்குள்ளாகவில்லை. ஆனாலும் 2017ஆம் ஆண்டுக்கு முந்தைய ஆண்டுகளை விடவும் 2018ஆம் ஆண்டில் வானூர்தி விபத்துகளின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது. 2000ஆம்ஆண்டிலிருந்து 2016ஆம் ஆண்டுவரை ஆண்டுக்கு 64 வானூர்திகள் சராசரியாக விபத்துக்கு உள்ளாகியிருக்கின்றன.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# புத்தாண்டிலும் ஓயாத வாள்வெட்டுக்குழுக்கள்

புத்தாண்டான நேற்றுமுன்தினம் யாழ்ப்பாண நகரில் இருந்து சில கிலோ மீற்றர்கள் தொலைவில் உள்ள கொக்குவில் பகுதியில் வாள்வெட்டுக் குழுக்களின் அட்டகாசம் தொடர்பான செய்தி பலரையும் பீதிக்குள்ளாக்கியுள்ளது. பட்டப் பகலில் 50 பேர் வரையில் கும்பலாகச் சென்று தாக்குதல் நடத்தும் அளவுக்கு இளைஞர் குழுக்களுக்கு துணிவு வந்திருக்கின்றது.

2009ஆம் ஆண்டுவரையில் போருக்குள்சிக்குண்டிருந்த வடக்கு மாகாணம், அதன் பின்னரான திறந்த வெளியில் பல மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளது. கஞ்சா, ஹெரோயின், வாள்வெட்டு, குழுமோதல், பாலியல் மாத்திரைகள் என்று வடக்கு மாகாணம் கேள்விப்பட்டிராத சொற்கள் அடிக்கடி உச்சரிக்கும் சொற்களாக மாறின. இப்போதும் அது தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

இளைஞர் சமுதாயம் உரிமைக்காக மீண்டும் போராடக் கூடாது அல்லது அதைப் பற்றி எண்ணவே கூடாது என்பதற்காக, திட்டமிட்டு மிகநுண்ணரசியலாக சமூகப் பிறழ்வுகள் ஊட்டப்பட்டன. இவற்றிலிருந்து இளைஞர்களை மீட்டெடுக்க வேண்டிய தலைமைகள், வெறும் வாய்ப்பேச்சோடு அதிலிருந்து ஒதுங்கிக் கொண்டுள்ளார்கள். அல்லது அவர்கள் அதற்கு மேலும் அக்கறை செலுத்தவில்லை.

வாள்வெட்டுக்கள், குழு மோதல்கள் இடம்பெறும்போதெல்லாம் தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டவர்கள் போல சமய, சமூக, அரசியல் தலைவர்கள் அறிக்கை விடுவார்கள். பொலிஸாரும், சந்திக்குசந்தி, மூலை முடுக்கெல்லாம் நிற்பார்கள். இரவு நேர சுற்றுக் காவல் நடவடிக்கைகளை தீவிரமாக முன்னெடுப்பார்கள். இவை எல்லாம் கொஞ்சம் நாளைக்குத்தான். இதன் பின்னர் அவரவர் தம் பாட்டில் சென்றுவிடுவார்கள்.

இந்தச்செயற்பாடுதான் கொக்குவில் பகுதியில் நேற்றுமுன்தினம் இளைஞர்கள் இவ்வளவு பேர் கும்பலாக தாக்குதல் நடத்தச் செல்வதற்காக உற்சாகத்தைக் கொடுத்துள்ளது. அதுவும், கொக்குவில் காந்திஜி சனசமூக நிலையப் பகுதியைச் சேர்ந்த இளைஞர்களுக்கு தாக்குதல் நடத்த வரப் போகின்றோம் என்று தகவல் கொடுத்துவிட்டுச் சென்றிருக்கின்றார்கள். யாழ்ப்பாணத்தின் முதன்மை வீதிகளில் தங்களின் அதி நவீன பல லட்சம் ரூபா பெறுமதியான உந்துருளிகளில் சாகாசம் காட்டியவாறு தாக்குதல் நடத்தச் சென்றிருக்கின்றார்கள். பொலிஸார் புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் மூழ்கியிருந்தார்களோ என்னவோ, 23 உந்துருளிகளில் கும்பலாகச் சென்ற இளைஞர்களை எங்கும் மடக்கிப் பிடிக்கவில்லை.

கொக்குவில் காந்திஜி சனசமூக நிலையப் பகுதி மக்கள் திட்டமிட்டு, தாக்குதல் கும்பலை விரட்டியடித்து சிலரைப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். அந்தப் பகுதி மக்கள் துணிவுடன் எடுத்த நடவடிக்கை பாராட்டத்தக்கது. தங்களைத் தட்டிக்கேட்க யாருமில்லை என்ற துணிவில் செயற்படும் இளைஞர் குழுக்களுக்கு பாடம் படிப்பிக்க அவர்கள் செய்த விடயம் மெச்சத்தக்கதுதான். ஆனாலும், இதன் காரணமாக அவர்களுக்கு எதிர்காலத்தில் பாதிப்பு வராமல் பார்த்துக் கொள்ளவேண்டியது பொலிஸாரின் கடமை.

இந்தச் சம்பவத்துடன் பொலிஸார் விழித்துக் கொள்வார்கள். வீதிச் சோதனை, சுற்றுக்காவல் என்று தொடரும். ஆனால் இதனை பொலிஸார் தொடர்ந்து முன்னெடுக்காவிடின், இதுபோன்ற இளைஞர் கும்பல்கள் மக்களை அச்சுறுத்தும் தங்கள் கைங்கரியத்தை தொடர்வார்கள்.

வெட்ட வெட்ட தளைக்கும் வாழைபோல, ஒருசில டசின்களில் சென்று தாக்குதல் நடத்திய இளைஞர்கள் இப்போது 50 பேர் ஒன்றாக, ஒரே நேரத்தில் வீதியில் பட்டப் பகலில் செல்லும் துணிகரத்தைப் பெற்றுள்ளார்கள். இதனை முளையிலேயே கிள்ளி எறியவேண்டும். அதனை முதலில் செய்யவேண்டும்.


# வடகிழக்கு மலையக மக்களின் பாதைவேறு

வடகிழக்கு மாகாண மக்களின் குறைகள் அடிப்படையில் அரசியல் சார்ந்தது. உரிமைகள் சார்ந்தது. உரித்துக்கள் சார்ந்தது. அதற்காகப் பொருளாதாரம் சார்ந்ததில்லை என்று கூறமுடியாது. ஆனால் மலையகத் தமிழ் மக்களின் குறைகள் பெரும்பாலும் பொருளாதாரமே சார்ந்தது. வடகிழக்கு மாகாண மக்களின் உரிமைகள் கோரிப் பயணிப்பது ஒரு பாதை. மலையக மக்களின் பொருளாதார விருத்தி நோக்கிப் பயணிப்பது பிறிதொரு பாதை. இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் முதல மைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.
அவரது அலுவலகத்தால் அனுப்பப்படும் கேள்வி-பதில் அறிக்கையிலேயே இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார். அந்த அறிக்கையில் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ள விடயங்கள் முழுமையாக வருமாறு:

**கேள்வி:** நீங்கள் வடகிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் நலன் பற்றி மட்டும் பேசி வருகின்றீர்கள். மலையகத் தமிழர்களும் எங்களைச் சேர்ந்தவர்களே என்று மேடைகளில் பேசுகின்றீர்கள். ஆனால் அவர்கள் நலம் பற்றி எதுவுமே கூறுவதில்லை. தோட்டத் தொழிலாளர்களுக்கு இதுவரையில் எந்தவித மேலதிகக் கொடுப்பனவும் கொடுக்கப்படவில்லை. அதுபற்றி உங்கள் கருத்தைத் தெரிவிப்பீர்களா?

**மமதை கொண்டவர்கள்**

**பதில்:** எங்கள் தமிழ் மக்கள் எங்கு வாழ்ந்தாலும் அவர்களுக்கு ஒரு குறைபாடு உண்டு. அவர்கள் தென்னிந்தியாவைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். இலங்கையைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். வேறெந்த நாட்டைச் சேர்ந்தவராகக் கூட இருக்கலாம். தம்முடைய மக்கள் மத்தியில் 'தான்' என்ற மமதை கொண்டவர்கள் அவர்கள். இன்னொரு தமிழன் மேலெழுவதை ஒரு தமிழன் விரும்ப மாட்டான். தனக்கில்லாததெது மற்றவனிடம் இருக்கின்றது என்றே சிந்திப்பான். தன்னிலும் பார்க்க மற்றவரிடம் சிறப்பம்சங்கள் இருந்தால் அவற்றை மட்டந் தட்டப் பார்ப்பான். ஏதாவது கூறி அடுத்தவன் மேலெழுவதைத் தடுக்கப் பார்ப்பான். தமிழர் வாழும் எந்த இடம் சென்றாலும் இவ்வாறான செயற்பாடுகளை நாம் காணலாம். மடகஸ்காருக்குப் பக்கத்தில் மீள் ஐக்கியத் தீவுகள் என்று ஒரு சிறு தீவு உண்டு. அங்கு வாழும் தமிழர்கள் எந்தப் பேதமுமின்றி, எரிச்சல் புகைச்சல் இன்றி, பொறாமை இன்றி வாழ்வதாகக் கூறுகின்றார்கள். ஒரு வேளை அத்தீவு மட்டும் விதிவிலக்கோ நான் அறியேன்.




> தமிழன் மேலெழுவதை ஒரு தமிழன் விரும்ப மாட்டான். தனக்கில்லாததெது மற்றவனிடம் இருக்கின்றது என்றே சிந்திப்பான். தன்னிலும் பார்க்க மற்றவரிடம் சிறப்பம்சங்கள் இருந்தால் அவற்றை மட்டந் தட்டப் பார்ப்பான். ஏதாவது கூறி அடுத்தவன் மேலெழுவதைத் தடுக்கப் பார்ப்பான்.

**ஒருமித்து குரல் கொடுத்தார்களா?**

மலையக மக்களின் சகல கட்சிகளும் தொழிற்சங்கங்களும் அவற்றின் தலைமைத்துவங்களும் சேர்ந்து தம் மக்களின் ஆயிரம் ரூபாக் கோரிக்கை பற்றி பொதுவான, ஐக்கியமான ஒரு கோரிக்கையை விடுத்துள்ளார்களா? தமக்குள் எந்தப் பேதமுமின்றிக் கோரியுள்ளார்களா? தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா நாள்க் கூலியாகக் கிடைக்க வேண்டும் என்பதிலும் பார்க்க யார் அதனைப் பெற்றுக் கொடுக்கப் போகின்றார்கள் என்பதிலேயே தோட்டத் தொழிலாளர்களின் தலைமைகள் கண்ணும் கருத்துமாக இருக்கின்றார்கள் போல் எனக்குத் தெரிகின்றது.

**வேறுபாடு**

இன்று யாழ்ப்பாணத்தில் ஆயிரத்து 200 ரூபா நாள் கூலிக்குக் குறைவாக ஒருவரை எடுக்க முடியாது. அதுவும் அவர்கள் வேலை செய்வது காலை மற்றும் மதிய தேநீர் நேரத்தையும் பகல் போசன



யாழ்ப்பாணத்தில் ஆயிரத்து 200 ரூபா நாள் கூலிக்குக் குறைவாக ஒருவரை எடுக்க முடியாது. அதுவும் அவர்கள் வேலை செய்வது காலை மற்றும் மதிய தேநீர் நேரத்தையும் பகல் போசன வேளையையும் முன்னிலைப்ப டுத்தியே. நல்ல வேலை செய்தால்கூட குறைவான வேலையையே செய்வார்கள். இழுத்தடிப்பார்கள்.

வேளையையும் முன்னிலைப்படுத்தியே. நல்ல வேலை செய்தால்க்கூட குறைவான வேலையையே செய்வார்கள். இழுத்தடிப்பார்கள். தோட்டத் தொழிலாளர்கள் அதிகாலை எழுந்து, பனியில் நனைந்து, பலவித ஜந்துக்களால் தாக்கப்பட்டு, குறிப்பிட்ட அளவு கொழுந்துகளையேனும் பறிக்கவேண்டிய கடப்பாட்டுக்குக் கட்டுப்பட்டு அவற்றைப் பறிப்பதும் அவற்றைக் கொண்டு சென்று ஆலையில் சேர்ப்பதுமாக முழு நாழும் வேலையில் ஈடுபடுகின்றார்கள். மாதம் ஒரு குறிப்பிட்ட அளவு நாள்கள் வேலை செய்தால் இவ்வளவு சம்பளம், இல்லையேல் குறைந்த சம்பளம் என்று இருக்கின்றது. முழுச் சம்பளம் தொழிலாளர்களுக்குக் கிடைக்காது இருப்பதற்கு தோட்ட நிர்வாகம் வேலை செய்ய வேண்டிய நாள்களைக் குறைத்து விடுவார்கள். இதையும் ஏற்று அவர்களுக்கு தற்போது கிடைக்கும் ஒரு நாள் சம்பளத்தை வைத்து பலவற்றையும் சமாளிக்க வேண்டியுள்ளது. குழந்தைக ளைப் பள்ளிக் கூடம் அனுப்புவது, நோயுற்ற குடும்பத்தவரைப் பராமரிப்பது, மேலெழும் வாழ்க்கைச் செலவுகளைச் சமாளித்து குடும்பத்தைப் பராமரிப்பது என்று பலவித செலவுகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

**பலன் எதுவுமில்லை**

அவர்கள் சம்பளத்தில் ஒரு தொகை தொழிற்சங்கங்களுக்கு சந்தாப் பணமாக கட்டப்படுகிறது. தொழிலாளர்கள் கண்ட மிச்சம், அந்தப் பணத்தை வைத்துக் கொண்டு கட்சிகளும் தொழிற்சங்கங்களும் தமது ஆணவப் போர்களில் ஈடுபட்டுக் கொண்டு வருகின்றார்கள். அரசியல் முரண்பாடுகளில் உழன்று கொண்டு இருக்கின்றார்கள். மலையகக் கட்சிகள் பலவற்றின் தலைவர்கள் என் அன்புக்குரியவர்கள். ஆனால் அவர்களின் ஒற்றுமையற்ற செயற்பாடுகள் என் மனதை வருத்துகின்றது.

சகல கட்சிகளின் தலைவர்களும் ஒன்று சேர்ந்து தமது மக்கள் நலத்தை முன்னிட்டு தோட்ட முதலாளிமார்களுடனும் அரச பிரதிநிதிகளுடனும் பேச வேண்டும். அல்லது எல்லோரும் சேர்ந்து ஒரு மூத்த சட்டத்தரணியைப் பேச விட வேண்டும். பேச முதல் கடந்த பத்து வருட தோட்டக் கணக்குகளை எம்மவர் மிக நுணுக்கமாகப் பரிசீலிக்க வேண்டும்.

**கரவான கணக்குகள்**

உண்மையில் அவர்கள் ஆயிரம் ரூபா நாள் சம்பளத்தைக் கொடுக்க முடியாத நிலையில் உள்ளார்களா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். எனக்குத் தெரிந்த வரையில் கணக்குகள் கரவாகத் தயாரிக்கப்படுகின்றன. செலவுகளைப் பெருப்பித்து தொழிலாளர்களுக்குக் கொடுக்கப் பணமில்லை என்று கூறப்படுகிறது என்றே நம்பவேண்டியதாய் உள்ளது. மலையகத் தமிழர்களுக்கு உண்மையில் நாளாந்தம் ஆயிரத்து 200 ரூபாவாவது கொடுக்க வேண்டும். உண்மையில் கொடுப்பனவு செய்ய முதலாளிமாருக்குப் பணம் குறைவென்றால் அரச தலையிட்டு நிதியுதவிசெய்ய வேண்டும். நாட்டின் மொத்த வருமானத்துக்குப் பங்களிப்பவர்கள் தோட்டத் தொழிலாளர்கள். அவர்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தி தோட்டங்களின் பராமரிப்பை விருத்தி செய்ய அரசு முன்வர வேண்டும்.

**சந்தாப் பணத்தில் போராட்டம்**

எமது தொழிற்சங்கத் தலைவர்கள், கட்சித் தலைவர்கள் ஆகியோர் தமது தொழிற் சங்கங்களையும், கட்சிகளையும் முன்னேற்றுவதை மட்டும் பார்க்காமல் தோட்டத் தொழிலாளர்களின் நலனில் உண்மையான அக்கறை எடுக்க முன்வர வேண்டும். இல்லையேல் தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களுக்குச் சந்தாப்பணம் தாம் கட்டவேண்டிய அவசியமில்லை என்று அந்தப் பணத்தைத் தமது மாதாந்தச் செலவுகளுக்குப் பாவிக்க நேரிடும். இவ்வாறான ஒரு கோரிக்கை தற்போது கட்சிகள், தொழிற்சங்கங்கள் முன்னிலையில் முன்வைக்கப்பட்டுள்ளது என்று அறிகின்றேன்.

மலையகத் தொழிற்சங்கங்கள், கட்சிகள் ஆகியன தமது தொழிலாளர்கள் நாளாந்தம் படும் பாட்டை சித்திரித்துக் காட்ட வேண்டும். குறும் படங்கள் போன்றவை தயாரித்து அரசுக்கும் எம்மிடம் தேயிலை வாங்கும் நாட்டு மக்களுக்கும் அந்த நாடுகளின் அரசுக்கும் போட்டுக் காட்ட வேண்டும். வெறும் தேயிலை விற்பனைப் பரப்புரையாக அமையாது. அவை மக்களின் நாளாந்த அல்லல்களை எடுத்துக் காட்டுவதாய் அமைய வேண்டும். இவ்வாறான இன்னல்களில், இடர்களில் சிக்கி வாழும் எமது மக்களுக்கு நாளொன்றுக்கு ஆயிரம் ரூபா போதுமா என்ற கேள்விக்குப் பதில் கோர வேண்டும்.

**பாதைகள் வேறானவை**

வடகிழக்கு மாகாண மக்களின் குறைகள் அடிப்படையில் அரசியல் சார்ந்தது. உரிமைகள் சார்ந்தது. உரித்துக்கள் சார்ந்தது. அதற்காகப் பொருளாதாரம் சார்ந்ததில்லை என்று கூறவரவில்லை. ஆனால் மலையகத் தமிழ் மக்களின் குறைகள் பெரும்பாலும் பொருளாதாரமே சார்ந்தது. வடகிழக்கு மாகாண மக்களின் உரிமைகள் கோரிப் பயணிப்பது ஒரு பாதை. மலையக மக்களின் பொருளாதார விருத்தி நோக்கிப் பயணிப்பது பிறிதொரு பாதை. ஆகவே மலையக மக்கள் மீது எமக்குக் கரிசனை இல்லை என்று கூறமுடியாது. தேவை ஏற்படும் போது எமது கருத்துக்களை இது போல் பகிர்ந்து கொள்வோம்.

மலையகத் தொழிலாளர்கள் சார்பில் குரல் கொடுக்க நாம் தயாராக உள்ளோம். ஆனால் குரல் கொடுத்தால் மலையகக் கட்சித் தலைவர்களும் தொழிற் சங்கத் தலைவர்களும் கூறுவார்கள் 'உமக்கேன் இவ்வளவு கரிசனை?' என்று. 'விக்னேஸ்வரன் மலையகத் தமிழ் மக்களின் விடயங்களில் அநாவசியமாக உள்ளிடுகின்றார். அவர் மலையகத்தில் தமது கட்சியைப் பிரபல்யப்படுத்தப்பார்க்கின்றாரோ' என்றெல்லாம் கேள்விகள் எழுப்புவார்கள். இதனால்த்தான் நாங்கள் எங்கள் கருத்துக்களை வெளியிடாது அவர்கள் மீது அனுதாபத்துடன் பயணிக்கின்றோம்.

வருங்காலத்தில் தோட்டத் தமிழ்த் தொழிலாளர்கள் தொடர்ந்து கொழுந்து பறிப்பார்கள் என்று எதிர்பார்ப்பது மடத்தனமானது என்று நான் கருதுகின்றேன். இளைய தலைமுறையினர் படித்து முன்னேறத் தலைப்பட்டுள்ளார்கள். தோட்டத் தொழிலாளர்களின் தற்போதைய சம்பளம் மற்றவர்களை ஈர்க்காதது அவர்கள் வேறு தொழில்களை நாடிச் செல்ல ஒரு காரணம் எனலாம். சொகுசு வாழ்க்கையை எமது இளம் சந்ததியினர் நாடுவது மற்றொரு காரணம் எனலாம். தொடர்ந்து தோட்டத் தொழிலாளர்களை வறுமையின் விளிம்பில் வைத்திருந்து வருவது எத்தகைய எதிர்காலப் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அத்துடன் தற்போது தோட்ட நிர்வாகத்தினர் நீண்டகாலத் திட்டங்களுக்கு அமைய நடக்காது கிடைத்ததைச் சுருட்டிக்கொள்ளத் தலைப்படுகின்றார்கள் என்று கேள்விப்படுகின்றோம். தேயிலைக்குப் பதில் வேறு பயிர்ச்செய்கைகளில் நாட்டம் காட்ட முன்வந்திருப்பதும் தெரிய வருகின்றது. தோட்டத் தொழிலாளரின் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் நீண்டகால திட்டங்களைத் தீட்டி மக்கள் நலம் கருதி நடந்து கொள்வது அவசியம் என்று, தெரிவித்துள்ளார் விக்னேஸ்வரன்.

## ஆசிரியருக்கான கடிதம்

# 2019ஆம் ஆண்டிலாவது தமிழர்களுக்கு விடிவை ஏற்படுத்துமென எதிர்பார்ப்போம்

2018ஆம் ஆண்டு கழிந்துபோக புத்தாண்டாக 2019 மலர்ந்துள்ளது. கடந்த ஆண்டைப் பொறுத்தவரையில் தமிழர்களுக்கு விடிவு கிடைக்காத ஆண்டாகவே கழிந்து விட்டது.

கடந்த ஆண்டு புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டு தமக்கு நிரந்தரமான அரசியல்தீர்வு கிடைத்துவிடுமென அவர்கள் நம்பியிருந்தனர். கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் இதுதொடர்பான நம்பிக்கையை அடிக்கடி வெளிப்படுத்தி வந்தார்.

ஆனால் எதுவுமே நடக்கவில்லை. தமிழர்கள் மீண்டும் ஒரு தடவை ஏமாற்றப்பட்டனர். அரசியல் குழப்பங்களால் முழுநாடும் கலங்கி நிற்க அரசியல்வாதிகள் வழக்கம்போன்று அரசியல் சித்து விளையாட்டுக்களில் ஈடுபட்டனர். அரச தலைவர் எடுத்த அதிரடி நடவடிக்கைகளுக்கு உயர்நீதி மன்றம் ஆப்பு வைக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது. தற்போது சம்பந்தனிடமிருந்து எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பறித்தெடுப்பதற்கான முயற்சிகளும் இடம்பெற்று வருகின்றன. அதைவிட புதிய அரசமைப்புத் தொடர்பாகத் தென்பகுதியி லிருந்து வெளிவருகின்ற செய்திகள் தமிழர்களுக்கு உவப்பானதாகத் தெரியவில்லை.

வடக்கு மக்கள் நீண்டகாலமாக எதிர்பார்த்த வடக்கு மாகாண சபையின் ஆயுள்காலம் கடந்த ஆண்டின் பிற்பகுதியில் முடிவடைந்துள்ளது. ஆனால் செயற்பாடு தொடர்பாக மக்கள் திருப்தி யடையவில்லை என்பதை ஒப்புக் கொண்டேயாக வேண்டும். தற்போது தமிழர்கள் ஆளுக்கொரு கட்சியை அமைத்து பிளவுபட்ட நிலையில் காணப்படுகின்றனர். இதனால் ஆட்சியில் இருப்பவர்கள் தமிழர்களை இலகுவாக ஏமாற்ற முடிகின்றது. நடப்பு ஆண்டாவது அவர்களின் துயரங்களுக்கு விடிவைத் தருகின்ற ஆண்டாக அமையுமென எதிர்பார்ப்போம்.

*மா.சுந்தரலிங்கம், காரைநகர்.*

**வாசகர்களே!**

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகி றீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்படாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

## வர்ணம் தீட்டுவோம்



# இறைவன் இருக்கும் இடம்

ஓர்ஊரில்ஒருஆன்மிகப்பெரியவர்இருந்தார். அவர்பக்கத்துஊர்களுக்குச்சென்று அடிக்கடிஆன்மிகச்சொற்பொழிவுகளை நிகழ்த்துவார். சில வேளைகளில் நடைபெறும் பூசை வழிபாடுகளிலும் பங்குபற்றுவார்.

ஒருநாள் மாலை நான்கு மணி அந்தப் பெரியவர் பல இறை அடியவர்கள் சூழ அடுத்த ஊருக்கு வீதி வழியே நடந்து சென்று கொண்டிருந்தார். வழியில் ஏராளமான அடியவர்கள்எதிரே வந்துபெரியவரை வணங்கி ஆசீர்வாதம் வாங்கிச் சென்று கொண்டிருந்தனர்.

அப்போதுஅந்தவீதியின்அருகில்இருந்த சிறிய வெளியில் சுமார் 10 வயதுக்குட்பட்ட பத்துப் பதினைந்து சிறுவர்கள், குழந்தைகள்விளையாடிக்கொண்டிருந்தன. அவர்கள். அணிந்திருந்தசட்டைகள் எல்லாம் அழுக்காகவும் கிழிசல்கள் நிறைந்ததாகவும் இருந்தன. ஒரு சில குழந்தைகளின் உடலில் ஆடைகள் எதுவும் இல்லை. பிறந்த மேனியாகக் காணப்பட்டனர். அந்தக்குழந்தைகளில் பரிதாப நிலைகளைப் பார்த்த அவரால் மேற்கொண்டு நடக்க முடியவில்லை. அங்கேயே வீதியின் ஓரமாக நின்று விட்டார்.

இவர் செயலைப் பார்த்த அவரது உதவியாளர் அவருக்கு மேற்கொண்டு நடக்க முடியாது போய்விட்டதோ? ஏதாவது நோய் நொடியோ எனப் பதறி அவரிடம் வந்துஅவர்அங்கேதரித்துநிற்பதற்கான காரணத்தை மெதுவாக வினவினார்.

“அப்படி ஏதும் இல்லை என்று பதிலளித்த பெரியவர் உதவியாளரின் காதோடு காதாக ஏதோ சொல்லி அனுப்பினார். உதவியாளரும்இன்னும்சிலரும்அங்கிருந்துவேகமாகப்புறப்பட்டுவந்தவழியே திரும்பிப் போயினர்.

அவர்கள் போன பின்னர் பெரியவர் அந்தச்சிறுவர்களையும்குழந்தைகளையும் அன்புடன் தனது அருகில் அழைத்து அவர்களைப் பாடச் சொல்லிக் கேட்டுக் கொண்டிருந்தார்.

நேரம் மாலை ஆறு ஆகியது. உதவியாளரும்அவர்கூடப்போனவர்களும்நிறையத் துணி மூடைகளுடன் வந்து சேர்ந்தனர்.

உடனே பெரியவர் அவற்றையெல்லாம் எடுத்து ஒவ்வொரு குழந்தைக்கும் கொடுத்தார். அந்தப் பிள்ளைகளும் மிகவும்உற்சாகத்தோடுஅவற்றைஅணிந்து கொண்டு மிக மகிழ்ச்சியாக இருந்தனர். இந்த நிலையில் உதவியாளர் உட்பட பெரியவரோடு கூட வந்தவர்கள் தவிப்போடுகாணப்பட்டனர். பெரியவர்சிறுவர்களுடன் பேசிக் கொண்டே இருந்தார். சிறிது வேளையில் உதவியாளர் பெரியவரிடத்தில் போய் அவரை அணுகி “ஐயா பெரியவரேசீக்கிரம்புறப்பட்டால்நல்லது. பக்கத்து ஊரில் பூசை இருக்கிறதே... என்று இழுத்தார்.

“பூசையா? அதுதான் இங்கேயே ஆகிவிட்டதே. இந்த ஏழைக்குழந்தைகளுக்கு ஆடைகள் கொடுத்தோமே அதுதான் பூசை.

இதுபோதும் என்று கூறி எழுந்து அந்தச் சிறுவர்களிடம் விடை பெற்று வந்த வழியே திரும்பி நடக்கத் தொடங்கினார் அந்தப்பெரியவர்.

# பாலைவன கப்பல் ‘ஒட்டகம்’

பாலைவனத்தில் வசிப்பதற்கு ஏற்றவாறு ஒட்டகத்துக்கு தகவமைப்பை வழங்கியிருக்கிறது இயற்கை. திமில், நீண்டஉறுதியானகால்கள், நீளமான முடி, சிறப்பு இமைகள் போன்றவை ஒட்டகம் பாலைவனத்தில் வாழ்வதற்கு உதவி செய்கின்றன.

உணவைக் கொழுப்பாக மாற்றி திமிலில் சேமித்து வைப்பதால், உணவு கிடைக்காதகாலத்தில்திமிலில்இருந்து ஆற்றலைப் பெற்றுக்கொள்கிறது. இரவு நேரத்தில் பாலைவனக் குளிரைச் சமாளிக்க முடி உதவுகிறது. நீண்டமெல்லியகால்கள்பாலைவன மணலில் எளிதாகச் செல்வதற்கு ஏற்றாற்போல் அமைந்திருக்கின்றன.

பாலைவனப் புயலில் தூசிகள் நுழையாதபடி மூக்கில் இருக்கும் முடிகள் பாதுகாக்கின்றன. கண்களுக்குள் தூசியும்மணலும்செல்லாபடிமூன்று இமைகள்காக்கின்றன. மிகமெல்லிய இமைகள்வழியேஒட்டகத்தால்பார்க்கவும் முடியும். எவ்வளவு மோசமான மணல் புயலாக இருந்தாலும் இமைகள் மணலைத் தடுத்துவிடுகின்றன.

ஒவ்வொரு காலிலும் இருக்கும் இரண்டுவிரல்களில் உள்ள நகங்கள் பாதங்களைப் பாதுகாக்கின்றன. இத்தனை சிறப்புகள் இருப்பதால்தான் ஒட்டகத்தை, 'பாலைவனக் கப்பல்' என்று அழைக்கிறார்கள்

## வாழ்வில் சிறந்திட ....

வெற்றிக்கும்தோல்விக்கும்சிறுவித்தியாசம். கடமையைச் செய்தால் அது வெற்றி. கடமைக்குச் செய்தால் அது தோல்வி.
*மாவீரன் அலெக்சாண்டர்*

முயற்சி இல்லை என்றால் உன்னால் வெற்றிபெற முடியாது. முயற்சி இருந்தால் உன்னால் தோற்க முடியாது
*ஏ.பி.ஜெ. அப்துல்கலாம்*

தன் மீது விழும் ஒவ்வோர் அடியும் தன்னை ஒரு சிற்பம் ஆக்கும் என்று கல்லுக்குத் தெரியாது
*ஜென்ஸ்டீன்*

உலகம் எப்பொழுதும் பளபளப்பைக் கண்டு ஏமாறுகிறது
*ஷேக்ஸ்பியர்*

உன்னை ஒருவர் தாழ்த்திப் பேசும் போது ஊமையாயிரு. உயர்த்திப் பேசும் போது செவிடனாய் இரு. வாழ்வில் எளிதில் வெற்றி பெறுவாய்
*விவேகானந்தர்*

நீராவி போன்றது புகழ் அது வந்த வேகத்தில் ஆவியாகிவிடும்
*ஆபிரகாம் லிங்கன்*

மரியாதையாகக் கேட்டால் கோட்டைகளும் உனக்கு வழிவிடும்
*செனிகா*





# பெலாரஸ்



1. கிழக்கு ஐரோப்பாவில் உள்ள நாடு. சோவியத் ரஷ்யாவின் பிடியில் நீண்டகாலம் இருந்தது.
2. இந்த நாட்டின் தலைநகர் மின்ஸ்க். வரலாற்றில் இதுவரை 18 தடவை அழிந்து, மீண்டும் உயிர்த்தெழுந்த நகரம். அதனால் இந்த நகரத்தை 'ஹீரோ சிட்டி' என்று அழைக்கிறார்கள்.
3. இரண்டாம் உலகப் போரில் தனது மூன்றில் ஒரு பங்கு மக்களை இழந்த நாடு.
4. 1991, ஆகஸ்ட் 25 அன்று ரஷ்யாவிடமிருந்து சுதந்திரம் பெற்றது.
5. 1994ஆம்ஆண்டுமுதல்இன்றுவரைஅலெக்சாண்டர்லுகாசென்கோ, இந்தநாட்டின் குடியரசுத் தலைவராக இருக்கிறார்.
6. ஐரோப்பிய எருது இந்தநாட்டில்தான் அதிகம். இதுவே இந்தநாட்டின் தேசிய விலங்கு.
7. ஐஸ் ஹாக்கி, சைக்கிள் முக்கியமான விளையாட்டுகள்.
8. இந்தநாட்டைச்சேர்ந்த சிவெத்லானா அலெக்சியேவிச் இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்ற பெண் எழுத்தாளர்.
9. மே 9 தேசிய விடுமுறை. இரண்டாம் உலகப் போரில் ஜேர்மானிய ராணுவம் இந்த நாட்டிலிருந்து பின்வாங்கிய தினம்.
10. உருளைக் கிழங்கு அதிகம் விளைவிக்கப்படுகிறது. சுமார் 300 வகையான உருளைக் கிழங்கு உணவு வகைகள் இங்கே பிரபலமானவை.

## வித்தியாசங்களைக் கண்டுபிடிப்போம்



# இன்று (03.01.2019) வியாழக்கிழமை

# மணிவிழாக் காணும் எங்கள் ஆசானை

Best Wishes

# மனமுவந்து வாழ்த்துகின்றோம்

Best Wishes



## திரு. சிதம்பரப்பிள்ளை

## மாணிக்கராஜா

Congratulations

(பிரதி கல்விப்பணிப்பாளர் -
நிர்வாகம் யாழ். கல்வி வலயம்)

(S.L.E.A.S, S.L.P.S - 1, B.A (Hons)
Dip.in.Edu, M.Ed, S.P.L.S - CANADA

சீர்முறை கல்வி தந்து சிறப்பாக எமையுயர்த்தி
பார்போற்ற வைத்திட்ட பண்புநிறை ஆசானே!
ஊர்காத்த மாணிக்க உத்தமத்து ராஜாவே
சேவையது முடிந்ததெனச் சிந்தையில் கொள்ளாதீர்
தேவையது பல உண்டு எம் மண்ணில்
சீர் சமயம் தமிழ் ஓங்க எம்மை வழி நடத்தி
சாதனைகள் பல படைத்து தங்கள் இனிய குடும்பத்துடன்
சீரும் சிறப்போடும் பல்லாண்டு காலம் வாழ்க

## பழைய மாணவர்

## கிளி/ கண்டாவளை மகாவித்தியாலயம்



**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

After A/L's

PLATINUM PARTNER No.1 BTEC Centre in Sri Lanka



BTEC HND

# Civil Engineering

WITH STRUCTURAL DESIGN
Leading to BEng (Hons)

20 வருடகால தொழிற்துறை சார்ந்த
உயர்கல்வித்துறையில் நம்பகமும். சிறப்புமிக்கதுமான
BCAS Campus உடன் இணைந்து UGC அங்கீகாரம்
கொண்ட UK பட்டப்படிப்புகளை தொடருங்கள்...

- நவீன கற்கை வசதிகளுடன் கூடிய பிரத்தியேக Civil Engineerig கற்கை நிலையத்தில் வழங்கப்படும் பாட நெறி.
- பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும் அனுபவமிக்க Civil Engineerig நிபுணர்களையும் கொண்ட முழுநேர விரிவுரையாளர்கள்.
- அங்கீகரிக்கப்பட்ட Laboratory களில் Material, Hydraulic, Soil நடை முறைப்பயிற்சிகள்.

Pearson
University of East London

MADHU 0777 102131
SANCHU 0777 692318

INTAKE NOW ON

BCAS Jaffna Campus,
#. 16, Point Pedro Road, Jaffna.

20 YEARS
ISO 9001:2008 CERTIFIED

021 221 9910 info@bcas.lk www.bcas.lk BCAS Ranked "Platinum Partner" No.1 once again

# மரண அறிவித்தல்கள்

தோற்றம் 03 . 04 . 1950



மறைவு 01 . 01 . 2019

## திருமதி நாகேஸ்வரி கந்தையா

*(பாப்பா)*

கோலாலம்பூர், மலேசியாவைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி கந்தையா (பாப்பா) கடந்த (01.01.2019) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும் நாகமுத்து கந்தையாவின் (இளைப்பாறிய அரச மின் இணைப்பாளர்) அன்பு மனைவியும் க. பிரதீபனின் அன்புத் தாயாரும் தயாந்தினியின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் பரமேஸ்வரி, இராஜேஸ்வரி, காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் பரமநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் தாரங்கி, கிருஸ்தீஸ் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2019) வியாழக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் கைதடி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கைதடி ஊரியான் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கைதடி தெற்கு, கைதடி.**
**077 650 7890,**
**077 691 3073**

தகவல்: **நா.கந்தையா (கணவன்)**
**க.பிரதீபன் (மகன்), பி.தயாந்தினி (மருமகள்)**

(CS 319/15/17)

தோற்றம் 14 . 09 . 1951



மறைவு 02 . 01 . 2019

## துரைராசா விஜயராசா (விசயன்)

*(திருநெல்வேலி வர்த்தகர்)*

ஆறுகால்மடத்தைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி பத்தமேனியை வசிப்பிடமாகவும் கொண்ட துரைராசா விஜயராசா (விசயன்) 02.01.2019 புதன்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைராசா கண்மணி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஆசைப்பிள்ளை செல்லம்மா தம்பதிகளின் மருமகனும் இரத்தினேஸ்வரியின்(தேவி) அன்புக் கணவரும் அகிலதாஸ், அருள்தாஸ், கரிசன், கோபிதா, சிந்துகஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜயலட்சுமி, தையல்நாயகி, நகுலேஸ்வரி காலஞ்சென்ற முருகன் மற்றும் இராஜேஸ்வரி, கௌரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற தயானந்தம் மற்றும் செல்வகுலேந்திரன், செல்வரத்தினம், செல்லத்துரை, பாஸ்கரன், பாலசிங்கம், பூபாலசிங்கம், துரைசிங்கம், தேவன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2019) வியாழக்கிழமை பிற்பகல் ஒருமணியளவல் ஆறுகால் மடத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்க எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றக் கொள்ளவும்.

**ஆறுகால்மடம்.**

(CS 22256)(14,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 538 6245 / 077 047 5737 / 077 172 3842**

**எங்கள் அன்பு நிறைந்த வாடிக்கையாளர்களே!**

எங்களிடம் அற்லஸ், சீபிறா, ஸ்கூல்மற், ரட்ணா, எல்லாக் கொப்பிகளுக்கும் 25% கழிவு வழங்கப்படுகிறது. அத்துடன் பாடப் புத்தகங்கள் உபகரணங்களுக்கும் 10% கழிவு வழங்கப்படும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறிய தருகின்றோம்.

A.C.D
**No. 212, 214, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

(C 8802/15/17)

**பெயர் மாற்ற அறிவித்தல்**

1 ஆம் வட்டாரம் நயினாதீவில் வசிக்கும் **மதியாபரணம் மசீலன்** ஆகிய நான் எனது பெயரை இன்று முதல்

**மதியாபரணம் மதிசீலன்**

என பெயர் மாற்றம் செய்ய உள்ளதை இத்தால் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருவதுடன் இன்றிலிருந்து சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என்பதை அறியத்தருகின்றேன்.

(cs 22260) (13.17)

**மதியாபரணம் மதிசீலன்**

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 22.11.2018 வியாழக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவி

## திருமதி கோணேஸ்வரன் சுநீதி

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (03.01.2019) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 05.01.2019 சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் மண்டபம் (மண்டைதீவு முதலாம் வட்டாரம்) நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பு கிடைக்காதவர்கள் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்.

**மண்டைதீவு,**
**முதலாம் வட்டாரம்.** (CS 22252) (14.17) **குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## திருமதி இந்திராணி பாலசுப்பிரணியம்



உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திராணி பாலசுப்பிரமணியம் 30.12.2018 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (மல்ரி ஒயில் உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - செல்லம்மா தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - இராசம்மா தம்பதியரின் மருமகளும், நளினி ஸ்ரீ (லண்டன்), நரேந்திரன் (கனடா), ஸ்ரீலலிதாம்பிகை, நரேந்திரதேவ் (லண்டன்), உதயபானு, உருத்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், சுதர்சன் (லண்டன்), தர்சினி (கனடா), கணேசமூர்த்தி (கிராம உத்தியோகத்தர் - பூநகரி), சுதாமதி (லண்டன்), நிர்மலகுமார் (உரிமையாளர் - கோபுரம் உற்பத்திகளும் விற்பனையும்) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, தேவராணி, இராசக்கோன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிரோன்மணி, தவகோபால், கமலாம்பிகை, காலஞ்சென்றவர்களான புனித வதி, பரராஜசேகரம், பாலச்சந்திரன் மற்றும் சரஸ்வதி, சிவபாக்கியவதி, பொன்மலர், தவமலர், சண்முகலிங்கம் ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற பஞ்சலிங்கம் மற்றும் நாகரத்தினம், சித்தானந்தபவானி, சொக்கலிங்கம், கந்தசாமி, சிவபாதசுந்தரம், விசுவலிங்கம், மதனகுமாரி ஆகியோரின் சகலியும், நிவாசன், லக்சிகா, யெஸ்வினி, பாலகன், பைரவி, அக்ஷயா, அரிசன், அஞ்சனன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2019) வியாழக்கிழமை முற்பகல் பத்துமணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் தெற்கு வேம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மல்ரி ஒயில்,**
**கே.கே.எஸ். வீதி, இணுவில்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

**021 224 1587**

(CS 22251) (13.17)



**முன்னேற்றத்திற்கு கைகொடுத்து**

உங்களுடன் முழுநாட்டையும் முன்னேற்ற
பாதைக்கிட்டுச் சென்றிட

கிராமமோ நகரமோ பயிர்நிலமோ
வேலைத்தளமோ
தன்னம்பிக்கையுடன் எழுந்திடும்
உங்களுக்கு பக்கபலம் தந்திடும்

**RDB வங்கி**

இப்போது பலதர சேவைகள் மற்றும் நாடளாவிய
பரந்த கிளைவலையமைப்புடன் உங்களுக்காகவே...

RDB
Empowering Sri Lankans

www.rdb.lk
011 2425262

அரச வங்கியின் உயர் பாதுகாப்புடனான சேமிப்பு / கடன் / அடகு / பட்டியல் செலுத்துதல் / வெளிநாட்டு பணபரிவர்த்தனை / ATM-CDM

## பணியாளர்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல நகைவியாபார நிலையத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

- கணக்கு சம்பந்தமான வேலை செய்வதற்கு (ஆண்/பெண்)
- கணக்கு உதவியாளர்கள் (ஆண்/பெண்)
- நகை விற்பனையாளர்கள் (ஆண்/பெண்)
- நகை விற்பனையில் உதவியாளர்கள் (ஆண்/பெண்)


கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். தேவை ஏற்படின் ஆண்களுக்கு தங்குமிட வசதி வழங்கப்படும். ஆர்வமுள்ளோர் சுயவிவரக்கோவையுடன் முற்பகல் 9.00 மணி தொடக்கம் 10.00 மணி வரையான நேரத்திற்குள் நேரில் வரவும். (C 8944/15/17)

**நியூ மைதிலி ஜூவலறிஸ்**
38, 40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
## பண்டத்தரிப்பு பட்டின உபஅலுவலகம்
## பண்டத்தரிப்பு
## ஆதனப்பெயர் மாற்ற அறிவித்தல்

**வட்டாரம் :- 04**
**உத்தேச ஆதன இல :- 55/6**
**வீதி :- சென் அன்ரனீஸ் வீதி**
**கிராம சேவையாளர் பிரிவு :- J/146 பண்டத்தரிப்பு**

வட்டாரம் 04. சென் அன்ரனீஸ் வீதி. உத்தேச ஆதன இல 55/6. இல் அமைந்துள்ளது. உறுதிப்படி வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம். வலிகாமம் மேற்கு (தற்போது வலிகாமம் தென்மேற்கு) பகுதி பண்டத்தரிப்பு கோவிற்பற்று பண்டத்தரிப்பு இறை J/146 கிராம சேவகர் பிரிவிலுள்ள **"இராமன் சீமா"** என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 1 குழி 03 கொண்ட இவ்வாதனம் சென் அன்ரனீஸ் வீதி பண்டத்தரிப்பைச் சேர்ந்த செபஸ்தி அந்தோனிப்பிள்ளையும் பெண் மெற்றில்டாவும் ஆகிய அவர்களால் அதே ஊரைச் சேர்ந்த மார்க்கண்டு ஆனந்தகுமாருக்கும் பெண் மொறின்றமிஜாவுக்கும் ஆகிய அவர்களுக்கு அறுதி உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் ப. இராசகுரு அவர்கள் முகதாவில் நிறைவேறிய 7577 ஆம் இலக்க 04.09.2010 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் தமக்குச் சொந்தம் என தெரியப்படுத்தி எமது பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள் ளனர். நில அளவையாளர் திரு K. ஆறுமுகம் அவர்களால் வரையப்பட்ட 3771 ஆம் இலக்க 28.02.2018 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ் ஆதனம் ஆனது **" இராமன் சீமா "** நிலப்பரப்பு 1 குழி 3 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரித்த திகதியிலிருந்து 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும், அவ்வாறு உரிமைகோராதவிடத்து குறித்த ஆதனமானது மார்க்கண்டு ஆனந்தகுமாருக்கும் பெண் மொறின்றமிஜாவுக்கும் எனும் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.




அ.ஜெயநேசன்
தவிசாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.

## குளிரான...

ணங்களில் அடுத்த சில நாள்களுக்கு குளிரான வானிலை நிலவும் என எதிர் பார்க்கப்படுகிறது. இரத்தினபுரி மாவட்டத்தில் சில தடவைகள் மழை பெய்வதற்கு வாய்ப்புள்ளது. மேல் மற்றும் ஊவா மாகாணங்களிலும் அம்பாறை, புத்தளம், கேகாலை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 கிலோ மீற்றர் வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மத்திய மாகாணத்திலும் இரத்தின புரி மாவட்டத்திலும் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான காலநிலை எதிர்பார்க்கப்படுகின்றது என்று இலங்கை வளிமண்டலத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-7)

**British College of Higher Studies**
BCHS
*Happy New Year*



யாழ் நகரில் 15 வருட காலத்திற்கும் மேலாக தரமான பாடநெறிகளை ஆரம்பித்தவர்களும் தொடர்ந்து வெற்றியாளர்களை உருவாக்கியவர்களுமான

**British College of Higher Studies இன்**
**2019 க்கான புதிய பாடநெறிகள்**

2019 January முதல் புதிய தொழில்நுட்ப வசதிகளுடன் வெளிநாடு செல்பவர்க்கான கற்கை நெறிகளான

- **IELTS Academic/General**
- **IELTS Life skills**

பாடநெறிகள் தனித்துவமான சேவையோடு வழங்குகிறது.

- Exam registration
- Extra paper activities
- Speaking practice with international upholders

**07.01.2019 ற்கு முதல் விண்ணப்பிப்பவர்க்கு விசேட சலுகை!!!**

**2019ஆம் வருடத்திற்கான புதியவகுப்புக்கள் ஆரம்பம்**
**சான்றிதழுடன் கூடிய பயிற்சி நெறிகள்**

- **Diploma in English**
- **Spoken English**
- **Diploma in Sinhala**
- **Spoken Sinhala**

✓ 2018 இல் O/L பரீட்சை எழுதியோர்
✓ 2018 இல் A/L பரீட்சை எழுதியோர்
✓ தொழில் தேடுபவர்கள்
✓ தொழில் புரிவோர் என அனைத்து வயதினருக்குமான பிரத்தியேக வகுப்புக்களும் ஆரம்பம்!!!
✓ வார நாட்கள் மற்றும் வார இறுதி நாள் வகுப்புகள்

2019 ல் A/L எழுதும் மாணவர்களுக்கான 10 வருட Past paper வகுப்புகள் இங்கேயே...
பல்கலைக்கழக அனுமதிக்கு ஆங்கில பாட சித்தியின் முக்கியத்துவம் அறிந்த உங்களுக்கென பிரத்தியேக வகுப்புகள்.
மேலும் உயர் தர பரீட்சையை தொடர்ந்து எம்மோடு இணைந்து மேற்குறிப்பிட்ட பயிற்சிநெறிகளையும் தொடர்வதற்கான அரிய வாய்ப்பு.


**SIP ABACUS**

**உங்கள் பிள்ளைகளின் எதிர்கால கல்விப் பெறுபேறுகளுக்கு தரமான அடித்தளம்**

- 5-12 வயது சிறுவர்களின் வேகமான கணித்தல், சிறந்த மனக்கணித, நுண்ணறிவு திறன் விருத்திக்கான மிகச்சிறந்த வழிகாட்டி.
- level 1 முடிவில் பரீட்சை level 2 முடிவில் பரீட்சை level 3 முடிவில் பரீட்சை என 8 level வரை பயிற்சிகளும் பரீட்சைகளும்
- உங்கள் பிள்ளைகளின் வளர்ச்சியை நீங்களே உணர்வீர்கள்
- இடையிடையே மாணவர்களின் தரத்தினை மேம்படுத்த மாவட்ட மட்ட நாடு தழுவிய போட்டிகள் பரிசில்கள் சான்றிதழ்கள்.

பதிவுகளுக்கு:- **British College of Higher Studies**
15, Sirambiyady lane, Jaffna.
(லங்கா சதொச மேல் மாடி)
**T.P: 021 222 4550**

## மணி விழா வாழ்த்து




முல்லைத்தீவு மாவட்ட,
துணுக்காய் பிரதேச செயலக
நிர்வாக கிராம அலுவலர்

### திரு.சிற்றம்பலம் சண்முகநாதன்

துணுக்காய் பிரதேசத்தில் 35 வருடங்களாக அரச சேவையாற்றியபோது வினைத்திறனாகச் செயற்பட்டதுடன், பல்வேறு சமூக சேவை நிறுவனங்கள், ஆலயங்கள் போன்றவற்றில் பொதுச் சேவைகள் புரிந்து 03.01.2019 இல் ஓய்வு பெறும் அவரை தனது ஓய்வு காலத்தில் வளங்கள் பல பெற்று மகிழ்வாகப் பல்லாண்டு காலம் வாழ்ந்து, எமது பிரதேசத்துக்கு மேலும் சமய சமூகப் பணிகளை ஆற்ற வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:–**

01. யோகபுரம் யோகாம்பிகை சமேத யோகபுரநாதர் ஆலய பரிபாலன சபை.
02. கல்விளான் அரசடி விநாயகர் ஆலய பரிபாலன சபை.
03. தேறாங்கண்டல் அதிசய முருகன் ஆலய பரிபாலன சபை.
04. புகழேந்தி நகர், ஸ்ரீ பாலவிநாயகர் ஆலய பரிபாலன சபை.
05. பாரதிநகர் ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய வழிபடுவோர் சபை.
06. மணிவிழா அமைப்புக் குழுவினர்.
07. அனிஞ்சியன்குளம் நரசிங்கவைரவர் ஆலயப் பரிபாலன சபை.
08. அனிஞ்சியன்குளம் ஸ்ரீசித்திவிநாயகர் ஆலயப் பரிபாலன சபை.

**மல்லாவி, துணுக்காய்ப் பிரதேசம்.**

பொருளியற் கல்லூரி | BARATHY
நாவலர் வீதி, யாழ்ப்பாணம். | கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். | சித்தன்கேணி
மூன்று இடங்களிலும்
A/L 2021
கலை, வர்த்தகம், தொழில்நுட்பம் ஜனவரி 6 [ஞாயிறு] காலை 8.00 மணி
A/L Day Class
ஜனவரி 7 [திங்கள்] காலை 7.00 மணி

## மாபிள்...

டில் கைது செய்யப்பட்டவர்கள் மாபிள் விளையாடிக் கொண்டிருந்தவர்களே இவ் வாறு தெரிவித்தார் சந்தேக நபர்களின் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத் தரணி. கொக்குவில் காந்திஜி சனசமூக நிலைய பகுதியில் அடாவடியில் ஈடுபடும் நோக்குடன் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை சுமார் 20க்கும் அதிகமான நவீன ரக ஈருருளிகளில் 40க்கும் அதிகமானவர் களைக் கொண்ட கும்பல், கொட் டன்கள், பொல்லுகளுடன் வந்தது. கும்பலை அந்தப் பகுதி இளைஞர் கள் ஒன்றிணைந்து விரட்டி யடித்த னர். இந்த விவகாரத்திலேயே குறித்த ஐவரும் கைது செய்யப்பட் டனர். இவர்கள் ஐவரும் யாழ்ப்பா ணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்னி லைப்படுத்தப்பட்டனர். இதன் போது சந்தேக நபர்களின் சார்பில் முன்னிலையான சட்டத்த ரணி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: "சந்தேநபர்கள் நால்வருக்கு சம்ப வத்துடன் எந்தத் தொடர்புமில்லை. இருவர் கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்பவர்கள். அவர்கள் மாபிள் விளையாடிக் கொண்டிருந் தனர். அந்த வேளை சிறப்பு அதிர டிப்படையினர் வந்து அவர்களைக் கைது செய்தனர். மற்றொருவர் சம்பவம் இடம்பெற்ற இடத்திலிருந்து சுமார் 100 மீற்றர் தூரத்தில் வசிப்பவர். அவர் வெற்றிலை வாங்குவதற்காக கடைக்குச் சென்றுவிட்டு வந்தார். அடாவடியில் ஈடுப வந்தவர்கள் தப்பி ஓடிவிட்டார்கள். அப்பா விகளையே பொலிஸார் கைது செய்துள்ள னர். எனவே சந்தேகநபர்களுக்கு மன்று பிணை வழங்கவேண்டும் - என்றார். 'புத் தாண்டு தினத்தில் பொதுமக்களை அச்சு றுத்தும் வகையில் செயற்பட்டுள்ளனர். பொதுமக்கள் ஒன்று திரண்டதால்தான் சந்தேகநபர்களும் அவர்களுடன் வந்தவர் களும் அடாவடியில் ஈடுபடவில்லை. இரண்டுபேர் பொதுமக்களால் பிடிக்கப்பட்ட வர்கள். மேலும் இருவர் தொடர்பில் சிறப்பு அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவ லின் அடிப்படையில் அவர்களால் கைது செய்யப்பட்டனர். மேலும் ஒருவரைப் பொலிஸார் கைது செய்தனர் என்று யாழ்ப் பாணம் பொலிஸார் பிணை விண்ணப்பத் துக்கு ஆட்சேபனை தெரிவித்தனர். வழக்கை ஆராய்ந்த நீதிவான் அந்தோனி சாமி பீற்றர்போல். சந்தேகநபர்கள் ஐவரை யும் எதிர்வரும் 14ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

(ம-37.8)

வேலையாள் தேவை (ஆண்)
Smart Mobile Shop இற்கு
T.P: 077 115 3412

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை பொது அறிவித்தல் - 2019

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் எல்லைக்குள் வசிக்கும் பொதுமக்கள் வியாபார வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மற்றும் அரச தனியார் நிறுவனங்களின் நிர்வாகிகளுக்குமான வேண்டுகோள்

| தொடர் இல | விடயம் | அறிவித்தல் |
|---|---|---|
| 1 | ஆதன வரி செலுத்துதல் | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின்141 முதல் 146 பிரிவுகளின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி மீள்மதிப்பீடு செய்யப்பட்ட அசைவற்ற ஆதனங்கள் தொடர்பான விபரங்கள் 02.12.2016ம் திகதிய இலங்கை வர்த்தமானப் பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பட்டு மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டதன் பிரகாரம் 2019ஆம் ஆண்டிற்கான ஆதன வரியை சுழிபுரம், சங்கானை, வட்டுக்கோட்டை, அராலி ஆகிய உப அலுவலகங்களிலும் செலுத்தி சபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வரியிறுப்பாளர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். மேலும்<br>1. ஜனவரி 31ம் திகதிக்கு முன்னர் வரி செலுத்துவோரிற்கு வருட மொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும்.<br>2. ஒவ்வொரு காலாண்டிற்குமுரிய வரியை அந்தக் காலாண்டின் முதல் மாத முடிவிற்குள் செலுத்துவோரிற்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும்.<br>3. குறித்தகாலாண்டிற்குள் அக்காலப்பகுதிக்கான கட்டணம் செலுத்தத்தவறின் தண்டப்பணமும் அறவிடப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன். |
| 2 | ஆதனப் பெயர் மாற்றம் செய்தல் | எமது சபையின் எல்லைக்குள் ஆதனங்களைக் கொள்வனவு செய்பவர்களும் ஏற்கனவே ஆதன உடமையினைக் கொண்டு எமது ஆதன இடாப்பில் பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளாதவர்களும் எமது உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். |
| 3 | பட வரைஞர்களைப் பதிவு செய்தல் | 2019ம் ஆண்டு படவரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2019ம் ஆண்டு ஜனவரி 31ம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளவும். புதுப்பித்துக் கொள்ளவும் தலைமை அலுவலகத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். |
| 4 | கட்டிட அனுமதியும் குடிபுகு சான்றிதழும் | 1. தங்களது ஆதனத்தில் புதிதாக கட்டிடங்கள் , மதில்கள் அமைப்பதாயின் அல்லது பழைய கட்டிடத்தினை திருத்துவதாயின் பிரதேச சபையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே கட்டிடங்கள் மதில்கள் அமைக்கப்பட வேண்டும்.<br>2. புதிய கட்டிடம் அமைப்பதற்கு அனுமதி பெற்றவர்கள் அனுமதி பெற்ற திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் வேலை பூர்த்தியடையாதுவிடின் கட்டிட அனுமதியைப் புதுப்பிக்கவேண்டும்.<br>3. அத்துடன் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டதும் பிரதேச சபை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து உரிய கட்டணத்தைச் செலுத்தி அமைவுச் சான்றிதழைப் பெற்றுக்கொண்ட பின்னரே கட்டிடத்தில் குடிபுகுதல் வேண்டும்.<br>4. சபை எல்லைக்குள் குழாய்க் கிணறுகள் அமைப்பவர்கள் சபையின் அனுமதி பெற்று அமைத்தல் வேண்டும்.<br>5. அனுமதியற்ற கட்டிடங்களுக்கு தண்டப்பணம் அறவீடு செய்யப்படும். |
| 5 | வியாபார அனுமதிப் பத்திரம் - 2019 | இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குப் பொருள்களை விநியோகிப்போர் இதுவரை வியாபார விண்ணப்பங்களைப் பெற்று பூர்த்தி செய்து சமர்ப்பிக்காவிடில் உரிய விண்ணப்பப்படிவத்தை சங்கானை, சுழிபுரம், வட்டுக்கோட்டை, அராலி ஆகிய உப அலுவலகங்களில் 2019ம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதிக்குள் பெற்று அதனைப் பூரணப்படுத்தி அவ்அவ் உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2019 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். 31.03.2019ம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன். |
| 6 | துவிச்சக்கர வண்டி மற்றும் மிருக உரிமம் | துவிச்சக்கர வண்டிகள் , வளர்ப்பு நாய்கள் வைத்திருப்போர் 31.03.2019ம் திகதிக்கு முன் அந்தந்த உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களைச் செலுத்தி 2019ம் ஆண்டுக்கான வாகன மிருக உரிமங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். |
| 7 | கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்தல் | சபை எல்லைக்குள் அலைந்து திரியும் கட்டாக்காலிகளை உரிமையாளர்கள் கட்டி வளர்க்க வேண்டும் என்பதோடு கட்டி வளர்க்காதுவிட்டால் சபையினால் பிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். |
| 8 | பொது சுகாதாரத்தினைப் பேணுதல் | அபிவிருத்தி செய்யப்படாத பற்றைகள் உள்ள காணிகள் துப்பரவு செய்யப்பட வேண்டும் என்பதுடன் உணவு கையாளும் நிலையப் பணியாளர்கள் மருத்துவப்பரிசோதனை மேற்கொண்டு அனுமதி பெற்றிருத்தல் வேண்டும். |
| 9 | திண்மக் கழிவுகளை அகற்றுதல் | திண்மக்கழிவுகள் பொது இடத்தில் கொட்டுதல் தடை செய்யப்படுவதோடு அவற்றை தமது இடங்களிலேயே சூழலுக்கு பாதிப்பற்ற வகையில் புதைத்தோ அல்லது எரித்தோ சுத்தம் பேணுமாறு வேண்டப்படுகின்றீர்கள். அவ்வாறு அகற்ற முடியாதுள்ள கழிவுப் பொருட்களில் தரம் பிரித்து பிரதேச சபை உப அலுவலகங்களில் தொடர்புகொண்டு அவற்றினை அகற்றிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். மேலும் நுளம்பு பெருக்கத்திற்கு ஏதுவாக சூழலை வைத்திருப்போர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன். |
| 10 | வீதி ஒழுங்கைப் பேணல் | வீதி ஒழுங்கை பேணி நடக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றது.வியாபார நிலையங்களிற்கு முன்னால் பாதசாரிகளின் போக்குவரத்திற்கு இடையூறாக பொருள்களை வெளியே வைத்து விற்பனை செய்வது காட்சிப்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களிற்கு அறியத்தருகின்றேன். சந்தைச் சுற்றாடலில் இருந்து 500 மீற்றர் சுற்று வட்டாரத்தில் கடல் உணவுகள் ,மரக்கறிகள் , இறைச்சிகள் என்பன விற்பது தடை செய்யப்பட்டுள்ளது. |
| 11 | நீர் வழங்கல் சேவை | பொதுமக்கள் மற்றும் வியாபார நிலையங்கள் அரச தனியார் நிறுவனங்கள் தமது விசேட நிகழ்வுகளிற்கு குடிநீர் தேவைப்படின் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கட்டணம் செலுத்தி குடிநீரைப் பெற்றுக்கொள்ள முடியும். |
| 12 | கனரக வாகன சேவை | என்ஜின் றோலர் (Engine Roller) மற்றும் பைக்கோ (JCB) வாடகைக்கு தேவைப்படுவோர் தலைமை அலுவலகத்தில் உரிய கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும். |
| 13 | சூழல் பாதுகாப்பு உரிமம் | சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டியோர் வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற்றுக்கொள்ளவும் எற்கனவே உரிமத்தினைப் பெற்றுக் கொண்டவர்கள் உரிமம் காலாவதியாகியிருப்பின் அதனைப் புதுப்பிக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுகொள்கின்றேன். வலுவிலுள்ள சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் இல்லாமல் மேற்குறிப்பிட்ட தொழில்களை நடத்தினால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடு தண்டப்பணமும் அறவிடப்படும். |
| 14 | விளம்பரங்களை அமைத்தல் காட்சிப்படுத்தல் | வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் நிர்வாகப் பிரிவிலுள்ள பொது வீதிகளின் இருமருங்கும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்கான கட்டணத்தை 31.01.2019 ம் திகதிக்கு முன் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இவ்வாறு அனுமதி பெறப்படாத சகல விளம்பரங்களும் உரிய நிலையங்களில் இருந்து 01.02.2019ம் திகதிக்குப் பின் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| 15 | தரகர் முறை நீக்கம் | எமது பிரதேச சபை எல்லைக்குள் சந்தைகளில் தரகர் மூலமான நடைமுறை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு சந்தைக் குத்தகையாளர் வேண்டப்படுகின்றனர். |

த.நடனேந்திரன்
தவிசாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேசசபை,
சுழிபுரம்.

(14.17)

03.01.2019 இல்
மணிவிழா நாயகனை
பாராட்டி வாழ்த்துகின்றோம்
உயர்திரு. சிதம்பரப்பிள்ளை
மாணிக்கராஜா
(பிரதிக்கல்விப்பணிப்பாளர். கல்விநிர்வாகம். யாழ்வலயம்)



பார்போற்றும் வித்தகரே !
சன்மார்க்க மகாவித்தியாலயம்
மிளிரச்செய்த மைந்தனே !
சான்றோர் புகழும் எழில் வண்ணனே !
இல்லை என்போருக்கு வழங்கும்
வள்ளலே !
உள்ளம் அறிந்து செயலாற்றும் வீரரே !
என்றும் உளமார வாழ்த்தும்
ஆசிரிய சகோதரிகள்.
செல்வி.ராதாவைத்திலிங்கம்
(ஓய்வுநிலை பிரதி அதிபர்)
செல்வி மு.செல்வராணி
(ஓய்வு நிலை பிரதி அதிபர்)
Congratulations
(CS 22119)(4.17)

பெயர் மாற்றம்
அல்வாய் வடமத்தி கூத்தாடியம்பதி எனும் முகவரியை வசிப்பிடமாகக் கொண்ட ஸ்ரீகலா ஆகிய நான் இன்று 03.01.2019 முதல் எனது பெயரை ஸ்ரீகமலா எனப் பெயர் மாற்றம் செய்வதோடு. இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் என்று இத்தால் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.
ஸ்ரீகமலா

ராசி அதிர்ஷ்டம்
திகதி 02.01.2019 | வெற்றி வாரம் 2428 | வர்ணம் பச்சை
கன்னி
வெற்றி இலக்கங்கள் 02 18 24 57
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 27, 04, 912 /=
2019.01.04 ம் திகதி வெள்ளிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

DLB CAR PLUS
சீட்டிழுப்பு 91
சீட்டிழுப்பு திகதி 02.01.2019
வெற்றி இலக்கங்கள் 15 27 39 D வியாழன்
15
34, 62, 280/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>DL என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு 1919

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்:3130 திகதி:2019.01.02 புதன்கிழமை
SATURDAY FORTUNE
ஊதா
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து 13 23 37 62 A
போனஸ் இலக்கம் 02
அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட் 57,499,020/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 483
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2019.01.02
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 50,000,000/-
வெற்றி இலக்கங்கள் 13 42 43 66 K
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## சந்திரிகாவுடன்...

ஆளுநர்களையும் அரச தலைவர் மைத்திரிபால பதவி விலகப் பணித்தார் என்றும் தெரியவருகின்றது. இலங்கையின் 9 மாகாணங்களின் ஆளுநர்களையும் பதவி விலகுமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சில நாள்களுக்கு முன்னர் திடுதிடுப்பென பணிப்புரை விடுத்திருந்தார். இதற்கு அமைவாக 9 மாகாணங்களின் ஆளுநர்களும் தமது பதவி விலகல் கடிதங்களை அரச தலைவர் மைத்திரிபாலவுக்கு அனுப்பி வைத்துள்ளனர். ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட அரசியல் மாற்றத்தின் பின்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் நின்ற ஓர் அணியினர் அவருக்கு எதிராகத் திரும்பியுள்ளனர். முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுடனான கூட்டை அந்த அணியினர் ஏற்றுக் கொள்ளவில்லை. முன்னாள் அரச தலைவர் சந்திரிகாவும், மைத்திரிக்கு எதிரான அணியினருடன் இணைந்து கொண்டுள்ளார். இந்த நிலையில் கடந்த வாரம், வடக்கு மாகாண ஆளுநர் குரே முன்னாள் அரச தலைவர் சந்திரிகா இணைந்து கொழும்பில் கூட்டம் நடத்தியுள்ளனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அதிருப்தி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வேறு மாகாணங்களின் ஆளுநர்களும் கலந்து கொண்டுள்ளனர். இது தொடர்பான விவரங்கள் அரச தலைவரின் காதுக்குச் சென்றதும், ஆளுநர்களை பதவி விலகுமாறு பணித்துள்ளார் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

(ம-ஓ.5)

## கண்ணீர் அஞ்சலி



யாழ் பல்கலைக்கழக கல்வியற்றுறை பட்டப்பின் கல்வி டிப்ளோமா (முழுநேர) மாணவனும் கிளி /கிராஞ்சி G.T.M.S ஆசிரியருமாகிய

**முத்துக்குமார் கோபாலகிருஸ்ணன்**

அவர்களின் மறைவுச்செய்தி அறிந்து துயரில் பங்குகொள்வதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

(CS 21833) (14,17)

கல்வியற்றுறை
தலைவர், விரிவுரையாளர்கள், பட்டப்பின் கல்வி டிப்ளோமா 2018/2019 (முழு நேர) ஆசிரிய மாணவர்கள்.
யாழ் பல்கலைக்கழகம்.

## மரணஅறிவித்தல்

### திருமதி மஞ்சுளா விநாயகதாசன்

*(தாதி உத்தியோகத்தர், யாழ் போதனா வைத்தியசாலை)*



காரைநகரை வசிப்பிடமாகவும் பாரதி வீதி, கோண்டாவில் மேற்கை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மஞ்சுளா விநாயகதாசன் 02.01.2019 புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் தேவராசா தயாநிதி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான பொன்னையா இராசாத்தி தம்பதிகளின் மருமகளும் விநாயகதாசனின்(தங்கம்) அன்பு மனைவியும் லிபர்ணன்(யா/இந்துக்கல்லூரி), வர்ஷிகா(யா/வேம்படி ம.உ.பா) ஆகியோரின் பாசமிகு தாயும் புலேந்திரகுமார் (யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), தர்சினி - சச்சிதானந்தசிவம்(கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி), தயாரஞ்சி - சந்திரகுமார் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(03.01.2019) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(CS 22254) (14,17)

பாரதி வீதி,
கோண்டாவில் மேற்கு.
077 8711050

தகவல்: கணவர்
விநாயகதாசன் (தங்கம்)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 04 . 08 . 1981

மறைவு 27 . 12 . 2016

### லோகநாதன் சதீஸ்

திதி : 03.01.2019

நினைந்து நினைந்து
நெஞ்சம் உருகுதே
உந்தன் நினைவே

(CS 22238) (14,17)

நீர்வேலி வடக்கு,
இராஜவீதி.

அம்மா, அப்பா,
தம்பி, தங்கை, மருமக்கள்.

021 205 3537

## நினைவஞ்சலி

16ஆம் ஆண்டு



செல்லையா சிவக்கொழுந்து
(மார்க்கண்டு)

பிறப்பு: 24.04.1926 இறப்பு: 11.03.2003

முதலாம் ஆண்டு



சிவக்கொழுந்து சிவபாக்கியம்

பிறப்பு: 26.10.1932 இறப்பு: 16.12.2017

ஆண்டு பதினைந்துடன்
ஒன்று போனது பதினாறு ஆக
கண்ணீரைத் தந்துவிட்டு விண்ணோடு போனீர்கள்
ஆற்றொண்ணாத் துயரமது ஊற்றாகி ஓடுதைய்யா

"சிவபதி" தாவடி வடக்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்.

## மரணஅறிவித்தல்



தோற்றம் 08 . 10 . 1942

மறைவு 01 . 01 . 2019

### கணபதிப்பிள்ளை மகாலிங்கம்

மண்கும்பான் 4ஆம் வட்டாரம் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை மகாலிங்கம் 01.01.2019 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை இராசமணி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் சிவஞானம் தம்பதிகளின் மருமகனும் பரமேஸ்வரியின் பாசமிகு கணவரும் மனோகரன், சிறிகரன், தர்மகரன், சிவதர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும் மகேஸ்வரி, பராசக்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காந்திமதி, பத்மரஞ்சினி, குகன் ஆகியோரின் மாமனாரும் மதுஷன், மதுஷா, மயூரன், கபிலா, மதுரா, குகப்பிரியன், ஆதித்தன்,ரக் ஷனா, கலைப்பிரியன்,கவின் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான இராமச்சந்திரன், இராசகுலசிங்கம் மற்றும் பாக்கியவதி, புஸ்பராணி, ஞானசேகரம் காலஞ்சென்ற சிவநேசம் மற்றும் தேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2019) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப 10.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்லைப்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

4 ஆம் வட்டாரம்,
மண்கும்பான்.

(CS 22265) (14,17)

தகவல்:
குடும்பத்தினர்.

077 917 7276

## மரண அறிவித்தல்



தோற்றம் 04 . 02 . 1960

மறைவு 02 . 01 . 2019

### கிருஸ்ணன் செல்வக்குமார்

*(சிவலிங்கம்)*

சுழிபுரம் மத்தி, சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் வடக்கு, மடத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணன் செல்வக்குமார் நேற்று (02.01.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஸ்ணன் மற்றும் பூபதி தம்பதிகளின் மூத்த புத்திரனும் வசந்தகுமாரியின் (பிள்ளை) அன்புக் கணவரும் தர்சனா, கோகுலன், உசா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான ஆனந்தகுமார் (துங்கப்பழம்), கணேசகுமார் மற்றும் சிவகுமார் (ஜேர்மன்), கமலகுமாரி (குமாரி சுவிஸ்), வசந்தகுமாரி (வசந்தி - சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற வல்லிபுரம் மற்றும் இலட்சுமி தம்பதிகளின் பாசமிகு மருமகனும் நடராசா, காலஞ்சென்றவர்களான செல்வராசா (சின்னையா), சாந்தகுமாரி மற்றும் துரைராசா (ராசன்), ஜெயராசா (ரவி), இராசகுமார் (குமார் - சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.01.2019) வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வடக்கு, இருளன் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


மடத்தடி,
உரும்பிராய் வடக்கு.

(CS 23623/15/17)

தகவல்: குடும்பத்தினர்.
077 543 2559

## இது புதுசு

'USB லைட்' சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை 150 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.



## பனிக்காலப் பிரச்சினைகளைத் தடுப்போம்



மழைக்காலம் விடைபெற்று, பனிக்காலம்கைகுலுக்கத்தொடங்கிவிட்டது. பகல் நேரம் குறைந்து, இரவுப் பொழுதுகள் நீளமாகிக் கொண்டிருக்கின்றன.
வெப்பத்துக்குப்பழக்கப்பட்டநமது உடல்குளிரைச்சமாளிக்கத்தடுமாறும். காலநிலை மாறுவதால், சுவாசப் பிரச்னை, காய்ச்சல், தோல்வறட்சிபோன்றஉடல்நலப் பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பனிக்காலத்தில் நமது உடலை நோயின்றி பாதுகாப்பதற்கான வழிமுறைகள்...

1.தசைவலிகுளிர்காலத்தில்உடல்அதிக நேரம் அசைவின்றி இருக்கக்கூடாது. உடலுக்குக் கதகதப்பு அளிக்கும் சில உடற்பயிற்சிகள், நிமிர்வது, குனிவது போன்ற அசைவுகளைச் செய்து கொண்டே இருக்க வேண்டும். இதனால், குளிரினால் ஏற்படும் உடல் மற்றும்தசைபனிவலிநீங்கும்.

2. சூடான உணவு உணவை மிதமானச் சூட்டில் உண்ண வேண்டும். நேரம்தவறாமல்சாப்பிடுவதால்உடல் ஆற்றல்அதிகரிக்கஉதவும்.

3. உணவு முறை எளிதில் செரிக்கக் கூடிய பச்சைக் காய்கறிகள் மற்றும் நார்ச்சத்துமிகுந்தபீன்ஸ், முருங்கைக் காய் அதிக அளவில் சாப்பிடலாம். அசைவஉணவுகள்எளிதில்ஜீரணமாகாது என்பதால் அதனைக் குறைத்துக் கொள்வதுநல்லது.

4. தேநீர் தோல் நீக்கிய இஞ்சி, சிறிதளவு, புதினா, ஏலக்காய்ஆகியவற்றுடன் நாட்டுச் சர்க்கரை கலந்த இஞ்சி தேநீர் தயாரித்துஅடிக்கடிகுடிக்கலாம், அல்லது சுடுதண்ணீரும் குடிக்கலாம்.

5. சருமவறட்சி குளிக்கச்செல்லும்முன் தேங்காய்எண்ணெய் அல்லது ஆலிவ் எண்ணெய்யை உடலில் தேய்த்து மசாஜ் செய்தால், சருமம் வறண்டு போகாமல்ஆரோக்கியமாகஇருக்கும். கற்றாழையைக் கூழாக அரைத்து முகம் மற்றும் உடலில் தேய்த்தாலும் சருமம் மிருதுவாக இருக்கும். ஒவ்வாமை மற்றும் சுவாசப் பிரச்சினை உடையவர்கள் கற்றாழை க்ரீம் பயன்படுத்தலாம்.

6. வெந்நீர் குளியல் குளிர்காலத்தில் வெந்நீர்குளியல்நல்லது. அதிகசூடான தண்ணீரில், அதிக நேரம் குளித்தால் சருமத்தில் அதிக வ்றட்சி ஏற்படும். அதனால்வெதுவெதுப்பானசூட்டில்குளிக்க வேண்டும்.

7. தண்ணீர் பனிக்காலத்தில் தாகம் குறைவாக ஏற்படும். அதனால் தண்ணீர் குடிப்பதைத் தவிர்த்தால் உடலில் உள்ள நீர்ச்சத்து குறைந்து, வேறு பிரச்னைகளைஉருவாக்கும். எனவே, ஒரு நாளைக்கு மூன்று அல்லது நான்கு லிட்டர்வரைதண்ணீர்அவசியம்குடிக்க வேண்டும்.



## காலையில் எழுந்ததும் ஏன் தண்ணீர் குடிக்க வேண்டும்..?

இரவு குறைந்தது 7 மணி நேரம் தண்ணீர் உட்கொள்ளாமல் இருக்கிறோம். இதன் விளைவாக உடலில்நீரின்அளவுகுறைந்துஇருக்கும். வறண்ட தொண்டை இதற்கு ஆதாரம். இப்படி இருக்க, எழுந்தது நீர் பருகினால் சில நொடிகளில் இழந்த நீரை உடல் மீட்டுக்கொள்ளும்.

ஈரப்பதம் இல்லாமல் காய்ந்து வறண்ட உணவு குழாயில் உணவு பண்டங்கள் இறங்குவது சிறிது சிரமம்ஆகிவிடுகிறது. சிலமுறைகுமட்டல், அடைப்பு போன்றவை ஏற்படுவதுண்டு. இதற்கு தீர்வு, தண்ணீரை முதலில் குடிக்க வேண்டும். இது நீண்ட இடைவேளிக்குப்பிறகுஉணவுஎடுத்துக்கொள்ளும் போதும்பொருந்தும்.

காலையில் எழுந்திரிக்கும் போது உடலில் உஷ்ணம் இருப்பதை பலரும் சந்தித்திருப்பார்கள். உடலைகுளிர்விக்க ஒருடம்ளர் நீர் உதவும்.

பெரும்பாலானநேரங்களில்நீரின்தாகத்தைமனித மூளை பசி என்று புரிந்துக்கொள்ளும். இதனால் உடலில்சக்திகுறையாமல், உணவுதேவைப்படாத போது பசி எடுப்பதாக மாற்றாக கூறும் மூளைக்கு தீனி போட்டு போட்டு சில நாட்களில் 2 கிலோ எடையை பரிசாக பெற்றுக்கொள்கிறோம்.

உணவை அதிகமாக உட்கொள்ளமாட்டீர்கள். இதனால் அளவான உணவு மட்டும் சாப்பிட்டாலே வயிறு நிறைந்தது போல் தோன்றும். தானாகவே எடை குறையும்.

உடலில் உள்ள கெட்ட நீரை வெளியேற்றும். வயிற்றை அலசி அழுக்குகளை வெளியேற்றும்.

உடலின் செயல்பாட்டை 24% வரை அதிகரிக்க உதவும்.

சிறுநீரகத்தை சுத்தப்படுத்த உதவும்.
முகம் மாசு மரு இன்றி பளபளக்கும்.

வெறும் தண்ணீர் குடிக்க விருப்பம் இல்லையென்றால், எலுமிச்சை சாறு கலந்து குடிக்கலாம்.

## சத்து நிறைந்தசோள ரவை பிட்டு

**தேவையான பொருள்கள்**
சோளக்குருணை 1கப்
அரிசி மாவு 1/4 கப்
தேங்காய்த்துருவல் 3/4 கப்
பொடித்த வெல்லம் 3/4 கப்
நெயில் வறுத்துப் பொடித்த முந்திரி 3 டேபிள்ஸ்பூன்
வேர்க்கடலை 2 டேபிள்ஸ்பூன்
உப்பு 1சிட்டிகை
ஏலக்காய்தூள் 1/4 டீஸ்பூன்
நெய் சிறிது
**செய்முறை:**
முதலில் வெல்லத்தை சிறிது நீர் சேர்த்து கரைத்து வடிகட்டி கெட்டிப்பாகு செய்யவும்.
அரிசி மாவையும், சோளக்குருணையையும் சூடான கடாயில் லேசாக வறுத்து, உப்பு கரைத்த நீரைச் சிறிது சிறிதாக அதில்சேர்த்துபுட்டுமாவுபதத்தில்கலக்கிநன்கு அழுத்தி துணியால் 10 நிமிடம் மூடி வைக்கவும்.
பின் மாவுகளைக் கட்டியில்லாமல் உதிர்த்துப் பரப்பி ஆவியில் வேகவைக்கவும். கெட்டி வெல்லப்பாகில் தேங்காய்த்துருவல், ஏலக் காய்தூள் சேர்த்து கலந்து, வெந்த மாவில் சிறிது சிறி தாகப் போட்டுக் கலந்து நெய் சேர்த்துபிசறிகட்டியில்லாமல்உதிர்த்துமுந்திரி, வேர்க்கடலை, ஏலக்காய்தூள்சேர்த்துகலக்கவும். சுவையான சோள ரவைப் புட்டுதயார்.

## மார்ச் 5ஆம் திகதியன்று வரவு - செலவு திட்டம்

கொழும்பு, ஜன. 4
இந்த வருடத்துக்கான வரவு செலவுத் திட்டத்தை எதிர்வரும் மார்ச் மாதம் 5ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்க அமைச்சரவை நேற்று அனுமதிவழங்கியுள்ளது. இதற்கானகணக்குஅறிக்கை எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ள அமைச்சரவைக்கூட்டத்தில்முன்வைக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
கணக்கு அறிக்கையை எதிர்வரும் 8ஆம் திகதி சமர்ப்பிப்பதற்கு நிதி அமைச்சர் மங்கள சமரவீர தயாராகஇருந்ததார்எனவும்அரசதலைவர்மைத்திரிபால சிறிசேனவின் பதவி ஏற்பு நினைவு தினம் எதிர்வரும் 8ஆம் திகதி நடைபெறவுள்ளதனால் அதற்கு முன்னர் இந்த அறிக்கையை சமர்ப்பிக்குமாறு அரச தலைவர் உத்தரவிட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது. (ம)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் தவராசா கபிஷாந்
அன்னை மடியில் 25.04.1994
அரக்கர்களின் பிடியில் 03.01.2016
மூன்று ஆண்டுகள் ஓடி மறைந்ததையா
முழு மதியாய் நீ எமை பிரிந்தாயையா
உனது மரணத்தின் சதி
இன்னமும் எமக்கு புரியவில்லை !!!
என்றும் உம்
குடும்பத்தினர்.
18, ஈச்சங்காடு, அரியாலை, யாழ்ப்பாணம்.
076 971 5618/ 076 926 5338

## மரண அறிவித்தல்

## வீரகத்தி செல்வரத்தினம்

எழுதுமட்டுவாழைப் பிறப்பிடமாகவும் ஐயனார் கோவிலடி, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி செல்வரத்தினம் நேற்று (02.01.2019) புதன் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்து வீரகத்தி - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் திருவருட்செல்வி, திருச்சுதன், திருவிந்தன், திருஅமுதன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் நவரத்தினம், நாகேஸ்வரி, நாகராசா, சரஸ்வதி, துரைராசா, யோகராசா (சுவிஸ்), ஜீவராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற யோகராசா மற்றும் கதிரமலை, பேரின்பம், சிவபாக்கியம், பரிமளம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2019) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. ஒரு மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வேவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஐயனார் கோவிலடி,**
**கொடிகாமம்.**
**077 906 5056**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(C 8951/15/17)

## ஆயுதங்களுடன்...

கசியத் தகவல் கிடைத்தது. இதன்படி குறித்த நபரைக் கைது செய்யும் நோக்கில் புளியங்குளம் பொலிஸார் சிவில் உடையில் மறைந்திருந்தனர். எனினும் பொலிஸாரைக் கண்டநபர் தான்கொண்டு சென்ற ஆயுதங்களை வீதியில் போட்டுவிட்டு காட்டுக்குள் தப்பிசென்றுள்ளார். அவர் கைவிட்டுவிட்டுச் சென்ற கைக்குண்டு மற்றும் கைத்துப்பாக்கிகளைக் கைப்பற்றியதுடன் இராணுவத்தினருக்கும் தகவல் வழங்கப்பட்டது. புதூர் மற்றும் கனகராயன்குளம் பகுதிகளுக்கு அண்மித்த பிரதேசங்களில் சுமார் 600க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் வீதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதுடன், புதூர் காட்டுப் பகுதியிலும் தீவிர தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். தேடுதல் நடவடிக்கைக்கு மோப்ப நாய்களும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தப்பிச்சென்ற நபரை கைது செய்வதற்கும், மேலும் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையிலும் தேடுதல் தொடர்கிறது - என்றனர்.

மீட்கப்பட்ட நான்கு கைக்குண்டுகள், ஒரு கைத் துப்பாக்கி, துப்பாக்கி ரவைகள், துப்பாக்கியின் உறைகள், வேறுசில பொருள்கள் என்பன புளியங்குளம் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-110)

**காசாளர், வெயிட்டர் தேவை**

யாழ். நகரில் இயங்கும் குளிர்பான நிலையத்துக்கு காசாளர் மற்றும் வெயிட்டர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

உடன் தொடர்புகொள்ள:-

**078 495 7847**

**தவறிவிட்டது**

கோண்டாவில் சந்தியில் இருந்து கந்தர் மடம் சந்திக்கும் இடையே உள்ள பலாலி வீதியில் BFB 7039 எண்ணுடைய இலக்க தகடு தவறிவிட்டது. கண்டவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு - 076 5720629

## மரண அறிவித்தல்



மலர்வு 28 . 08 . 1939 — உதிர்வு 02 . 01 . 2019

### திருமதி மேரிஸ்ரெலா யேசுதாசன்

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் கல்கிசையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரிஸ்ரெலா யேசுதாசன் நேற்று (02.01.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பேதுருப்பிள்ளை - அன்னம்மா தம்பதிகளின் மூத்த புதல்வியும் வஸ்தியாம்பிள்ளை - நேசம்மா தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்றவர்களான யேசுதாசன், வென்சன்சிலாஸ், செல்வராணி, ராஜநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் யேசுதாசனின் அன்பு மனைவியும் குமார், சாம்சன், நிலானி ஆகியோரின் தாயாரும் தனுஷா, தேனுகா, றெஜி ஆகியோரின் பாசமிகு மாமியாரும்லொறினா, காருண்யா, அக்ஷயன், அஸ்விதா, மெல்வினா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசையில் உள்ள மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (03.01.2019) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் கல்கிசை சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: சாம்சன் (மகன்).
077 767 0 76

## மரண அறிவித்தல்



தோற்றம் 12 . 10 . 1936 — மறைவு 02 . 01 . 2019

### திருமதி இராசம்மா கிருஷ்ணர்

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையை (யாழ். இந்துக் கல்லூரி ஒழுங்கை) பிறப்பிடமாகவும் அச்சுவேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா கிருஷ்ணர் நேற்று (02.01.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணரின் அன்பு மனைவியும் அம்பிகை (அமுதா), அருணந்தா, காலஞ்சென்ற தயாளன், பாலேந்திரன் (பாபு - கல்வி அமைச்சு, வடக்கு மாகாணம்), சத்தியேந்திரன் (அல்பா இன்டஸ் ரீஸ் பிறைவேற் லிமிடெட், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சந்திரலிங்கம் (மேக்கன்டெண் செக்ரிடீஸ் சேவிஸ்), ரஞ்சிதம் (ஆசிரியை - யாழ். வீரசிங்கம் மத்திய கல்லூரி), கார்த்திகா (ஆசிரியை - யா/ மட்டுவில் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் தனுஷாந், நிரோஷிகா, அக்ஷரா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2019) வியாழக்கிழமை அச்சுவேலியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் அச்சுவேலி வடக்கு, வல்லை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.
077 056 4685 (பாபு)
077 8333 486 (சத்தி)

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### கந்தையா பாக்கியம்

நல்லூரைப் பிறப்பிடமாகவும் சென். பீறஜ்ஸ் லேன், ஆஸ்பத்திரி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பாக்கியம் நேற்று (02.01.2019) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - லக்சுமி தம்பதிகளின் அன்பு மகளும் தந்திராதேவி (கனடா), தர்மலக்சுமி, கமலாதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியை - யாழ். திருக்குடும்பக் கன்னியர்மடம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் பிரபாகரன் (கனடா), கலைச்செல்வி (கனடா), மயூரன் (கனடா), ஶ்ரீராம் (சிரேஷ்ட முகாமையாளர் - Softlogic life), ரவிச்சந்திரன் (கனடா), மோகனச்சந்திரன் (ஆஸ்திரேலியா), சிவச்சந்திரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கிருஷாந்த், கிருஷிகா, அரவிந், ஆதிஷா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2019) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11.30 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



பிறப்பு 24 . 09 . 1963 — இறப்பு 01 . 01 . 2019

### சண்முகம் நகுலேஸ்வரன்

*(அமுதசுரபி உணவக உரிமையாளர்)*

காரைநகர், களபூமி, விளானையைப் பிறப்பிடமாகவும் புதுரோட், காரைநகரை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் நகுலேஸ்வரன் (01.01.2019) செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - பரமேஸ்வரி தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான குல்சேகரம்பிள்ளை - அன்னம்மா தம்பதிகளின் மருமகனும் சந்திரமலரின் அன்புக் கணவரும் நளாயினி, நஜினி (லண்டன்), காலஞ்சென்ற சசிகரன், சசிறாஜ் (M.M.S. குருநாகல்) ஆகியோரின் அன்புத் தந்தையும் மகேஸ்வரி, சங்கரப்பிள்ளை (உழவு உயந்திர உரிமையாளர்), சாந்தினி (கொழும்பு), சாந்தமலர் (சுவிஸ்), நேசமலர் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும் இரத்தினராசா (அம்பாள் றேடர்ஸ் - யாழ்ப்பாணம்), சிவானந்தன் (நந்தன் - கொழும்பு), யோகேஸ்வரி, சிவலோகநாதன் (சுவிஸ்), சிவச்செல்வன் (லண்டன்), யோகேஸ்வரி (ஹொலன்ட்), பாசமலர், பூலோகமலர் ஆகியோரின் மைத்துனரும் ரவிசங்கர் (கண்ணன், Post office, Karainagar), மயூரன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் கார்த்திக், சஞ்ஜெய் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2019) வியாழக் கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது சகோதரி இரத்தினராசா மகேஸ்வரி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தில்லை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொன்னாவளை ஒழுங்கை,
கிளுவனை, களபூமி, காரைநகர்.
077 5117303, 077 147 6183

தகவல்: குடும்பத்தினர்.

## தாச்சிப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜன. 3
நவாலி தென்றல் விளையாட்டுக்கழகம் யாழ்ப்பாணம் மாவட்ட ரீதியாக நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றது. நடைபெற்று முடிந்த ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு:
தாவடி காளிஅம்பாள் விளையாட்டுக்கழக அணிக்கும், ஆலடி சிந்து விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் தாவடி காளிஅம்பாள் விளையாட்டுக்கழக அணி 9:1 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.
புதுமடம் வைகறை விளையாட்டுக்கழக அணிக்கும், மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக்கழக அணிக்கு இடையிலான ஆட்டத்தில் புதுமடம் வைகறை விளயாட்டுக்கழக அணி 8:1 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணிக்கும், மயிலிட்டி பாரதி விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சண்டிலிப்பாய் உதயசூரியன் விஃளயாட்டுக்கழக அணி 3:2 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.
சங்கானை இளங்கதிர் விளையாட்டுக்கழக அணிக்கும், சுதுமலை புவனேஸ்வரி விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தி;ல் சங்கனை இளங்கதிர் விளையாட்டுக் கழக அணி 4:2 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. (ஓ.23)

## சென். பீற்றஸ் வி.க. வெற்றி

யாழ்ப்பாணம், ஜன. 3
அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம் உழவர் விழாவை முன்னிட்டு நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் இடம்பெற்ற ஆட்டத்தில் சென்.பீற்றஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.
மாவத்தை விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் சென்.பீற்றஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மூளாய் வளர்மதி விளையாட்டுக்கழக அணி மோதியது.
ஆட்டத்தின் முதல் பாதியில் சென்.பீற்றஸ் விளையாட்டுக்கழக அணி சார்பாக 3 கோல்களை பதிவாகின. யோண், பகீதரன், நீகன் ஆகியோர் தலா ஓர் கோலினைப் பதிவு செய்தார்கள். இரண்டாம் பாதி ஆட்டத்தின் போது மூளாய் வளர்மதி விளையாட்டுக்கழக அணிக்கு தண்டனை உதை கிடைக்க அதனை நியாஸ் கோலாக்கினார். ஆட்ட நேர முடிவில் சென்.பீற்றஸ் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ஓ.23)



# 48 ஓட்டங்களால் வெற்றியை தனதாக்கியது

## மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம்



மட்டுவில் வளர்மதி அணி



மட்டுவில் மோகனதாஸ் அணி

சாவகச்சேரி, ஜன. 3
மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக அணிக்கும், மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில், 48 ஓட்டங்களால் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுள்ளது.
சாவகச்சேரி நியூ விண்டோஸ் விளையாட்டுக் கழகத்தினர் தென்மராட்சி பிரதேச விளையாட்டு கழகங்களுக்கு இடையில் துடுப்பாட்டச் சுற்றுப் போட்டி நடத்தினர். இதன் இறுதியாட்டம் கடந்த திங்கட்கிழமை மட்டுவில் வளர்மதி விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெற்றது.
இறுதிப் போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணியும், மட்டுவில் வளர்மதி விளையாட்டு கழக அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மோகனதாஸ் அணி களத்தடுப்பில் ஈடுபடுவதாக அறிவித்தது.
முதலில் துடுப்பெடுத்தாடிய வளர்மதி அணி நிர்ணயிக்கப்பட்ட 12 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றது. அணித்தலைவர் கஜீபன் அதிகபட்சமாக 59 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.
128 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மோகனதாஸ் அணி வளர்மதி பந்து வீச்சாளர்களின் துல்லியமான பந்து வீச்சில் 9.4 பந்துப் பரிமாற்றத்தில் 79 ஓட்டங்களை பெற்று அனைத்து இலக்குகளையும் இழந்து 48 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது.
தொடர் ஆட்ட நாயகனாக வளர்மதி அணியின் தலைவர் கஜீபனும், அதே அணியைச்; சேர்ந்த ந.அமலனும் தெரிவு செய்யப்பட்டனர். (ஓ.9)

## இன்றைய ஆட்டங்கள்

இலங்கைப் பாடசாலை துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 13 வயதுப் பிரிவினருக்கான பிரிவு 3 இற்கான துடுப்பாட்டத் தொடரில், அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது. இந்த ஆட்டம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இன்று இடம்பெறவுள்ளது.

❖❖ ❖❖ ❖❖ ❖❖ ❖❖

இலங்கைப் பாடசாலை துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 19 வயதுப் பிரிவினருக்கான பிரிவு 2 இற்கான துடுப்பாட்டத் தொடரில், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி மோதவுள்ளது. இந்த ஆட்டம் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இன்றும், நாளையும் இடம்பெறவுள்ளது.
மற்றொரு ஆட்டத்தில், யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து ஜெயவர்த்தனபுரக் கல்லூரி அணி மோதவுள்ளது. இந்த ஆட்டம் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

❖❖ ❖❖ ❖❖ ❖❖ ❖❖

நவாலி தென்றல் விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட.ரீதியாக நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றது. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை இரவு 7மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆனைக்கோட்டை சித்தி விநாயகர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஞானவைரவர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. இரவு 7.45 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் மறுமலர்சி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வசந்தசிறி விளையாட்டுக்கழக ஏ அணி மோதவுள்ளது

❖❖ ❖❖ ❖❖ ❖❖ ❖❖

வடக்கு மாகாண உடற்கல்வி டிப்ளேமா ஆசிரியர் சங்கம் நடத்தும் அழைக்கப்பட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கு இடையிலான அணிக்கு 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்ட தொடரின் காலிறுதியாட்டங்கள் இன்று வியாழக்கிழமை உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
மாலை 4 மணிக்கு இடம்பெறும் முதலாவது காலிறுதியாட்டத்தில் றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
மாலை 5மணிக்கு இடம்பெறும் இரண்டாவது காலிறுதியாட்டத்தில் உருத்திரபுரம் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ஓ5.23)

# கொலின்ஸ் எலைட் கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஜன. 3
கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய கொலின்ஸ் பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் கொலின்ஸ் எலைட் அணி கிண்ணத்தை வெற்றி கொண்டது.
கொலின்ஸ் பழைய மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற இறுதியாட்டத்தில் கொலின்ஸ் எலைட் அணியை எதிர்த்து கொலின்ஸ் ரைகர்ஸ் அணி மோதியது.
ஆட்டத்தின் முதல் பாதியில் இரண்டு அணிகளாலும் எந்தக் கோலையும் பெற்றுக் கொள்ளமுடியவில்லை. விறுப்பாக இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமானது.
6ஆவது நிமிடத்தில் கொலின்ஸ் எலைட் அணி சார்பாக முதலாவது கோல் பதிவானது. அந்த அணியின் வனயன் அந்தக் கோலை அடித்தார். ஆட்டம் விறுவிறுப்பாக நகரத் தொடங்கிய கணமே 9 ஆவது நிமிடத்தில் இரண்டாவது கோலை வனயன் மீண்டு பதிவு செய்தார். கொலின்ஸ் ரைகர்ஸ் அணி பதிலடியை 11ஆவது நிமிடத்தில் கொடுத்து. டினோஜன் முதலாவது கோலை தனது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தார். அந்தச் சூடு தணிய முன்னரே 15ஆவது நிமிடத்தில் மற்றொரு கோலை ரைகர்ஸ் அணியின் மணி பதிவு செய்தார். இரண்டாவது பாதி ஆட்டத்தின் 22 ஆவது நிமிடத்தில் எலைட் அணி சார்பில் வனயன் மூன்றாவது கோலைப் பதிவு செய்தார். ஆட்டம் எலைட் அணியின் பக்கமாகவே இருந்தது. இருப்பினும் ஆட்டம் முடிவடைவதற்கு இரண்டு நிமிடங்கள் இருக்கையில் ரைகர்ஸ் அணியின் கமல் மூன்றாவது கோலைப் பதிவு செய்து ஆட்டத்தை சமநிலையில் முடிவுக்கு கொண்டு வர உதவினார். வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்கு சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. அதில் 4:3 என்ற கோல் கணக்கில் எலைட் அணி வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.



ஆட்ட நாயகன், தொடர் ஆட்ட நாயகன், அதி கூடிய கோல் அடித்த வீரர் ஆகிய விருதுகளை எலைட் அணியின் வனயன் தட்டிச் சென்றார். சிறந்த கோல் காப்பாளருக்குரிய விருதை எலைட் அணியின் கோல் காப்பாளர் சங்கர் பெற்றுக் கொண்டார்.
வளர்ந்து வரும் வீரனுக்குரிய விருதை பிளஸ் றைடஸ் அணி வீரன் பவானந்தன் பெற்றுக் கொண்டார். சிறந்த பின்கள வீரருக்குரிய விருதை கொலின்ஸ் அணி வீரர் விஷ்ணுகாந் பெற்றுக் கொண்டார். சிறந்த முன்கள வீரருக்குரிய விருதை பிளஸ் றைடஸ் அணி வீரன் பிரதாப் தனதாக்கினார்.
நன்னடத்தை அணியாக கொலின்ஸ் ஜக்குவார் அணியும், லீக் முறையிலான ஆட்டத்தில் முதலாம் இடத்தை பெற்றுக் கொண்ட அணிக்கான விருதை பிளஸ் றைடஸ் அணியும் பெற்றுக் கொண்டன. (ஓ.23)

# ரி-20 தரவரிசையில் தகுதியிழந்தன இலங்கை - பங்களாதேஷ் அணிகள்

ரி-20 உலகக் கிண்ணப் போட்டியில் 2020ஆம் ஆண்டு நடைபெறும் உலகக் கிண்ணப் போட்டியில் சூப்பர் 12 சுற்றில் நேரடியாகப் பங்குபெறும் தகுதியை முன்னாள் சம்பியன் இலங்கையும், பங்களாதேஷூம் இழந்துவிட்டன என்று ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

2014ஆம் ஆண்டு ரி-20 உலகக் கிண்ண சம்பியன், 3 முறை இறுதிப்போட்டிவரை முன்னேறிய பெருமை கொண்டது இலங்கை அணி. ஆனால், இந்த முறை ஆப்கானிஸ்தான் அணி கூட நேரடியாகத் தகுதி பெற்றுவிட்டநிலையில், இலங்கை அணி தகுதிச் சுற்றில் விளையாடி முன்னேற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

ஐ.சி.சி. விதிமுறைப்படி, ரி-20 தர வரிசையில் முதல் 8 இடங்களில் இருக்கும் அணிகள் மட்டுமே நேரடியாகப் போட்டியில் பங்கேற்க முடியும். ஏனைய அணிகள் தகுதிச்சுற்றுகளில் விளையாட வேண்டும். அந்த வகையில் பாகிஸ்தான், இந்தியா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, நியூசிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள், ஆப்கானிஸ்தான் ஆகிய அணிகள் நேரடியாகப் பங்கேற்கின்றன. இலங்கையும், பங்களாதேஷூம் 9 மற்றும் 10 இடங்களில் இருப்பதால் அந்த அணிகள் நேரடியாகப் பங்கேற்கும் தகுதியை இழந்துவிட்டன.

2020 ரி-20 உலகக் கிண்ணப் போட்டியில் தகுதி பெறுவதற்கான தகுதிச்சுற்றுப் போட்டிகள் இந்த ஆண்டு ஒக்ரோபர் 18ஆம் திகதி முதல் நவம்பர் 15ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இது குறித்து இலங்கை அணியின் தலைவர் லசித் மலிங்க தெரிவிக்கையில்; இந்த முடிவு எங்களுக்கு வேதனை அளிக்கிறது. எங்களால் சூப்பர் 8 பிரிவில் நேரடியாகத் தகுதி பெறமுடியா விட்டாலும் கூட உலகக் கிண்ணத்தில் சிறப்பாகச் செயற்படுவோம் என்று நம்புகிறேன். ஒவ்வொரு அணியும் ஆண்டின் கடைசியில் முதல் 8 இடங்களில் இடம் பெறுவது அவசியம் என்று எண்ணுவது இயல்புதான். குழுப் பிரிவில் எங்களுக்கு மற்ற நாடுகளுடன் விளையாடுவதற்குக் கூடுதலாக வாய்ப்பு கிடைக்கும்" எனத் தெரிவித்தார்.

பங்களாதேஷ் அணியின் தலைவர் ஷகிப் அல் ஹசன் தெரிவிக்கையில்;

சமீபகாலமாக எங்களின் செயற்பாடுகள் எங்களுக்கு ஊக்கம் அளிக்கிறது. இந்த சவாலில் நாங்கள் சிறப்பாகச் செயற்பட்டு வெல்வோம் என்ற நம்பிக்கை உள்ளது. ஏன் நேரடியாகத் தகுதிபெற இயலவில்லை எனத் தெரியவில்லை. இன்னும் காலம் இருக்கிறது. நாங்கள் சிறப்பாகச் செயற்படுவோம் எனத் தெரிவித்தார்.



## சிட்னி டெஸ்ட்; இந்திய அணி அறிவிப்பு

ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி, நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதுவரை நடந்த 3 போட்டிகளில் இரண்டு போட்டிகளில் இந்திய அணி வெற்றி பெற்றுள்ள நிலையில் தொடரை கைப்பற்றி வரலாறு படைக்கும் முனைப்பில் இந்திய அணியும், தொடரை இழக்கக் கூடாது என்ற முனைப்பில் ஆஸ்ரேலிய அணியும் சிட்னியில் இன்று ஆரம்பமாகவுள்ள 4ஆவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் களமிறங்குகின்றன.

இந்த நிலையில் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இந்திய அணியின் 13 வீரர்களின் பெயர் பட்டியலை நேற்று வெளியிட்டது. இதில் இஷாந் சர்மா நீக்கப்பட்டு உமேஸ் யாதவ் இணைக்கப்பட்டுள்ளார். சிட்னி டெஸ்டுக்கு அஸ்வின் உடற்தகுதி பெறவில்லை என்று அணியின் செய்தித் தொடர்பாளர் அறிவித்திருந்தமை நிலையில், சிட்னி மைதானம் சுழற்பந்து வீச்சுக்கு சாதகமாக இருப்பதால் அஸ்வினின் பெயர் 13 பேர் கொண்ட பெயர் பட்டியிலில் இணைக்கப்பட்டிருக்கலாம். எனினும் களத்தில் 11 பேரில் அஸ்வின் இடம் பிடிப்பாரா என்பது நாளை போட்டி தொடங்குவதற்கு முன்புதான் முடிவு செய்யப்படும் என அணி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள இந்தியா அணி; விராட் கோக்லி, ரஹானே, கே.எல்.ராகுல், மயங்க் அகர்வால், புஜாரா, விஹாரி, ரிஷப் பன்ட், ஜடேஜா, குல்தீப் யாதவ், அஸ்வின், முகமது சமி, பும்ரா, உமேஷ் யாதவ் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.




## அதிக இலக்குகளை வீழ்த்தி ரஷித் கான் சாதனை

பன்னாட்டு ஒருநாள் போட்டிகளிலும், ரி-20 போட்டிகளிலும், ஐ.பி.எல், பிக் பாஷ், பாகிஸ்தான் லீக், பங்களாதேஷ் லீக் அனைத்திலும் முத்திரை பதித்த ரஷித் கான், ரி -20 போட்டிகளில் அதிக இலக்குகளை வீழ்த்திய சுழற்பந்து வீச்சாளர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.

142 ரி-20 போட்டிகளில் விளையாடியுள்ள அவர் 214 இலக்குகளைக் கைப்பற்றியுள்ளார். மிகக்குறைந்த வயதில் விரைவாக ஒருநாள் போட்டிகளில் 100 இலக்குகளை வீழ்த்திய வீரர் எனும் பெருமையையும், 52 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ள இவர் 118 இலக்குகளையும் வீழ்த்தியுள்ளார்.

2018ஆம் ஆண்டில் ரி-20 போட்டிகளில் அதிகமாக 96 இலக்குகளை வீழ்த்தி இருந்த இவர் தற்போது பிக்பாஷ் லீக் தொடரில் அடிலெய்ட் ஸ்டிரைக்கர்ஸ் அணியில் விளையாடி வருகிறார். இரண்டாவது இடத்தில் மேற்கிந்தியத் தீவுகளின் பிராவோ உள்ளார்.

ஆப்கானிஸ்தான் அணிக்காக 22 இலக்குகளையும், பிக்பாஷ் லீக் போட்டியில் 19 இலக்குகளையும், ஐ.பி.எல். போட்டியில் சன் ரைசர்ஸ் அணிக்காக 21 இலக்குகளையும், சசெக்ஸ் அணிக்காக 17 இலக்குகளையும், ஆப்கானிஸ்தான் லீக் போட்டியில் 10 இலக்குகளையும், ஜான்ஸி சூப்பர் லீக் போட்டியில் 7 இலக்குகளையும்ரஷித்கான் வீழ்த்தியுள்ளார்.

## இலங்கை-நியூசிலாந்து ஒருநாள் போட்டி இன்று

இலங்கை - நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான ஒருநாள் போட்டி இன்று மவுண்ட் மவுங்கானுயில் ஆரம்பமாகின்றது.

இலங்கை அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு இரண்டு டெஸ்ட் போட்டிகள், மூன்று ஒருநாள் போட்டிகள், ஒரு ரி-20 போட்டிகளில் விளையாடி வருகின்றன. இதில் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை நியூசிலாந்து அணி 1:0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இந்த நிலையில் 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் தொடர் இன்று ஆரம்பமாகின்றது. முதல் ஆட்டம் இன்று மவுண்ட் மவுங்கானுயில் பகல்இரவு ஆட்டமாக ஆரம்பமாகின்றது. டெஸ்ட் தொடரை இழந்த இலங்கை அணி ஒரு நாள் தொடரில் சிறப்பாக விளையாட வேண்டிய கட்டாயத்தில் களமிறங்குகின்றது. டெஸ்ட் தொடரை வென்றது போல் ஒருநாள் தொடரையும் வெல்லும் ஆர்வத்துடன் நியூசிலாந்து அணி களமிறங்குகின்றது.




## ராமாகந்த் அச்ரேக்கர் மும்பையில் காலமானார்

இந்திய அணிக்கும் உலக கிரிக்கெட்டுக்கும் முன்னணித் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கரை வளர்த்து உருவாக்கிக் கொடுத்த பயிற்சியாளரும் துரோணாச்சரியர் விருது பெற்றவருமான ராமாகந்த் அச்ரேக்கர் நேற்று அவரது 87ஆவது வ்யதில் மும்பையில் காலமானார்.

சச்சினை மட்டுமல்லாது பிரவீண் ஆம்ரே, வினோத் காம்ப்ளி, சமீர் டீகே போன்ற வீரர்கள் மற்றும் பல்வீந்தர் சிங் சாந்து ஆகியோரையும் உருவாக்கியவர் இவரே.

சச்சின் டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்ற போது அச்ரேக்கரின் பங்கை பெரிய அளவில் நெகிழ்ச்சியுடன் தனது கீச்சகத்தில் பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய கிரிக்கெட் அணி வீரர்களுக்கு அந்த நாட்டு தலைமை அமைச்சர் ஸ்காட் மாரிசன் தனது இல்லத்தில் புத்தாண்டு விருந்து அளித்திருந்தார். இதில் அணி வீரர்களும் அனைத்து ஊழியர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

A/L 2021 கணக்கீடு

Mr. Balakajen

KBK CENTRE

Sat, Sun 4 - 5 pm

ஆரம்பம் - 05.01.2019

Tue, Fri 5 - 6 pm

ஆரம்பம் - 04.01.2019

075 077 5660

---

மணமகள் அலங்கார வகுப்பு

26th Jan 2019 @ Gajan Wedding Hall

Prisanthi Make - up Artist Germany

076 271 3939

www.prishankar.com (CS 02963) (14.17)

---

கலை | வர்த்தகம் தொழில் நுட்பம்

# NEC

A/L 2021

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

ஆரம்பம்: 06.01.2019 காலை 9.00 மணி

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன

---

வர்த்தகப் பிரிவு

DMI JAFFNA

ஜனவரி-5 காலை - 9

A/L 2k21

கணக்கீடு D.Sam

பொருளியல் S.S. சிறி

வணிகக்கல்வி T.S. ரிஷி

---

# A/L பொருளியல் MCQ - ① ② & ③

முதல் நான்கு அலகுகளுக்குரியது

33 உப அலகுகள் & விடயத் தலைப்புகளில் ஒழுங்குபடுத்தப்பட்டது

1280 MCQs

2019 A/L புதிய மாதிரி வினாத்தாள் - அமைப்பு, புள்ளித்திட்டம், நோக்கங்கள், வினாவகைகள், பரீட்சை நுட்பங்கள், சிறப்புக் குறிப்புக்கள், வழிகாட்டல் குறிப்புக்கள் அடங்கியது

2015 A/L & 2016 A/L பரீட்சையில் 99 புள்ளிகளும்

2017 A/L & 2018 A/L பரீட்சையில் 100 புள்ளிகளும்

100/100

பெறவைத்த நூல்களின் ஆசிரியர் - வே. கருணாகரன்

ரூபா 480

* எல்லாப்புகழும் இறைவனுக்கே!

2019 பழைய பாடத்திட்டப் பரீட்சைக்குரிய வினாவிடை & MCQ நூல்களும்

பூபாலசிங்கம் புத்தகசாலை/ அன்னை புத்தகசாலை

---

# விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரி

இல63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 077 248 7774

## A/L தொழிநுட்பப் பிரிவு

வெற்றிகள் தொடர....

கல்வியாண்டு 2021, 2019 DAY

077 248 7774

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

05.01.2019 சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு

---

கலை, வர்த்தகம், தொழில் நுட்பம்

DMI JAFFNA

ஜனவரி-5 காலை - 9

DAY CLASS

---

எமது பரந்த கல்விச் சேவைக்கான கட்டமைப்பு

DMI Jaffna

- DMI A/L Education
  - DMI Commerce Unit
  - DMI Arts Unit
  - DMI Technology Unit
- DMI Computer Education
  - DMI Jaffna Head Office
  - DMI Savacheri Branch
  - DMI Neliyadi Branch
  - DMI Chunnakam Branch
  - DMI Kilinochchi Branch
  - DMI Sandilippai Branch

Official Facebook DMI Daniel

Official Facebook DMI Computer Education

---

A/L 2k21, 2k20, 2k19

DMI JAFFNA

ஊடகக்கற்கை K.V. நவநீதன்

---

விஷேட விலைகுறைப்பு

உரும்பிராய் கிழக்கு, கரந்தன் வீதி, ஊரெழுவில் இயங்கும் T.செல்வகுமார் ஆட்டிறைச்சிக் கடையில் (கிடாய் ஆடு) 1Kg இறைச்சி 1500/= க்கும் ஒரு பங்கு (2Kg) 3000/= க்கும் இன்று முதல் விற்பனை ஆகின்றது.

-077 986 0180

(CS 20044)(15/18)

---

தொழில் நுட்பப் பிரிவு

DMI JAFFNA

ஜனவரி-5 காலை-9

A/L 2k21

தொழில் நுட்பத்திற்கான விஞ்ஞானம்

- S. சசி
- A. தயா
- K. சுதா
- S.S. தயாபரம்

உயிர் முறைமைகள் தொழில் நுட்பம்

- K. சுதா
- M. றோய்
- K. கலைதீபன்

பொறியியல் தொழில் நுட்பம்

- A. தயா
- P. கயந்தன்
- S. குமணன்

---

## கண்ணீர் அஞ்சலி



24.12.2018 அன்று இறைபதமடைந்த எமது பாடசாலையின் ஆரம்பக்கல்வி ஆசிரியை

**திருமதி யாழினி ரஞ்சன்**

அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி புஸ்பநாதன் பத்மாவதி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச்சமூகம்
யா/ சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தியாலயம்,
சித்தன்கேணி.

(CS 22258) (4.17)

---

FALC FRENCH LANGUAGE CENTRE



# பிரெஞ்சு

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.

V. ஜெகன் (Trained in France- 2007)

40, பலாலி வீதி, அரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 05.01.19 சனி 10 மணி

181, பிரதான வீதி, நெல்லியடி. 0779 789 456 / 0762 669 614 ஆரம்பம் : 07.01.19 3.30pm

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1

IELTS, SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.

---

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

# af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.

www.ambafrancelk.org

021 222 8093, 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

---

அனைவருக்கும் இனிய புதுவருட வாழ்த்துக்கள்

நாளை முதல்




வடக்கு, கிழக்கு

| | |
|---|---|
| Chelva Jaffna. 10.30,2.30,6.30 pm [021 222 7973] | |
| Majestic Jaffna. 10.00,7.30,10.30pm [021 222 7712] | Raja 2 Jaffna. 10.30,7.00,9.30pm [021 222 7332] |
| Saru Cinema Point Pedro. 10.30,2.30,6.30pm [021 226 5000] | Shanthi Batticaloa. One show [065 222 3516] |
| Vasanthi Vavunia. One show (024 222 1410) | Nahams Chunnaham. 10.30,2.30,6.30 pm [0772 189 646] |

மற்றும் நாடெங்கிலும் உள்ள ஏனைய திரையரங்குகளிலும்

Distributed by: Cinema Entertainments (Pvt) Ltd (CEL)

---

## மரணஅறிவித்தல்



**நடராஜா நகுலேந்திரராஜா (சிவம்)**

யாழ்ப்பாணம், V.H.ஒழுங்கை, இருபாலையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நடராஜா நகுலேந்திரராஜா 31.12.2018 இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா நடராஜா நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும் கௌசலாதேவி, கமலாதேவி, கருணாதேவி, யோகேந்திரராஜா, புவனேந்திரராஜா, பவானி மற்றும் காமினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயரங்கநாதன், ஜெயராஜா, காலஞ்சென்ற பரராஜசிங்கம், ரதிராணி, கமலராணி, ஸ்ரீஸ்கந்தராஜா, சுதாகரன் ஆகியோரின் மைத்துனரும் ஜனரஞ்ஜனி நந்தகுமார், தட்ஷாயினி திலீபன், கிருத்திகன், ஆதித்தன், வைஷ்ணவி, சகானா, சந்தியா, சாதனா ஆகியோரின் அன்பு மாமாவும் நிலா, சாம்பவி, சங்கவி, சாகித்தியன், சாத்வீகன் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2019) வியாழக்கிழமை பி.ப ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை செக்கடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

V.H.லேன்,
இருபாலை, கோப்பாய்.

(CS 22231) (14.17)

தகவல்:
குடும்பத்தினர்.

---

# Techno World

தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் (SFT)

சக்தி (யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)
ராகவன் (யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி)
முருகநிரோஜன் (யா/வயாவிளான் ம.கல்லூரி)
மதுசுதன் (யாழ் பல்கலைக்கழகம்)

பொறியியல் தொழில்நுட்பவியல் (E-TEC)

அருண்குமார் (யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி)
ஜெகநாதன் (விரிவுரையாளர், தொழில்நுட்பக்கல்லூரி)
சிவாஜன் (தொழில்நுட்பக்கல்லூரி)

உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் (Bio - Tec)

திருக்குமரன் (நெல்லியடி மகா வித்தியாலயம்)
ஜெயந்தன்
பொன் சிவகுமார்

ICT

லவன் (உதவி விரிவுரையாளர், கணனி விஞ்ஞானம்)
உமாகாந்தன் BIT (யா/மத்திய கல்லூரி)

| | |
|---|---|
| புவியியல் | ஊடகக்கல்வி |
| ஜெனகன் (J.H.C) | கோணேஸ் |
| விவசாய விஞ்ஞானம் | பொருளியல் |
| சாரங்கன் | பிரதீபன் |
| கணிதம் | வணிகக்கல்வி |
| தயாளன் | தீசன் |
| சித்திரம் | கணக்கீடு |
| ஜெயந்தன் (J.H.C) | சுகிர்தன் |

077 017 5346

---

உதயன்

விளம்பர தொடர்புகளுக்கு

021 493 1111

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.01.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.